விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005


இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை 12 வியாழக்கிழமை (25.04.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 127

## ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்ட
# அவசரகால சட்டத்திற்கு
# பாராளுமன்றத்தில்
# ஏகமனதாக ஒப்புதல்



(கொழும்பு) அவசரகால சட்டம் வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நேற்று பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமையை அடிப்படையாக வைத்து ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசரகால சட்டத்தின் சரத்துக்கள் தொடர்பான விடயம் நேற்று பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே ஏகமனதாக இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது.(24-ம் பக்.)

அசாதாரண சூழ்நிலையால்

## யாழ் போதனாவில் தீவிர சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலைக்கு செல்லும் மக்கள் உள்ளே செல்லும் போது தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டு 24

சர்வகட்சி மாநாட்டுக்கு

## ஜனாதிபதி மைத்திரி இன்று அழைப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைமை மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு இன்று சர்வ கட்சி மாநாட்டினை கூட்டுவதற்கு 24

பாடசாலைக்கு முன்னால்

## அநுராதபுரத்தில் கைக்குண்டு மீட்பு

(அநுராதபுரம்)

அநுராதபுரம், ரம்பவே, கோனேவ பகுதியில் அமைந்துள்ள பாடசாலைக்கு முன்னால் வீதியோரத்திலிருந்து கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது. 24

தற்கொலைதாரிகள் இலங்கையர்கள்

## வெடிகுண்டுகள் அனைத்தும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டது

- உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்



(கொழும்பு)

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட பயங்கரவாத தற்கொலைத் தாக்குதலை நடத்திய 9 பேரில் 8 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் 24

## பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக முன்னாள் இராணுவத் தளபதி ரத்னாயக்க?



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்னாயக்க. 24

தற்கொலைதாரிகள் நன்கு படித்தவர்கள்

## மிகச்சிறந்த பொருளாதார வசதியோடு இருந்தவர்கள்

இராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்த்தன



(கொழும்பு)

நாட்டில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடந்த தாக்குதல்களில் ஈடுபட்ட பெரும்பாலானவர்கள் நன்கு படித்தவர்கள் மற்றும் நடுத்தர அல்லது உயர் நடுத்தர 24

வெள்ளவத்தை, புறக்கோட்டையில்

## சந்தேகத்திற்கிடமான முறையில் நிறுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் குண்டு வைத்து தகர்ப்பு

(கொழும்பு)



கொழும்பு புறக்கோட்டை ஐந்து லாம்புச் சந்தியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிள் ஒன்று குண்டு செயலிழக்கச் செய்யும் படையினரால் வெடிக்கச் 24

## தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புடன் கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லா தொடர்பு

### சபையில் சுமந்திரன் எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புடன் கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லாவுக்கு தொடர்பு இருப்பதாக பாராளுமன்றத்தில் எம்.ஏ.சுமந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டத்திற்கு முரணான வகையில் பொலிஸ் திணைக்களத்தை ஜனாதிபதி தனது மேற்பார்வையின் கீழ் வைத்திருந்தார் என எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பாராளுமன்றில் கருத்து தெரிவித்த அவர், 19வது திருத்தத்திற்கு பின்னர் ஜனாதிபதி சட்டம் மற்றும் ஒழுங்கினை பொறுப்பேற்க முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு 19வது திருத்த சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி ஒருவர் பாதுகாப்பு மகாவலி மற்றும் சுற்றாடல் அமைச்சு பதவியையே தன் கீழ் வைத்திருக்க முடியும் என்றும் அவர் கூறினார். 24

தற்கொலைத் தாக்குதல் தொடர்பில்

## இதுவரை 60 பேர் கைது

(கொழும்பு)

நாட்டில் மேற்கொள்ளப்பட்ட குண்டு வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 60 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். இந்நிலையில் கைது செய்யப்பட்ட 60 பேரில் 24

## ஹோட்டல்களில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்திய

### சகோதரர்களின் படம் வெளியாகியது





(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல்களில் கொழும்பில் நட்சத்திர ஹோட்டல்களான 24

## ஆராதனை வழிபாடுகள் முன்னரே முடிவடைந்ததால்

### கடைசி நேரத்தில் இலக்கை மாற்றிய மட்டக்களப்பு தற்கொலைக் குண்டுதாரி

(கொழும்பு)

மட்டக்களப்பு - சியோன் தேவாலயத்தில் குண்டுத் தாக்குதலை நடத்திய தற்கொலைக் குண்டுதாரி, முதலில் புனித மரியாள் தேவாலயத்தையே இலக்கு வைத்திருந்தார் என்றும், இறுதி நேரத்திலேயே இலக்கு மாற்றப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மட்டக்களப்பு புனித மைக்கேல் ஆண்கள் பாடசாலைக்கு எதிரில் அமைந்துள்ள புனித 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்

# அடுத்த சில நாட்களில் மழைக்கு வாய்ப்பு

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள குறைந்தளவு காற்றமுத்த தாழமுக்கத்தால் அடுத்த சில தினங்களுக்கு இலங்கை, தமிழ் நாடு மற்றும் மியன்மாரில் மழை வீழ்ச்சிக்கு இடம் உண்டு என்று சர்வதேச வானியல் ஆய்வு நிலையம் எதிர்வு கூறியுள்ளது. இதனால் இலங்கை மற்றும் தமிழ்நாட்டில் 100 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி ஏற்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், மீனவர்கள் கடலுக்குச் செல்வதில் அவதானமாக இருக்குமாறும் எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. (ம-3)

# கிணற்றுக்குள் தவறிவிழுந்த வயோதிபர் உயிரிழப்பு

(கரணவாய்)

கிணற்றில் தண்ணீர் அள்ள முற்பட்ட வயோதிபர் ஒருவர் தவறுதலாக கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்ததாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று புதன்கிழமை மதியம் துன்னாலை மேற்கில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் தவநாதன் (வயது-68) என்ற வயோதிபரே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற கரவெட்டி மரணவிசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் மரணவிசாரணையை மேற்கொண்டு சடலத்தை யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தி உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நெல்லியடி பொலிஸாருக்கு உத்தர விட்டார். (ம-60)

# பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு தன்னுடைய நிபுணத்துவத்தை கோரவில்லை - சரத் பொன்சேகா



(கொழும்பு)

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு தன்னுடைய நிபுணத்துவத்தை கோரவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். நேற்று புதன்கிழமை பாராளுமன்றில் இடம்பெற்ற விசேட அமர்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

இந்த பாராளுமன்றில் தானே மிகவும் அனுபவம் வாய்ந்த இராணுவ நபர் என கூறிய அவர் இந்த அனுபவத்தின் காரணமாகவே பீல்ட் மார்ஷல் ஆக இருக்கிறேன் என்றும் கூறினார்.

மேலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தோல்வியடைந்த ஒருவர் என தெரிவித்த சரத் பொன்சேகா அவரை பதவி விலக வேண்டும் என்றும் தெரிவித்தார். (ம-3)

# தெமட்டகொட வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த பொலிஸாரின் பூதவுடலுக்கு

## ஜனாதிபதி மைத்திரி இறுதி அஞ்சலி

(கொழும்பு)

தெமட்டகொட மேம்பாலத்திற்கு அருகில்வீடொன்றை சோதனை செய்வதற்கு சென்றபோது குண்டு வெடிப்பில் பலியான கொழும்பு குற்றப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் காலஞ்சென்ற டப்ளியு. எம். ரோஹண பண்டாரவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று இறுதி அஞ்சலி செலுத்தினார்.

அன்னாரின் பூதவுடல் வைக்கப்பட்டுள்ள பிலியந்தலை, பட்டுவந்தர பிரதேசத்தில் அமைந்துள்ள இல்லத்திற்குச் சென்ற ஜனாதிபதி பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதுடன், அன்னாரின்



மனைவி. பிள்ளைகள் உள்ளிட்ட குடும்ப உறவினர்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்தார். (ம-3)

# புலிகளைவிட இஸ்லாமிய பயங்கரவாதம் ஆபத்தானது

## விஜித் விஜயமுனி சொய்சா

(கொழும்பு)

இஸ்லாமிய அடிப்படைவாத பயங்கரவாதம் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை விட மிக மோசமானது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று அவசரகாலச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

பாராளுமன்றத்திற்கு வெளியில் பேசும் விடயங்கள்எமது காதுகளுக்கு கேட்கிறது. பாராளுமன்றத்திற்கு குண்டு வைத்து 225 பேரையும் கொல்ல வேண்டும் என சிலர் கூறுகின்றனர்.

அந்த அளவுக்கு நாட்டின் அரசியல்வாதிகள். அரசு வங்குரோத்து நிலைமைக்கு சென்றுள்ளது.

பாராளுமன்றம், அரசு. தொடர்பாக மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை இல்லாமல் போயுள்ளது.

நீதிமன்றம் மற்றும் பாதுகாப்பு படையினர் மீதான நம்பிக்கை மாத்திரமே மீதமுள்ளது. இதனை நாம் பாதுகாக்க வேண்டும்.

இந்த பயங்கரவாத அமைப்பு விடுதலைப்புலிகள் அமைப்பை விட பயங்கரமானது. இந்த பயங்கரவாத அமைப்பிடம் கோரிக்கைகள் எதுவுமில்லை.

கோரிக்கைகள் இருந்தால், அவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தலாம். எதனையாவது கொடுக்க முடியும். பேசி தீர்த்துக் கொள்ள முடியும்.

கோரிக்கைகளை முன்வைக்காத பயங்கரவாத அமைப்பு. இந்த ஆபத்து மிகவும் இலகுவானது அல்ல என்றார். (ம-3)


## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

**வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி (வெளிவாரி) - 2019**
**நேர்முகத் தேர்வு பிற்போடல்**

மேற்படி வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு நடாத்தப்பட்ட தெரிவுப் பரீட்சையின் அடிப்படையில் **27.04.2019, 28.04.2019, 04.05.2019** மற்றும் **05.05.2019** ஆகிய திகதிகளில் நடைபெற இருந்த நேர்முகத்தேர்வு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது.

நேர்முகத்தேர்விற்கான புதிய திகதிகள் பின்னர் அறியத்தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு **021 222 3612** என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

*24.04.2019* (C-6206) பதிவாளர்



# கண்ணீர் அஞ்சலி



தேசிய சேமிப்பு வங்கி யாழ் மேற்தரக்கிளையில் கடமையாற்றும் **திரு.மா.சுகந்தன்** அவர்களின் அன்புத் தாயாரான

**திருமதி பாக்கியராதா மாணிக்கவாசகர்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(8571)

முகாமையாளரும், ஊழியர்களும்,
தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாண மேற்தரக்கிளை.



# மரண அறிவித்தல்

## கந்தையா நல்லதுரை



நாயன்மார்கட்டை பிறப்பிடமாகவும் நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நல்லதுரை நேற்று (24.04.2019) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்ற சின்னையா - சின்னம்மா தம்பதிகளின் வளர்ப்பு மகனும், கந்தையா - சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும், நாகலட்சுமி (கிளி) யின் அன்புக் கணவரும் மோகன், சாந்தா, சந்திரன், காந்தி, ராசன், குகன், மகேந்திரன், தயா, கோபு, விஜி, தனுஷா, காலஞ்சென்ற ஜனனி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

தகனக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

212/3, [illegible]சுவாமி வீதி, நீராவியடி. 0776167239 (கோபு) தகவல் : குடும்பத்தினர் (C-6208)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தொடர்குண்டுவெடிப்பு உயிரிழப்பு 359 ஆக அதிகரிப்பு!

## 500 பேர் தொடர்ந்து சிகிச்சை



(கொழும்பு)

**கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் உயிர்த்த ஞாயிறன்று மேற்கொள்ளப்பட்ட குண்டு வெடிப்புத் தாக்குதல்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 359ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை காயமடைந்த சுமார் 500 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.**

கொழும்பு, மட்டக்களப்பு, நீர்கொழும்பு ஆகிய நகரங்களிலுள்ள மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் கொழும்பிலுள்ள பிரபல நட்சத்திர விடுதிகளில் ஈஸ்டர் தினமான கடந்த ஞாயிற்றுக்கிழமை தற்கொலைக் குண்டுதாரிகளால் குண்டுத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தத் தாக்குதலில் குழந்தைகள் உட்பட பலர் உயிரிழந்திருந்ததுடன், பலர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் உயிரிழந்தவர்களின் சடலங்கள் நேற்றும் நேற்று முன்தினமும் உறவுகளின் கண்ணீருக்கு மத்தியில் நல்லடக்கம் செய்யப்பட்டன.

அதன் பின்னரும் பல பகுதிகளில் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்க வைக்கப்பட்டுள்ளதோடு, தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கையில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். அத்தோடு நாடெங்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை நாட்டில் மீண்டும் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பை உடன் பயங்கரவாத இயக்கமாக அறிவிக்கவும்

### ஜனாதிபதியிடம் சாகல கோரிக்கை




(கொழும்பு)

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பை பயங்கரவாத இயக்கமாக அறிவிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் சாகல ரட்நாயக்கவால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த அமைப்பை பயங்கரவாத இயக்கமாக அறிவிக்க வேண்டுமென அமைச்சர் சாகல டுவிட்டர் பதிவொன்றின் மூலம் கோரியுள்ளார். (இ-7)

## கொழும்பு புறநகர்ப் பகுதியில் பர்தா அணிந்தவர் மீது தாக்குதல்





(வத்தளை)

கொழும்பின் புறநகர் பகுதியான வத்தளையில் ஆணொருவர் பர்தா அணிந்து சென்றதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

பர்தா அணிந்த ஒருவர் வத்தளை பகுதியில் வீதியில் சென்றுள்ளார். இந்த நிலையில் அங்கிருந்த மக்களுக்கு குறித்த நபரின் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அவரை சுற்றிவளைத்த மக்கள் சோதனை செய்ய முயற்சித்துள்ளனர்.

**இந்த நிலையில் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. (இ-7)**

## தற்கொலைக் குண்டுதாரிகள் உட்பட 160 தீவிரவாதிகள் இலங்கையில்!

### அதிர்ச்சித் தகவல் வெளியீடு

இலங்கையில் பயிற்சி பெற்றுக்கொண்ட 160 தீவிரவாதிகள் உள்ளதாகவும் அதில் தற்கொலைக் குண்டுதாரிகளும் உள்ளடங்குவதாகவும் கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பயிற்சி பெற்றுக் கொண்ட 160 தீவிரவாதிகள் உள்ளதாக பாதுகாப்புப் பேரவைக்கு தகவல்கள் கிடைக்கப் பெற்ற போதிலும் விசாரணைகள் மிகவும் மந்த கதியில் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தீவிரவாத பயிற்சி பெற்றுக் கொண்டவர்களில் குறிப்பிடத்தக்களவானவர்கள் தற்கொலைக் குண்டுதாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தீவிரவாதிகளை கைது செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சு, பொலிஸ் திணைக்களம் மற்றும் அரசாங்கத்தால் உரிய ஒத்துழைப்பு வழங்கப்படவில்லை என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வனாத்தவில்லு பிரதேசத்தில் 75 ஏக்கர் தென்னந்தோப்பில் தௌஹீக் ஜமாத் தீவிரவாத முகாம் முற்றுகையிடப்பட்ட போது இந்த தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த முகாமில் ஆயுத பயிற்சி, தற்கொலைக் குண்டுத் தாக்குதல் பயிற்சி போன்றன வழங்கப்பட்டுள்ளன.

இந்த முகாமில் குண்டுகள் தயாரிக்கப்பட்டதாகவும், முகாமிற்கு அடிக்கடி இந்த தீவிரவாத இயக்கத்தின் தலைவராக கருதப்படும் சஜஹான் ஹஷீம் என்பவர் வந்து போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பயிற்சி பெற்றுக்கொண்ட 160 தீவிரவாதிகளின் பட்டியல் ஒன்றும் அவர்களின் தொலைபேசி விபரங்களும் திரட்டப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

### ஜனாதிபதியைப் பதவி விலக்க வேண்டும்

## பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு என்னுடைய நிபுணத்துவத்தை கோரவில்லை-பொன்சேகா

(கொழும்பு)

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு தன்னுடைய நிபுணத்துவத்தை கோரவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நேற்றுப் புதன்கிழமை நாடாளுமன்றில் இடம்பெற்ற விசேட அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாடாளுமன்றில் தானே மிகவும் அனுபவம் வாய்ந்த இராணுவ நபர் எனக் கூறிய அவர் இந்த அனுபவத்தின் காரணமாகவே பீல்ட் மார்ஷல் ஆக இருக்கிறேன் என்றும் தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தோல்வியடைந்த ஒருவர் எனத் தெரிவித்த சரத் பொன்சேகா அவரைப் பதவி விலக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (இ-7)

## தற்கொலை தாக்குதல் குறித்து இருவர் கைது, வான் பறிமுதல்

(ஹக்காபொல)

குண்டு வெடிப்புச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் என்ற குற்றச்சாட்டில் [illegible] மாத்தகம பகுதியில் இருவர் **கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**

புலனாய்வுப் பிரிவுஅதிகாரிகள், விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கிணங்க அப் பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்ட போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது வறக்காபொலவில் கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்து குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் வான் ஒன்றும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

அத்துடன் அப் பகுதியிலிருந்து மோட்டார் சைக்கிளொன்றும் தொலைத்தொடர்பு உபகரணங்கள் நான்கும் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஹோலி படைக்கு 'ஹட்ரிக்' வெற்றி


விக்கெட் ஒன்று வீழ்த்தப்பட்ட மகிழ்ச்சியைக் கொண்டாடும் அணித் தலைவர் ஹோலி

ஐ.பி.எல், கிரிக்கெட் தொடரில் ஹோலி தலைமையிலான பெங்களூர் அணி 'ஹட்ரிக்' வெற்றியை பதிவு செய்தது. பரபரப்பான லீக் போட்டியில் 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. அஷ்வினின் பஞ்சாப் அணி தோல்வியடைந்தது.

இந்தியாவில், பிரிமியர் கிரிக்கெட் தொடருக்கான 12வது சீசன் நடக்கிறது. பெங்களூருவில் உள்ள சின்னசாமி மைதா னத்தில் நடந்த லீக் போட்டியில் பஞ்சாப், பெங்களூர் அணிகள் மோதின.

பஞ்சாப் அணியில் சாம் கர்ரான், ஹர்பிரீத் பிரார் நீக்கப்பட்டு நிக்கோலஸ் பூரன், அன்கித் ராஜ்பூத் சேர்க்கப்பட்டனர். பெங்களூர் அணியில் ஸ்ரெய்ன், பவான் நேகிக்கு பதிலாக சௌதி, வோஷிங்டன் சுந்தர் வாய்ப்பு பெற்றனர்.

நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணித் தலைவர் அஷ்வின் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**பார்த்திவ் நம்பிக்கை**

பெங்களூர் அணிக்கு பார்த்திவ் படேல், அணித் தலைவர் விராட் ஹோலி ஜோடி ஆரம்பம் தந்தது. அன்கித் ராஜ்பூத் வீசிய முதல் ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி அடித்தார் பார்த்திவ். மொஹமட் ஷமி வீசிய 2வது ஓவரில் அடுத்தடுத்த 2 பவுண்டரி விளாசிய ஹோலி (13), ஷமியிடமே சரணடைந்தார். ராஜ்பூத் வீசிய 5வது ஓவரில் ஒரு சிக்சர் பறக்கவிட்ட பார்த்திவ், ஷமி வீசிய 6வது ஓவரில் 3 பவுண்டரி, ஒரு சிக்சர் அடிக்க 18 ஓட்டங்கள் கிடைத்தது. முருகன் அஷ்வின் 'சுழலில்' பார்த்திவ் (43) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த மொயீன் அலி (4), அக்ஸ்தீப் நாத் (3) நிலைக்கவில்லை.

**டி வில்லியர்ஸ் அபாரம்**

பின் இணைந்த டி வில்லியர்ஸ், மார்கஸ் ஸ்ரொய்னிஸ் ஜோடி விக்கெட் சரிவிலிருந்து அணியை மீட்டது. முருகன் அஷ்வின் வீசிய 14வது ஓவரில் ஒரு சிக்சர் அடித்தார் ஸ்ரொய்னிஸ். ராஜ்பூத் வீசிய 15வது ஓவரில் தொடர்ச்சியாக ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய டி வில்லியர்ஸ், முருகன் அஷ்வின் பந்தில் ஒரு சிக்சர் பறக்கவிட்டார். வில்ஜோயன் பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய டி வில்லியர்ஸ், ஐ.பி.எல்., அரங்கில் தனது 33வது அரைச்சதமடித்தார். தொடர்ந்து அசத்திய இவர், ஷமி வீசிய 19வது ஓவரில் 'ஹட்ரிக்' சிக்சர் அடித்தார். இவருக்கு ஒத்துழைப்பு தந்த ஸ்ரொய்னிஸ், வில்ஜோயன் வீசிய கடைசி ஓவரில் 2 சிக்சர், 2 பவுண்டரி அடித்தார். இந்த ஜோடி 5வது விக்கெட்டுக்கு 121 ஓட்டங்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தது.

20 ஓவர்களில் பெங்களூர் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 202 ஓட்டங் களை எடுத்தது. டி வில்லியர்ஸ் (82), ஸ்ரொய்னிஸ் (46) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**பூரன் ஆறுதல்**

கடின இலக்கை விரட்டிய பஞ்சாப் அணிக்கு கிறிஸ் கெய்ல் (23), லோகேஷ் ராகுல் (42) நல்ல ஆரம்பம் கொடுத்தனர். மயங்க் அகர்வால் (35) ஓரளவு கைகொடுத்தார். வாஷிங்டன் சுந்தர் வீசிய 14வது ஓவரில் 3 சிக்சர் பறக்கவிட்ட நிக்கோலஸ் பூரன், மொயீன் அலி வீசிய 16வது ஓவரில் 2 சிக்சர் விளாசினார். இவருக்கு ஒத்துழைப்பு தந்த டேவிட் மில்லர், சௌதி வீசிய 17ஆவது ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி அடித்தார். சைனி வீசிய 19ஆவது ஓவரில் மில்லர் (24), பூரன் (46) ஆட்டமிழந்தனர்.

கடைசி ஓவரில் பஞ்சாப் வெற்றிக்கு 27 ஓட்டங்கள் தேவைப்பட்டன. உமேஷ் வீசிய 20வது ஓவரில் அணித் தலைவர் அஷ்வின் (6), வில்ஜோயன் (0) அவுட்டாகினர். இந்த ஓவரில் 9 ஓட்டங்கள் மட்டுமே கிடைத்தது.

20 ஓவர்களில் பஞ்சாப் அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 185 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. முருகன் அஷ்வின் (1), மன்தீப் சிங் (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# இப்படிக் கேட்டால் எப்படிச் சொல்வேன்

## 'தல' தோனி ருசிகரம்



"சென்னை அணியின் வெற்றி ரகசியத்தை வெளியில் சொன்னால், இனி எந்த ஒரு அணியும் என்னை ஏலத்தில் எடுக்காது," என, சென்னை அணித் தலைவர் தோனி தெரிவித்தார்.

இந்தியாவில் ஐ.பி.எல்., கிரிக்கெட் தொடர் நடக்கிறது. சென்னை சேப்பாக்கத்தில் நடந்த லீக் போட்டியில் சென்னை அணி (176/4) 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் ஹைதராபாத்தை (175/3) வீழ்த்தியது.

இதன்மூலம், இம்முறை முதல் அணியாக 'பிளே ஓப்' சுற்றுக்கு முன்னேறியது. ஐ.பி.எல்., தொடர் வரலாற்றில் அனைத்து சீசனிலும் (2016, 17 தொடரில் பங்கேற்கவில்லை) அடுத்த சுற்றுக்குள் நுழைந்துள்ளது.

இது குறித்து சென்னை அணித் தலைவர் தோனி கூறியதாவது, சென்னை அணியின் வெற்றி ரகசியம் குறித்து அனைவரும் கேட்கின்றனர். இதை என்னால் வெளியில் சொல்ல முடியாது. அப்படி சொல்லிவிட்டால், இனி எந்த ஒரு அணியும் என்னை ஏலத்தில் எடுக்காது. இது வர்த்தக ரகசியம். உள்ளூர் ரசிகர்களின் ஆதரவும் வெற்றிக்கு முக்கிய காரணம். இதையும் தாண்டி, பயிற்சியாளர் குழுவினரின் பங்களிப்பு வெற்றிக்கு கைகொடுக்கிறது.

முதுகுப்பகுதி காயம் தொல்லை தருவதாக இல்லை. காயத்தின் தன்மை மோசமாக இருந்தால், ஓய்வு எடுத்துக்கொள்ளலாம். சிறிய அளவு இருந்தால், போட்டியில் தொடர்ந்து பங்கேற்கலாம். உலக கிண்ணத் தொடர் (மே 30 - ஜுலை 14, இங்கிலாந்து) நெருங்குவதால், உடற்தகுதியில் எச்சரிக்கையுடன் உள்ளேன். இவ்வாறு தோனி கூறினார்.




# வெற்றி மழை பொழிந்த பொன்ரிங்கின் ஆஸி.,



எட்டாவது உலகக் கிண்ண தொடர் (2003) ஆபிரிக்க கண்டத்தில் முதல் முறையாக நடந்தது. மொத்தம் 14 அணிகள் பங்கேற்றன. இவை இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களை பெற்ற அணிகள் 'சுப்பர் 6' சுற்றுக்கு முன்னேறின.

இத்தொடரில் பல்வேறு சர்ச்சைகள் வெடித்தன. 'சிம்பாப்வேயில் ஜனநாயகம் செத்து விட்டது' என்று கூறிய அந்நாட்டு வீரர்கள் அன்டி பிளவர், ஹென்றி ஒலங்கா 'கறுப்புப் பட்டை' அணிந்து விளையாடினர். சிம்பாப்வே அதிபர் றொபேர்ட் முகாபேயின் ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து அங்கு சென்று விளையாட இங்கிலாந்து மறுத்தது. பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக கென்யா சென்று விளையாட நியூசிலாந்து மறுத்தது.

இலங்கையின் சமிந்த வாஸ் பங்களாதேஷுக்கு எதிராக முதல் மூன்று பந்துகளில் ஹட்ரிக் சாதனை படைத்தார். முதல் அரையிறுதியில் கங்குலி சதம் (111) அடிக்க இந்திய அணி (270/4), கென்யாவை (179) வீழ்த்தி, இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

**'சுப்பர்' சச்சின்**

கடந்த 2003ல் நடந்த உலக கிண்ணத் தொடரில் இந்தியாவின் சச்சின் ஓட்ட மழை மழை பொழிந்தார். 11 போட்டிகளில் ஒரு சதம், 6 அரைசதம் உட்பட 673 ஓட்டங்கள் ( சராசரி 61.88) எடுத்தார். இவரே தொடர் நாயகன் விருதை வென்றார்.

மற்றொரு அரையிறுதியில் அவுஸ்திரேலிய அணி, இலங்கையை வென்றது.

**கங்குலி தவறு**

ஜொகனஸ்பேர்க் மைதானத்தில் நடந்த இறுதிப் போட்டியில் இந்தியா, அவுஸ்திரேலிய அணிகள் மோதின. மழை காரணமாக ஆடுகளத்தில் ஈரப்பதம் காணப்பட, நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் கங்குலி முதலில் களத்தடுப்பு செய்வது என தவறாக கணித்தார். இதனைப் பயன்படுத்திக் கொண்ட அவுஸ்திரேலிய அணி ஓட்ட மழை பொழிந்தது. கில்கிறிஸ்ட் (57), ஹைடன் (37) அணித் தலைவர் பொன்ரிங் (140*), டேமியன் மார்ட்டின் (88*) கைகொடுக்க, 50 ஓவரில் 2 விக்கெட்டுக்களை இழந்து 359 ஓட்டங்கள் குவித்தது.

இமாலய இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு சச்சின்(4), கங்குலி (24), டிராவிட் (47) ஏமாற்றினர். சேவாக் (82) ஆறுதல் அளித்தார். 39.2 ஓவரில் 234 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. சம்பியன் பட்டம் வெல்லும் வாய்ப்பை கோட்டைவிட்டது.

125 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற அவுஸ்திரேலிய அணி, 3ஆவது முறையாக கிண்ணத்தைக் கைப்பற்றியது.




## இந்தியன் பிறிமியர் லீக் - 2019 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை சுப்பர் கிங்ஸ் | 11 | 8 | 3 | 16 |
| 2 | டில்லி கப்பிட்டல்ஸ் | 11 | 7 | 4 | 14 |
| 3 | மும்பை இந்தியன்ஸ் | 10 | 6 | 4 | 12 |
| 4 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | 10 | 5 | 5 | 10 |
| 5 | கிங்ஸ் XI பஞ்சாப் | 11 | 5 | 6 | 10 |
| 6 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 10 | 4 | 6 | 8 |
| 7 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 11 | 4 | 7 | 8 |
| 8 | ராஜஸ்தான் றோயல்ஸ் | 10 | 3 | 7 | 6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலை குண்டுத் தாக்குதலில் 45 சிறுவர்கள் பலி!

## யுனிசெப் கவலை

(ஜெனிவா)

இலங்கையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களில்நடத்தப்பட்ட தொடர்குண்டு வெடிப்புக்களின் போது 45 சிறுவர்கள் கொல்லப்பட்டமை மிகுந்த வேதனை யளிப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் யுனிசெப் அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

பல சிறுவர்கள் அதிர்ச்சியூட்டும் மற்றும் அறிவின்றி மேற்கொள்ளப்பட்ட வன்முறைக்கு சாட்சியாகியுள்ளனர் என்றும் யுனிசெப் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், குறித்த குண்டு வெடிப்பில் பெற்றோரை இழந்த சிறுவர்களைப் பராமரிக்கத் தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க யுனிசெப் நடவடிக்கை எடுத்துள்ளது.

சிறுவர்களுக்கு உளவியல்- சமூக ஆதரவு பிரதான தேவை என்று இனங்காணப்பட்டுள்ளது.

எனவே இச் சம்பவங்களில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்குத் தேவையான உளவியல்- சமூக முதலுதவியை யுனிசெப் வழங்கி வருவதாகவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




## ஈரவிழிகளுடன் 90 ஆம் நாள் நினைவு

### அமரர் திருமதி குலதீபன் பிருந்தா

(தாதிய உத்தியோகத்தர்- மந்திகை ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை)

அன்னை மடியில்:- 1985.01.12 ஆண்டவன் அடியில்:- 2019.01.27

புன்னகை நிலவே
புதுப்புனலே பிருந்தா
இளையவளே இனியவளே
இரவைப் பகலாக்கிய ஒளி வெள்ளமே

பெண்மக்கள் மூவரையும்
பெற்றெடுத்து ஆளாக்கி
பேர் சொல்லும்படி வாழ
பெரும்பாடு பட்டோமே!

பெற்ற வயிறு நெருப்பாகுதடி மகளே!
பாதியிலே பரிதவிக்கவிட்டு நீ
பரமனடி சேர்ந்தாயோ

உடன் பிறந்த சோதரிகள் நாம்
உனை நினைத்து
வாழ்வு பெறுத்துவிட நீயில்லா
வறுமையிலே வாடுகின்றோம்

வளமாகிய வாழ்வதனை
பிருந்தாவனமாக்கியவளே!
துணையாக நாமிருக்கத்
தொலைதூரம் போனதென்னே?

பெறாமக்கள் உனை நினைத்தே
பேர் சொல்லிக் கேட்கின்றார்
நித்திலமாய் வாய்த்த அரசியே
பெற்றவள் துடிக்க உடன்பிறந்தவர்

நாமிருக்க நித்திரையாய் ஆகினையோ
உன்னவனையும் உன்
உதிரத்துப் பாலகியையும்
ஒரு கணம் நினைத்திலையோ- அம்மா!
இத்தரையில் நாமிருக்கும் வரை
சித்திரமாய் நீயிருப்பாய் எம் நினைவில் பெறுக
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

"ஜெயபவனம்"
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.



கணவன், மகள், தாய்,
சகோதரிகள்,
மைத்துனர்கள்,
பெறாமக்கள்.

(C-6199)


## இராசி பலன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| சுக், புத | சூரி | செவ் | ராகு |
| | | | |
| | | | |
| சனி, குரு, கேது, சந் | | | |

சந்திராஷ்டமம்
மிருகசீரிடம்- திருவாதிரை

25.04.2019
சித்திரை 12, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
சஷ்டி பிற்பகல் 3.54 மணிவரை
பூராடம் முன்னிரவு 11.22 மணிவரை
சுபநேரம் 7.30-9.00 மணிவரை
இராகுகாலம் 1.30- 3.00 மணிவரை

வளவன்

**மீனம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், செய் தொழில் மேன்மையுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**மேடம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**இடபம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வேலைச்சுமை கூடும், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பிரயாண பயமுண்டு.

**மிதுனம்** விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தொழில் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்** தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம்.

**மகரம்** தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியத்தை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், சயனசுகக் குறைவான நாள்.

**சிம்மம்** உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**தனுசு** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், காரிய வெற்றிக்கு கடவுளை வழி பட வேண்டிய நாள்.

**விருச்சிகம்** நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், வருமானம் திருப்தி தரும்.


**துலாம்** சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** பேச்சில் கனிவு பிறக்கும், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரியில் கடையடைப்பு, கறுப்புக் கொடி




(படங்கள்:- சுபேசன்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாட்டில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், உயிர் நீத்த உறவுகளுக்கு அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளும் முகமாகவும் சாவகச்சேரி சந்தை வியாபாரிகள் நேற்றுக் கடையடைப்புச் செய்துள்ளனர். சாவகச்சேரி மரக்கறிச் சந்தை வியாபாரிகள், தேங்காய் வியாபாரிகள், பழக்கடை வியாபாரிகள் மற்றும் சில வர்த்தகர்கள் கடையடைப்புச் செய்து தமது அனுதாபத்தை வெளியிட்டுள்ளனர்.(இ-30)

# அலங்கார உற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வடக்கு சட்டநாதர் வீதி கொன்றையடி திருவருள் மிகு வைரவப் பெருமான் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் நாளை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி பத்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும். இவ் உற்சவத்தில் பத்து நாட்களும் சமஜோதி க.நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சமயச் சொற்பொழிவுகள் இடம் பெறவுள்ளன. (இ-7)

சாவகச்சேரியில் பதாகை வைத்து

# மகிந்த அணி அனுதாபம்




(சாவகச்சேரி)

இலங்கையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (மகிந்த அணி) சாவகச்சேரி மக்கள் சார்பாக தனது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது.

அக் கட்சி சாவகச்சேரி நகர மத்தியில் அனுதாபப் பதாகை ஒன்றினை காட்சிப்படுத்தியுள்ளது. (இ-30)




# யாழ்.ரத்னா விருது மற்றும் கலைத்துறை சான்றிதழுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவையால் வழங்கப்படுகின்ற விருதான யாழ்.ரத்னா விருது -2019 மற்றும் கலைத்துறை சான்றிதழுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலக்கியம் மற்றும் எழுத்துத்துறை, நாடகம், இசை நாடகம், நாட்டுக்கூத்து, நடனம், சங்கீதம், இசை (வயலின், வீணை...) ஓவியம், சிற்பம், உலோகக் கலை, கலைப் பணியாற்றிய எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 60 வயது பூர்த்தியடைந்த இதுவரை யாழ்.ரத்னா விருதைப் பெற்றுக் கொள்ளாத யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட எழுத்தாளர்கள், கலைஞர்கள், விண்ணப்பிக்க முடியும். அத்துடன் கலைத்துறை சான்றிதழுக்கான விண்ணப்பங்களும் மேற்கூறப்பட்ட துறைகளில் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரி 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 40 வயதிற்குட்பட்டவராகவும் இருப்பதுடன் யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட எழுத்தாளர்கள், கலைஞர்கள், விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப்பிரிவில் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பத்துடன் உரிய கலைத்துறையை சான்றுப்படுத்தும் ஆவணப்பிரதிகளுடன் 31.05.2019 இற்கு முன்னர் விண்ணப்பிக்க முடியுமென பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான எஸ். சுதர்சன் அறிவித்துள்ளார். (இ-7)

# இலங்கைத் தமிழரசுக் கட்சி தேசிய மாநாடு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு நாளை 26 ஆம் திகதி முதல் இறுதி நிகழ்ச்சியான பொது மாநாடு 28/04/2019 வரை இடம்பெறுவதற்கு அனைத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டு அறிவித்தல்களும் வெளியிடப்பட்டிருந்தன.

இந் நிலையில் 21.04.2019 அன்று இயேசு கிறிஸ்து உயிர்ப்பு நாளில் கிறிஸ்தவ தேவாலயங்களில் பிராத்தனைகள், கொண்டாட்டங்கள் ஆரம்பித்த நேரத்தில் கிறிஸ்தவ தேவாலயங்களையும், பிரபல விடுதிகளையும் குறிவைத்து தற்கொலைக் குண்டுதாரிகள் திட்டமிட்டவாறு பயங்கரமான குண்டுவெடிப்புகளை நிகழ்த்தியுள்ளனர். இதே போன்று மட்டக்களப்பிலும் கிறிஸ்தவ தேவாலயத்தில் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

இதுவரை 350 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 500 இற்கும் மேற்பட்டவர்கள் காயங்களால் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு மிகப் பெரிய சோகத்தில், அவலத்தில் துயரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு அஞ்சலியையும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து வருகின்றோம்.

இத்தகைய பயங்கரவாத நடவடிக்கைகள் எங்கு இடம்பெறும் எனக் கூற முடியாதுள்ளது. அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு இராணுவம் மற்றும் பொலிஸார் நாடு முழுவதிலும் பரிசோதனைகளை நடத்திக் குற்றவாளிகளைத் தேடுகின்றனர். கைதுகள் இடம்பெறுகின்றன.

இவ்வாறுள்ள அபாயகரமான ஒரு நிலையில் பொதுநிகழ்ச்சிகள், கல்வி நிறுவனங்கள், போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் பாதிப்புக்கள் தொடர்கின்றன. அச்சம் நிலவுகின்றது.

எனவே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 16 ஆவது மாநாடும் ஒத்திவைக்கப்பட வேண்டியுள்ளது. அடுத்த வாரம் தமிழரசுக் கட்சி நிர்வாகக் குழு கூடி மாநாடு நடைபெறுவதற்கான திகதிகளை அறிவிக்கவுள்ளது என அக்கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா அறிவித்துள்ளார். (இ-7)

# கிணற்றிலிருந்து முதியவரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் நீர் எடுக்கச் சென்ற முதியவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்வம் நேற்று முன்தினம் கொக்குவில் காளி கோவிலடியில் இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் கொக்குவில் காளி கோவிலடி பழைய புகையிரத வீதியைச் சேர்ந்த தணிகாசலமூர்த்தி எனத் தெரியவந்துள்ளது.

85 வயதான இவர் நீர் எடுப்பதற்காகச் சென்ற போது தவறுதலாக கிணற்றிற்குள் விழுந்ததாக கூறப்பட்டுள்ளது.

இவரது சடலம் பொலிஸாரின் உதவியுடன் மீட்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-5-272)

# பரீட்சை பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவைக்கு மாகாண மொழி பெயர்ப்பாளர் சேவையின் மொழி பெயர்ப்பாளர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது நாளை மறுதினம் 27 ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் 2019.04.28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆகிய தினங்களில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தன. எனினும் தவிர்க்க முடியாத காரணத்தால் இப் பரீட்சையானது பிற்போடப்பட்டுள்ளது.

பரீட்சைத் திகதி தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என செயலாளர் அ.சிவபாலசுந்தரம் அறிவித்துள்ளார். (இ)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அழகரத்தினம் மண்டபத்தில் அதிபர் ஆ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் க.கமலசேகரம் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-5)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நவாலி அருள்மிகு சிந்தாமணி விநாயகர் ஆலய மஹோற்சவம் இன்று 25 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும்.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இரதோற்சவமும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (5-105)

# த.தே.கூ. உறுப்பினர் இராஜினாமா

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்குப் பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

வளலாய் பிரதேசத்தில் இருந்து சபைக்குத் தெரிவான ந.இராசேந்திரம் என்பவரே இவ்வாறு இராஜினாமாச் செய்துள்ளார்.

அவர் யாழ்ப்பாணப் பனை அபிவிருத்திச் சபையின் தலைவராகப் பொறுப்பேற்ற நிலையில் வெற்றிடமான உறுப்பினர் பதவிக்கு ரா.குகதீபன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (இ-10-134)

# "ஞான வேள்வி" ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு சினமயா மிஷனால் நல்லை ஆதீன மண்டபத்தில் இன்று நடத்த இருந்த "ஞானவேள்வி" ஆன்மீகத் தொடர் சொற்பொழிவு நிகழ்வு நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என யாழ். சின்மயா மிஷன் அறிவித்துள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது

(கம்பளை)

கம்பளைப் பகுதியில் உள்நாட்டு துப்பாக்கிகளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கம்பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லோராவத்தை, பன்விலதென்ன பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில், பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மணிக்கம்பிட்டி - கந்துருவெல பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய ஆதம்பாவா மொஹமது ரிஷ்மி என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து அனுமதிப்பத்திரமின்றி வைத்திருந்த உள்நாட்டு துப்பாக்கிகள் இரண்டும், 78 ஈயம் உருண்டைகளும் மீட்கப்பட்டுள்ளன. (இ-7)

# தபால்மா அதிபரின் விசேட அறிவிப்பு

(கொழும்பு)

தற்பொழுது நாடு முழுவதும் நிலவும் பாதுகாப்பு நிலைமையை கருத்திற் கொண்டு உள்ளூர் மற்றும் வெளிநாடுகளுக்கு தபால் மூலம் விநியோகிப்பதற்காக கையளிக்கப்படும் பொதிகள் தபால் அலுவலகத்தின் கருமப்பீட அதிகாரிக்கு அல்லது அதிகாரம் கொண்ட அதிகாரி ஒருவர் முன்னிலையில் பொதியிட்டு ஒப்படைக்கப்படும் பொதிகளை மாத்திரம் தபால் அலுவலகங்கள் பொறுப்பேற்குமாறு அனைத்து தபால் அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரிய ரட்ண இந்த ஆலோசனையை தபால் நிலைய அதிபர்களுக்கு தெரிவித்துள்ளார்.

இந்த ஆலோசனைக்கு அமைவாக வெளி இடங்களில் இருந்து பொதி செய்யப்பட்டு தபாலில் சேர்ப்பதற்காக பொதிகளை சமர்ப்பிக்க வேண்டாம் என இதன் மூலம் பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கமைவாக வெளி இடங்களில் இருந்து பொதி செய்யப்பட்டு எடுத்து வரும் பொதிகளை ஏற்றுக்கொள்வதை கருமப்பீட அதிகாரிகள் நிராகரித்தல் அல்லது பொதிகளை திறந்து காட்டி மீண்டும் பொதியிடுமாறு பொது மக்களுக்கு தபால் அலுவலகங்களில் ஆலோசனை வழங்கப்படக்கூடும் என்றும் குறிப்பிட்டுள் ளார்.

இதனால் ஏற்படக் கூடிய சிரமங்களை தவிர்த்துக் கொள்வதற்காக அனைத்துப் பொதிகளையும் த்பால் அலுவலகங்களில் பொதியிட்டு கையளிக்குமாறு பொது மக்களிடம் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இதே போன்று பொதிகளை கையளிப்போர் தமது அடையாளத்தை உறுதி செய்வதன் தேவையையும் தபால்மா அதிபர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)


## தந்தை செல்வநாயகம் அவர்களின் 42வது நினைவுநாளின் நிகழ்ச்சி



காலம் :- 26.04.2019 வெள்ளிக்கிழமை

இடம் :- யாழ்.நகர் தந்தை செல்வா நினைவிடத்திலுள்ள நினைவிடம்

தலைமை :- பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன் (தலைவர் தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு)

தந்தை செல்வா சிலைக்கு மலர் மாலை அணிவித்து சமாதியில் மலரஞ்சலி இடம்பெறும்.

- தமிழ்த் தேசியத்தின் தந்தை அவர்களை நினைவுகூரும் இவ் அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- வழமையான "தந்தை செல்வா நினைவுப் பேருரை" இம்முறை நடைபெற மாட்டாது.

21.04.2019 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கொடூரத் தாக்குதலில் உயிர்நீத்த அப்பாவி மக்களுக்காகவும் படுகாயமடைந்தவர்களுக்காகவும் ஆத்மாசாந்தி பிரார்த்தனை இடம்பெறும்.

(8542)

தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு


# மொஹம்மட் சஹ்றானை அப்போதே வெளியேற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதலின் பின்னணியிலிருந்த தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் முக்கிய புள்ளியான மொஹம்மட் சஹ்றானை நாட்டை விட்டு வெளியேற்றுமாறு கடந்த 2017 ஆம் ஆண்டு இலங்கை முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அவர்கள் சஹ்றான் சாத்தனை நாட்டை விட்டு துரத்தியடி போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை கையில் ஏந்தி இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.




இந்நிலையில் இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற தொடர் குண் டுத் தாக்குதல் காரணமாக இதுவரை 359 பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் பலர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## SOLAR சிஸ்டம்ஸ்

- செலவை ஏற்படுத்திய மின்சாரம் வருமானத்தைப் பெற்றுத் தரும்
- மின் கட்டணம் இல்லை

E Green Lanka

MICRO PC SYSTEMS
Micro Power Co Systems

WARRANTY 25 YEARS WARRANTY

| 2kW SYSTEM | 3kW SYSTEM | 5kW SYSTEM | 8kW SYSTEM | 12kW SYSTEM | 15kW SYSTEM | 22kW SYSTEM | 33kW SYSTEM | 44kW SYSTEM |
|---|---|---|---|---|---|---|---|---|
| 350,000/= | 470,000/= | 750,000/= | 1,080,000/= | 1,480,000/= | 1,695,000/= | 2,200,000/= | 3,300,000/= | 4,400,000/= |
| 240 Units | 360 Units | 600 Units | 950 Units | 1465 Units | 1795 Units | 2640 Units | 3960 Units | 5280 Units |

மின்சார தடை இல்லை
No Power-Cut

விவசாயிகளுக்கான மின்சாரம்
1hp முதல் 60hp வரை

SOLAR STREET GARDEN LIGHTS
3W 4W 5W
6W 15W 30W

7 வருடங்களுக்கான தவணை கட்டண முறை

44 kW: CEB இனால் வருமானம் ரூ.116,160 (5280 x 22/-) ரூ.44 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 68,600/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 47,560/-

33 kW: CEB இனால் வருமானம் ரூ. 87,120 (3960 x 22/-) ரூ. 33 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 51,450/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 35,670/-

22 kW: CEB இனால் வருமானம் ரூ. 58,080 (2640 x 22/-) ரூ. 22 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 34,300/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 23,780/-

12 kW: CEB இனால் வருமானம் ரூ. 32,230 (1465 x 22/-) ரூ. 14.8 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 23, 067/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 9,163/-

* நிபந்தனைகளுக்குட்பட்டது

KACO Fronius SOLAX ENVERTECH victron energy REC JinKO Solar YINGLI SOLAR ReneSola

CEB SEA LECO Approved

கொழும்பு - 077 3963281/ 077 3963283 / 071 0356062 / 077 3963278
யாழ்ப்பாணம் - 077 3963280 / 0777 425973 / 0777 425974 / 077 3963284
வவுனியா - 0777 425974 / 0777 763071 / 077 3963273
மட்டக்களப்பு - 071 0356069 / 071 8963280 / 071 0356072 / 077 3963281

TIPS!!!
*Factors affecting performance of a solar PV system!*
Factors which are under the control of Human efforts:
1. Solar Panels: Figures given in the datasheet by the panel manufacture and its accuracy of Peak power, Module efficiency, temperature co efficient.=> So request for Tier 1 brand
2. Installation: Panel's orientation and tilt, System Design, Grid quality =>Select well-trained / Certified Company for the Installation.
3. Inverter: Efficiency =>so select premium brands.

*Factors which are beyond the control of Human efforts:*
1. Solar irradiance (SI) available at the site
2. Ambient temperature 3. Accumulation of Dirt/Smog
4. wind speed etc.

மொத்த விற்பனையாளர்கள் தொடர்பு கொள்ளவும் : 0773 076409 / 071 9963275 | E-mail: mail@micropcsystems.com | Web: www.solarpowerlk.com

No.115C, W.A. Silva Mawatha, Colombo 06. Tel: 011 4000686 | No.218, Hospital Road, Jaffna. Tel: 021 2225893 | No.66B, 2nd Cross Street, Vavuniya. Tel: 024 2221969 | No.115-5C, New Kalmunai Road, Kalladi, Batticaloa. Tel: 011 5640650


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறை எந்தப் பக்கமிருந்து தோற்றம்பெற்றாலும் அதை நாம் முளையிலேயே கிள்ளி எறியவேண்டும்

## நாடாளுமன்றில் டக்ளஸ் எம்.பி.வலியுறுத்து



(கொழும்பு)

மீண்டும் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டமானது வன்முறையில் ஈடுபடுகின்றவர்களையும் வன்முறையாளர்களையும் நியாயப்படுத்துகின்றவர்களையும் அதைத் தூண்டிவிடுகின்றவர்களையும் அதற்குத் துணைபோகின்றவர்களையும் துணைபோகின்றவர்களில் சுயலாப அரசியல்வாதிகள் இருந்தால் அத்தகையவர்களையும் ஒடுக்குவதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை நான் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன். வன்முறையானது எந்தவடிவத்தில் எந்தப் பக்கமிருந்து தோற்றம் பெற்றாலும் அதை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற விவாதத்தின்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டிருக்கும் அவசரகால நிலைக்கு ஒரு மனித முகம் இருக்க வேண்டும்! தொடர் குண்டு வெடிப்புக்களை மையமாக வைத்து இன்று மீண்டும் அமுலுக்கு கொண்டுவரப்பட்டிருக்கும் அவசரகாலச்சட்டமானது, மறு புறத்தில் தமிழ் மக்களின் உரிமைக்குரல்களை நசுக்கிவிடக்கூடாது.

வன்முறையில்லாத உரிமைக் குரல்களுக்கு இந்த அவசரகாலச் சட்டம் மதிப்பளித்தே ஆகவேண்டும். எதையும் ஏன், எதற்கு, என்று இந்த நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் கேள்வி எழுப்பும் ஜனநாயக விழுமியங்களுக்கு சவால் விடுகின்ற ஒன்றாகவோ, நாம் அனைவரும் கட்டியெழுப்ப விரும்பும் தேசிய நல்லிணக்கத்திற்கு பாதகத்தை ஏற்படுத்தும் விதமாகவோ இந்த அவசரகாலச் சட்டம் இருந்துவிடக்கூடாது.

ஏனெனில் 1971 ஆம், 1989 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜே.வி.பியின் செயற்பாடுகளையும், இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் பின்னராக புலிகளின் செயற்பாடுகளையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அவசரகாலச் சட்டம் பிரயோகிக்கப்பட்டபோது, அப்பாவிப் பொது மக்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதையும் இச்சபையின் ஞாபகத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

தமிழ், முஸ்லிம், சிங்கள இன, மத சமூகங்களை ஒன்றுபட்ட இலங்கைத்தீவின் சமத்துவ பிரஜைகளாகவே நான் பார்க்கின்றேன்.

மனிதநேயம் மக்களை ஒன்றுபடுத்துகிறது. சுயலாப அரசியல் மட்டுமே மத வாதம், இன வாதம் என மக்களைப் பிரித்து வைக்கின்றது. ஆகவே, இத்தகைய வன்முறைகளை வைத்து இன வாதம், மதவாதம் போன்ற முரண்பாடுகளை தூண்டிவிடும் செயல்களில் யாரும் ஈடுபடக்கூடாது.

ஒன்று பட்ட இலங்கைக்குள் தமிழ், முஸ்லிம், சிங்கள இன சமூக மக்கள் தத்தமது தனித்துவ அடையாளங்களோடும், சுதந்திரமாகவும் தமது மத வழிபாடுகளை முன்னெடுக்கக் கூடிய அச்சமற்ற சூழலில் சேர்ந்து வாழ வேண்டும். ஒவ்வொரு இன சமூக மக்களுக்கும் அவர்கள் ஐக்கிய இலங்கைக்குள் எதிர்பார்க்கும் அரசியல் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும்.

முக்கியமாக பகிரப்பட்ட அதிகாரங்கள் மீண்டும் பறிக்கப்பட முடியாத ஏற்பாடுகள் அதில் இருத்தல் வேண்டும். அதன் ஊடாகவே இத்தகைய கொடிய வன்முறைகளுக்கு எதிராக அனைத்து இன சமூக மக்களும் இலங்கையர்களாக கிளர்ந்தெழும் ஒன்றுபட்ட ஒற்றுமையை முழுமையாக உருவாக்க முடியும்.

அதற்கு முழு இலங்கை மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதும், இலங்கை அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதுமான பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து தொடங்கி அதற்கு மேலதிக அதிகாரங்களை வழங்கி அதை மேலும் பலப்படுத்துவதன் மூலமே இது சாத்தியமாகும்.

கொடிய வன்முறைகளுக்கு எதிராக ஒன்றுபட்டு குரல் எழுப்புவோம். இரத்தப்பலிகளில் இருந்து அனைத்து மக்களையும் நாம் பாதுகாப்போம்.

ஒவ்வொரு இன,மத,சமூக மக்களினதும் புனித நாட்களையும், அதை அந்த மக்கள் பாதுகாப்பான சூழலில் அனுஷ்டிப்பதற்கும் ஏற்ற சூழலையும் ஏற்படுத்திக்கொடுப்பது நமது கடமையாகும்.

இன்று நாடு எதிர்கொண்டுள்ள பயங்கரமான நிலையானது எமது நாட்டின் மக்களின் பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்கியிருப்பதுடன், இயல்புச் சூழலையும் வெகுவாகப் பாதித்துள்ளதுடன், நாட்டின் பொருளாதாரத்தின் மீதும் பெரும்பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த நெருக்கடியானது இலங்கை மக்கள் அனைவருக்கும் பொதுவான தேசிய பிரச்சினையாகும்.

இவ்விடயத்தில் தேசிய பாதுகாப்புக்காகவும் தேசிய நல்லிணக்கத்திற்காகவும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தயாராக இருப்பதாக கூறியிருப்பதை நாம் வரவேற்கின்றோம்.

இதேவேளை நாட்டில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்திக் கொண்டிருக்காமல், இதை எமது நாடு எதிர்கொண்டுள்ள தேசியப் பிரச்சினையாகக் கருதி அனைவரும் ஒற்றுமையாக நின்று அதை எதிர்கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உறுதியையும் நாம் வரவேற்கின்றோம்.

நாடு எதிர்கொண்டுள்ள இந்த நெருக்கடியை எதிர்கொள்வதற்கு மதங்களையும், இன வேறுபாடுகளையும் கடந்து இலங்கையர்களாக நாம் அனைவரும் ஓரணி திரண்டு செயலாற்றுவதன் ஊடாகவே பயங்கரவாதத்திடமிருந்து நாட்டை மீட்டெடுத்து, இனங்களுக்கிடையே ஐக்கியத்தைப் பாதுகாக்க முடியும் என்பதையும் வலியுறுத்துகின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## இலங்கைத் தாக்குதல்கள் குறித்து தகவல் எதுவும் கிடைக்கவில்லை

### நியூசிலாந்து பிரதமர் தெரிவிப்பு



இலங்கையில் நடந்த தற்கொலைக் குண்டுத்தாக்குதல் தொடர்பில் நியூசிலாந்து பிரதமர் ஜெஸின்டா ஆர்டொன் முக்கிய தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

நியூசிலாந்தின் கிரைச்சேர்ஜ் பள்ளிவாசல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடியாகவே இலங்கையில் தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இலங்கைத் தாக்குதல் தொடர்பில் தமது நாட்டு புலனாய்வுத் துறையினருக்கு தகவல் கிடைக்கவில்லை என நியூசிலாந்து பிரதமர் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்தின் கிரைச்சர்ச்ஜில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு பதிலடியாக இலங்கையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நியூசிலாந்து பிரதமர் குறித்த விடயத்திற்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்,

இலங்கையின் விசாரணைகள் தற்போது ஆரம்பக்கட்டத்திலேயே உள்ளன என்பதைத் தான் புரிந்து கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் தற்கொலைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதற்கு 2 மணி நேரத்திற்கு முன்னதாக, அது குறித்து இந்தியப் புலனாய்வுத் துறையினர், இலங்கை புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டது எனத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவும், இந்தியத் தரப்பினரால், ஒரு முன் எச்சரிக்கை தகவல் வழங்கப்பட்டிருந்தது என இலங்கைத் தரப்பு தகவலொன்று குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## குண்டுத்தாக்குதல் குறித்து இந்தியா ஏற்கனவே அறிவித்திருந்ததை ஒப்புக்கொண்டார் பிரதமர்

(கொழும்பு)

இந்திய உளவுத்துறை வெடி குண்டுத் தாக்குதல் தொடர்பாக தகவல்களை அளித்ததாகவும் ஆனால் தாங்கள் அதுபற்றி கவனம் இல்லாமல் இருந்து விட்டதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த ஊடகத்திற்கு மேலும் தெரிவித்த அவர்,

“இந்தியா எங்களுக்கு சில உளவுத்துறைத் தகவல்களை அளித்தது.

ஆனால் நாங்களே சற்று கவனம் இல்லாமல் இருந்து விட்டோம். சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் உளவுத்துறையுடன் நாங்கள் தொடர்பில் உள்ளோம்.



வெளிநாட்டுச் சதி ஏதேனும் உள்ளதா? என்பது குறித்து வெளிநாட்டு நிறுவனங்களிடம் நாங்கள் உதவி கேட்டுள்ளோம்.

கடந்த மாதம் நியூசிலாந்தில் பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

அதற்குப் பதிலடியாக இலங்கையில் தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனக் கருதுகிறோம்.

தொடர் குண்டுவெடிப்பால் சுற்றுலாத்துறை பாதிக்கப்பட்டிருந்தாலும் இதிலிருந்து இலங்கை மீண்டு வரும்.

இதேபோன்று எகிப்து, பாலியிலும் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

அந்த நாடுகள் வெகு விரைவில் பழைய நிலைக்குத் திரும்பின.

இருந்தாலும் எங்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கு சிக்கலான விடயமே இங்கு நடந்திருக்கிறது.

இதுபோன்ற பல தீவிர வாதத் தாக்குதல்களையும் போர்களையும் நாங்கள் பார்த்து விட்டோம்” எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

## சாவகச்சேரி வைத்தியசாலைக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து முக்கிய நகரங்கள், வீதிகள், ஆலயங்கள் மற்றும் தேவாலயங்கள் ஆகியவற்றுக்கு பொலிஸ் மற்றும் இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவில் இருந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கும் இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் வைத்தியசாலையைச் சூழ பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருகின்ற னர்.

இதன் காரணமாகச் சற்று நேரம் வைத்தியசாலை ஊழியர்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டு பின்னர் தணிந்துள்ளது.(இ-5-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டானவில் குண்டு மீட்பு!



நீர்கொழும்பு, கட்டான திம்பிரிகஸ்கட்டுவ பகுதியில் பாதுகாப்புப் படையினர் பையொன்றிலிருந்து குண்டொன்றை மீட்டுள்ளனர். குறித்த குண்டை மீட்டெடுத்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் அதனை பாதுகாப்பாக செயலிழக்கச் செய்துள்ளனர். (இ-7)

## திறப்புவிழா பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

நாளை நடைபெறவிருந்த தந்தை செல்வா கலையரங்கத் திறப்பு விழாவானது நாட்டில் நடைபெற்ற துயரமான சம்பவங்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் உறவுகளின் உணர்வுகளைக்கருத்திற்கொண்டு பிற்போடப்பட்டுள்ளது.

திறப்பு விழா நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

### உலகத்துக்கு ஒரே கடவுள்!

# கொழும்பில் சுற்றித் திரியும் மோ.சைக்கிளால் பரபரப்பு




(கொழும்பு)

கொழும்பில் வெடிகுண்டு பொருத்தப்பட்ட லொறி, வான், மோட்டார் சைக்கிள்கள் சுற்றித் திரிவதாக பொலிஸார் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில், தற்போது "உலகத்துக்கு ஒரே கடவுள்" என்ற வாசகம் எழுதப்பட்ட நிலையில் கொழும்பில் சுற்றித் திரிவதாக கூறப்படும் மோட்டார் சைக்கிளால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அலுமினிய தகடுகளால் சுற்றப்பட்ட நிலையில் வெடி குண்டுகள் பொருத்தப்பட்ட லொறி, வான் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் கொழும்பில் சுற்றித் திரிவதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த வகையில், "உலகத்துக்கு ஒரே கடவுள்" என்று எழுதப்பட்ட மோட்டார் சைக்கிளொன்றும் கொழும்பின் பல பகுதிகளிலும் பயணித்து வருகின்றது எனவும், அதில், தான் தன்னையே கொலைசெய்துகொள்ளப் போவதாக எழுதப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 350 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன், 500 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உலக மலேரியா தினம் இன்று



இன்று உலக மலேரியா தினமாகும். வருடம் தோறும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி உலகமலேரியாதினமாகஅனுஷ்டிக்கப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டு இலங்கை மலேரியா அற்ற நாடாக உலக சுகாதார ஸ்தாபனத்தால் சான்றுப்படுத்தியிருந்தாலும் மலேரியாவின் கொடுமை என்ன என்பதை அறிந்த பல நாடுகளில் எமது இலங்கை நாடும் ஒன்று.

அனோபிலிஸ் இனப்பெண் நுளம்புகளினால் பரப்பப்படுகின்ற மலேரியா நோயானது மனிதரை இறப்பு வரை கொண்டு செல்லக்கூடியது. தற்போது டெங்கு நோய் போன்று ஒரு காலத்தில் மலேரியா காய்ச்சலினால் இலட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டனர்.

சார்க் வலய நாடுகளில் மலேரியாவை முற்றாக ஒழிப்பதில் இலங்கையும் மாலைதீவும் வெற்றி கண்டுள்ளன. இது தற்செயலாக நடந்த ஒரு செயற்பாடல்ல. எமது நாட்டில் மலேரியா ஒழிப்பு என்பது பல்வேறு தொடர் முயற்சிகளினால் நீண்ட காலமாக படிப்படியாக நடைபெற்றுள்ளது.

மலேரியாவிற்கு எதிரான போராட்டம் மிக நீண்ட வரலாற்றைக் கொண்டது. 1934, 1935 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்நோய் மிக தீவிரமடைந்து பல்லாயிரக்கணக்கானோர் இறந்தனர். 1945 ஆம் ஆண்டளவில் DDT என்ற நுளம்புக் கொல்லி அறிமுகப்படுத்தப்பட்டதோடு இதன் தீவிரம் படிப்படியாகக் குறைந்தது. 1963 இல் மலேரியா எதிர்பார்க்காத அளவு குறைவடைந்த போதும் இப்படியே மலேரியா குறைவடைந்து அற்றுப் போய் விடும் என ஏற்பட்ட நம்பிக்கையில் பேரிடி வீழ்ந்தது.

1968 இல் மீண்டும் பாரிய அளவில் மலேரியா நோய் தாக்கியது. மருந்துகள் தடுப்பு முறைகள் என அனைத்து சக்திகளையும் முறியடித்து மலேரியா கிருமிகள் முன்னேறின. நோய்க் கிருமிகளும் நோய்க்காவிகளும் மருந்துகளை தாக்குப் பிடிக்கும் சக்தியைப் பெற்றதாலேயே இந் நோய் மீண்டும் பாரிய அளவில் ஏற்பட்டதாக அறியப்பட்டது.

பின்னர் 1970 களில் மலத்தியோன் எனப்படும் நுளம்பு நாசினி பாவிக்கப்பட்டது நாம் அறிந்ததே. நுளம்பு நோயுள்ள ஒருவரைக் கடித்தபின் சுக தேகியைக் கடிப்பதால் நோய்க் கிருமி பரப்பப்படுகின்றது. பெரும்பாலும் குளிர் நடுக்கத்துடனான காய்ச்சலுடன் ஆரம்பிக்கும் இந்நோய் முறையான இடைவெளியில் விட்டுவிட்டு வருவது பிரதான நோய் அறிகுறிகளாகும். இந்நோயால் பாதிக்கப்படுபவர்களின் ஈரலில் நோய்க்கிருமி தங்கி வாழ்க்கை நடத்தி நீண்ட காலத்தின் பின்பும் மீண்டும் நோயை ஏற்படுத்தக் கூடும்.

இந்நோயைப் பரப்பும் நுளம்புகள் பெரும்பாலும் இரவு நேரங்களில் மனிதர்களைக் கடிப்பதால் உறங்கும் போது நுளம்பு வலைகளை பாவிப்பதாலும் வீட்டினுள் நுளம்பு கொல்லிகளைத் தெளிப்பதாலும் நோயிலிருந்து தப்பித்துக் கொள்ளமுடியும். இந் நோய்க் காவி நுளம்புகள் பெரும்பாலும் நன்னீரில்பெருகும்இயல்பு கொண்டவை. ஓடும் நீரிலும் தமது இனத்தை விருத்தி செய்யக் கூடியவை. எமது நாட்டின் காலநிலை இந் நுளம்புகளின் பெருக்கத்திற்கு ஏற்றதாக இருப்பதாலேயே இந் நுளம்புகளை ஒழிப்பதற்கு வல்லமையுடன் போராடவேண்டியுள்ளது.

கிணறு பொன்ற நன்னீர நிலைகளில் மீன்களை வளர்த்தலும் ஏனைய தேவையற்ற நீர்நிற்கும் இடங்களை மூடி விடுவதாலும் நோய்க்காவிகளின் குடம்பிகளை அழிக்க முடியும். இன்று இந் நோய் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டது என நாம் நிம்மதியாக இருக்க முடியாது. 1968, 1992 காலப்பகுதிகளில் இதேபோல பாரிய வீழ்ச்சிக்கு பின்னர் பல்லாயிரக்கணக்கான மக்களைப் பாதித்த வரலாற்றை ஞாபகத்தில் கொள்ளவேண்டும்.

இந்நோய் சிறுவர்களையும் கர்ப்பிணிகளையும் கூடுதலாக தாக்குவதால் மரண வீதங்களும் அதிகமாகவே காணப்படுகின்றன. தற்போது மலேரியா காணப்படும் நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருபவர்களால் இந் நோய் தோன்றக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு உதாரணமாக 2019 இல் இந்தியாவிலிருந்து வந்த நோயாளி ஒருவர் ஊடாக மொனராகலை மாவட்டத்தைச் சேர்ந்த இன்னுமொருவருக்கு மலேரியா தொற்று ஏற்பட்டது கண்டு பிடிக்கப்பட்டமை எச்சரிக்கை மணியாகும்.

வடமாகாணத்தை பொறுத்த வரை இந்தியாவில் இருந்து மலேரியா காவி நுளம்புகள் வருவதற்குரிய சாத்தியக் கூறுகளும், நோய்க் கிருமியானது நோயாளர்களூடாக காவப்பட்டு பரவக் கூடிய சான்றுகளும் பல உள்ளன. இந் நுளம்புகளால் மலேரியா நோய் மீண்டும் பாரிய அளவு பரவக் கூடிய சாத்தியக் கூறுகளும் உள்ளன. தற்போது உலகம் மிக சிறியதாக சுருங்கி விட்டது. ஒரு நாட்டிலிருந்து இன்னுமொரு நாட்டிற்கு செல்வதென்பது பக்கத்து ஊருக்கு போய் வருவது போலாகிவிட்டது. இந்நேரத்தில் நாம் விழிப்பாக இருக்க வேண்டும். மலேரியா நோய் உள்ள நாடுகளுக்கு செல்லும்முன் அந்தந்த மாவட்டங்களிலுள்ள மலேரியா தடை இயக்க அலுவலகங்களைத் தொடர்பு கொண்டு ஆலோசனைகளையும், தடுப்பு மருந்துகளையும் இலவசமாக பெறமுடியும். அதேபோல மலேரியாவுள்ள நாடுகளில் இருந்து இலங்கை வருவோர் தொடர்ந்தும் மிகவும் உன்னிப்பாக அவதானிக்கப்படுகின்றனர். ஆனாலும் இவை எல்லாவற்றையும் மீறி மீண்டும் மலேரியா உருவாகும் ஆபத்து தற்போது அதிகரித்து வருகிறது.

வீணான உயிரிழப்பு, பொருளாதார அழிவு, வளர்ந்து வரும் எம் சிறார்களின் கல்வி வளர்ச்சியில் பின்னடைவு போன்ற பல தேவையற்ற விளைவுகளை உருவாக்கும் இந்நோயை இல்லாது ஒழிப்பதற்கு ஒன்று படுவோம். மலேரியா அற்ற நாடாக இலங்கையை தொடர்ந்து தக்கவைப்பதற்கு இந் நாளில் நாம் அனைவரும் உறுதிபூணுவோம்.

**செல்லத்துரை மதியழகன்**
மலேரியா கட்டுப்பாட்டு மேற்பார்வை உத்தியோகத்தர்,
யாழ்ப்பாணம்.

## வியாபாரிகள் அஞ்சலி



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச்சந்தை வியாபாரிகள் அண்மையில் கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் பலியான மக்களுக்கு நேற்றுப் புதன்கிழமை காலை மரக்கறிச் சந்தை வளாகத்திற்குள் மெழுகு வர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

அத்துடன் குண்டுத் தாக்குதலில் காயமடைந்த உறவுகள் விரைவில் குணமாக வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்திருந்தனர்.

இந்த அஞ்சலி நிகழ்வில் சாவகச்சேரி மரக்கறிச் சந்தை வியாபாரிகள், பழக்கடை வியாபாரிகள் மற்றும் வர்த்தகர்கள் கலந்து கொண்டனர். (இ-30)

பழைமை வாய்ந்த
**ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்**



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

**ரெங்கசாமி**
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களுக்கு சென்னையில் மெழுகுவர்த்தி அஞ்சலி





(சென்னை)

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட குண்டுவெடிப்பில் பலியானவர்களுக்கு சென்னை பெசன்ட்நகர் கடற்கரையில் மெழுகுவர்த்தி ஏந்தி பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.


கொழும்பு மற்றும் சில பகுதிகளில் கடந்த 21 ஆம் திகதி தேவாலயங்கள் மற்றும் நட்சத்திரக் ஹோட்டல்கள், குடியிருப்பு வளாகம் என மொத்தம் 8 இடங்களில் அடுத்தடுத்து வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த சம்பவங்களில் 350 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த நிலையில் 500 இற்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இலங்கையில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்துக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையிலும் அதில் பலியானவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையிலும் சென்னை பெசன்ட்நகர் எலியட்ஸ் கடற்கரையில் நேற்று முன்தினம் மாலை மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

இதுகுறித்து அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் தெரிவிக்கையில்,

"இலங்கையில் நடந்த சம்பவம் போன்று இனி எங்கும் நடக்கக்கூடாது. அதற்காக நாம் பிரார்த்திக்க வேண்டும். குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று தெரிவித்தனர். (7)

# குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்களுக்கு யாழ்.பல்கலை. வவுனியா வளாகத்தில் அஞ்சலி





இலங்கையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஈஸ்ரர் தினத்தில் நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

வவுனியா வளாகத்தின் முதல்வர் ரி.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ் அஞ்சலி நிகழ்வில் முதலாவது சுடரினை கல்லூரியின் முதல்வர் ஏற்றி வைக்க அதனைத் தொடர்ந்து விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களுக்கு மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.(7-250)

# மன்னார் மறைமாவட்ட ஆயருடன் உலமா சபையினர் சந்திப்பு





(மன்னார்)

மன்னார் மாவட்ட ஜம் இயத்துல் உலமா சபையினருக்கும் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகைக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணியளவில் மன்னார் ஆயர் இல்லத்தில் இடம்பெற்றுள்ளது. மன்னார் மாவட்டத்தில் கத்தோலிக்க மற்றும் முஸ்லிம் மக்களின் நல்லுறவு தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் என்ற நோக்குடன் இச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பின் போது கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈஸ்டர் தினத்தன்று நாட்டில் இடம்பெற்ற துக்ககரமான சம்பவத்திற்கு அனுதாபத்தையும் கண்டனத்தையும் மன்னார் ஜம் இயத்துல் உலமா அமைப்பினர் மன்னார் மறைமாவட்ட ஆயரிடத்தில் தெரிவித்துக் கொண்டனர். மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம்கள் மற்றும் கத்தோலிக்க மக்களுக்கு இடையிலான உறவு இத்தகைய துன்பகரமான செயலினால் சீர்கெட்டு விடக்கூடாதென்பதுடன், நல்லுறவை ஏற்படுத்தும் முகமாக பள்ளிவாசல்கள், ஆலயங்களில் சமய சொற்பொழிவுகள் இடம்பெற வேண்டுமென ஆயரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (7-285)

# நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டி மன்னாரில் விசேட கூட்டுத் திருப்பலி





நாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிர் நீத்தவர்களுக்காகவும் நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதற்காகவும் மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நேற்று புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் விசேட திருப்பலி கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப் பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிர்ப்பு பெருவிழா திருப்பலிகள் இடம்பெற்ற போது நாட்டில் தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களில் குண்டு வெடிப்பு சம்பவம் இடம்பெற்றது.

குறித்த சம்பவத்தின் போது சுமார் 350 இற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளதோடு, பல நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த நிலையிலேயே இவ் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத் திருப்பலியில் மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் கலந்து கொண்டு திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இடம்பெற்ற இத் திருப்பலியின் போது பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் விசேட பாதுகாப்பினை வழங்கி இருந்தனர். (7-285)

# குண்டுத் தாக்குதல் குறித்த முன்னாயத்தங்கள் மத்திய மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டன

## மைத்திரி குணரட்ன கூறுகிறார்



குண்டுத் தாக்குதல் குறித்த முன்னாயத்தங்கள் மத்திய மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டன.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் பங்கேற்காத போதிலும் ஒரு சில கடும்போக்குவாதிகள் தொடர்புபட்டுள்ளனர் எனவும் மாகாண ஆளுநர் மைத்திரி குணரட்ன தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாண ஆளுநர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாதுகாப்பு கூட்டமொன்றிலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பிலான பொறுப்பை பொலிஸ்மா அதிபர் ஏற்றுக்கொள்ளவுமில்லை, அவர் பதவியை இராஜினாமா செய்யவுமில்லை எனத் தெரிவித்தார்.

தலதாமாளிகை, கிறிஸ்தவ தேவாலயங்கள் உள்ளிட்ட கண்டியின் அனைத்து மத வழிபாட்டுத் தலங்களுக்கும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என மேலும் தெரிவித்துள்ளார். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரந்தனில் நேற்று அஞ்சலி






தீவிரவாதத் தாக்குதல் காரணமாக இலங்கையில் மிலேச்சத்தனமாகக் கொல்லப்பட்ட மக்களுக்கான கண்ணீர் அஞ்சலி நிகழ்வு மிகவும் உணர்வுபூர்வமாக பரந்தன் வர்த்தக சங்கத்தின் ஒழுங்கமைப்பில் பரந்தன் நகர பேருந்து நிலையத்தில் நடைபெற்றுள்ளது.

மனிதவெடிகுண்டுத் தாக்குதல்கள் மூலம் கொடூரமாகக் கொல்லப்பட்ட அனைவருக்குமான கண்ணீரஞ்சலி நிகழ்வு பரந்தன் வர்த்தக சங்கத்தின் ஒழுங்கமைப்பில், பரந்தன் வர்த்தகர்களாலும் பரந்தன் வாழ் மக்களாலும் பரந்தன் நகர் பேருந்து நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு நேற்றுக் காலை 9 மணிக்கு மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெற்றுள்ளது. (7-312)

# மாங்குளம் பகுதியில் தேடுதல் நடவடிக்கை



(பனிக்கன்குளம்)

நாட்டில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து பல்வேறு பகுதிகளிலும் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் முப்படைகளின் தேடுதல்கள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான நகராகக் காணப்படுகின்ற மாங்குளம் நகர்ப் பகுதியில் பிரதான வீதிகளில் இராணுவத்தினரால் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டு இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வருகின்ற வாகனங்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி வருகின்ற வாகனங்களும் அதேபோன்று முல்லைத்தீவு வீதியில் வருகின்ற வாகனங்கள் துணுக்காய் வீதியினூடாக வருகின்ற வாகனங்கள் என அனைத்து வாகனங்களை மறித்து பயணிகள் இறக்கப்பட்டு சோதனையிடப்பட்ட பின்னர் வாகனங்கள் மீண்டும் செல்ல அனுமதிக்கப்படுகின்றன. இதனால் மக்கள் யுத்த காலங்களில் எதிர்கொண்டதை போன்ற போக்குவரத்து நடைமுறைக்கு தள்ளப்பட்டுள்ளதாக கருத்து தெரிவித்தனர். (7-281)

## மன்னார் பொது வைத்தியசாலையில்


# மறு அறிவித்தல் வரும் வரையில் 4.30 மணி வரையுமே நோயாளர் சேவை

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதரண சூழ்நிலை காரணமாக வேலை நாட்களில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் (opd)யில் மறு அறிவித்தல் வரும் வரை மாலை 4.30 வரையுமே நோயாளர் சேவை நடைபெறும்.

மாலை 4.30 மணிக்கு பின்பு வரும் நோயாளர்கள் அவர்களின் நோயின் தன்மையை கருத்தில் எடுத்து அவர்கள் விடுதியில் சேர்க்கப்படுவார்கள் (wode). எனினும் நோயாளருக்கு முழுமையான சேவையினை செய்ய முடியாததையிட்டு மன்னார் மாவட்ட வைத்தியசாலை நிர்வாகம் வேதனை அடைவதோடு சம்பவத்தில் இறந்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து காயமுற்றவர்களுக்கு குணமடைய இறைவனைப் பிராத்தித்து நிற்கின்றது. (7-286)




# மன்னாரில் இன்றும் துக்கதினம் அனுஷ்டிப்பு






(மன்னார்)

நாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களைக் கண்டித்தும் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் நேற்று புதன்கிழமை காலை முதல் மன்னார் பஸார் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு வர்த்தக நிலையங்களுக்கு முன் கறுப்புக் கொடி ஏற்றி பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கிறிஸ்தவ தேவாலயங்களில் இடம்பெற்ற காட்டுமிராண்டித் தனமான குண்டுத்தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கும் விதமாக எழுதப்பட்ட வாசகங்களும் பள்ளி வாசல்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. (7-285)

# குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களுக்கு மன்னாரில் இளைஞர்களால் அஞ்சலி





இலங்கை முழுவதும் பெரும் சோகத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்திய தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் உயிரிழந்த அனைத்து உறவுகளுக்கும் இளைஞர்களால் அஞ்சலி செலுத்தப்பட்டது.

மன்னார் பொது வைத்தியசாலை சுற்றுவட்டத்தில் அனைவரின் ஆத்மாக்களும் சாந்தி கொள்ளவேண்டும் என்ற அடிப்படையிலும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கும் முகமாகவும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டதுடன் விளக்குகள் ஏற்றியும் மன்னார் பொது வைத்தியசாலை சுற்றுவட்டத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது. (7-285)

# மாந்தை மேற்கு இந்து மக்கள் பேரவை கண்டனம்

(மாந்தை)

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாட்டில் பல இடங்களில் புனித வழிபாட்டில் ஈடுபட்ட கத்தோலிக்க மக்கள் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான குண்டுத் தாக்குதலினை மாந்தை மேற்கு இந்து மக்கள் பேரவை வன்மையாகக் கண்டிப்பதுடன் காயமடைந்த உறவுகள் விரைவில் குணமடைய இறைவனை பிரார்த்தித்து உங்கள் துயரில் நாங்களும் பங்கு கொள்கின்றோம்.

அத்தோடு இன, மத, பேதமின்றி வைத்தியசாலையில் இரத்ததானம் வழங்க முன்வந்து இணைந்துகொள்ளுமாறு கேட்டு நிற்கின்றோம்.

இப்படியான செயல்களில் ஈடுபடும் சூத்திரதாரர்களை சட்டத்திற்கு முன் நிறுத்தி இலங்கைத்தாய் திருநாட்டின் ஜனநாயக விழுமியங்களை மதித்து அமைதி நிலை நாட்டுமாறு வேண்டி நிற்கின்றோம். (7-286)

# புத்தாண்டு நிகழ்வு இடம்பெறாது

நாட்டில் இடம்பெற்றுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக மாந்தை மேற்கு இந்து மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறவிருந்த தமிழ்-சிங்களப் புத்தாண்டு நிகழ்வுகள் மறுஅறிவித்தல் வரை நடைபெறமாட்டாது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (7-286)




கடந்த 21 ஆம் திகதி ஈஸ்டர் தினத்தன்று உயிர்நீத்த உறவுகளுக்கு கிளிநொச்சி பொதுச்சந்தையில் நேற்று முன்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது. (படங்கள்:-கிளிநொச்சி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# பயங்கரவாதத்துக்கு எதிரான கரங்கள் ஒன்று சேரட்டும்!



ஈஸ்டர் தினத்தன்று இலங்கையில் நடத்தப்பட்ட தொடர் குண்டுவெடிப்பு உலக மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது. 2009இல் முடிவுக்குவந்த உள் நாட்டுப் போருக்குப் பிறகு இலங்கை மீண்டும் பாதுகாப்பும் அமைதியும் அற்ற சூழலுக்கு மாற்றப் பட்டிருக்கிறது. கால் நூற்றாண்டு காலமாக அமைதியின்மையால் நிலைகுலைந்திருந்த சூழலிலிரு ந்து நாடு மீண்டுவரும் நேரத்தில் ஒரு பேரிடியைச் சந்தித்திருக்கிறது.

ஈஸ்டர் தினத்தன்று அதிகம் பேர் கூடும் இடங்களாகத் தேர்ந்தெடுத்து இந்தத் தாக்குதல் நடத்தப் பட்டிருக்கிறது. தலைநகரில் கடற்கரையோரமாக அமைந்துள்ள மூன்று நட்சத்திர விடுதிகளில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் காலைச் சிற்றுண்டி உண்ணும் நேரத்திலும் கொழும்பு, நீர் கொழும்பு மற்றும் பாட்டிகோலாவில் உள்ள தேவாலயங்களில் ஈஸ்டர் பிரார்த்தனைகள் நடக்கும் நேரத்திலுமாகக் குண்டு வெடிப்புகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

உள்நாட்டில் மட்டும் அல்லா மல் சர்வதேச அளவிலும் அதிர்வை ஏற்படுத்தும் நோக்கத்தைச் சதிகாரர்கள் கொண்டிருந்தது அவர்களுடைய இலக்குகளின் வழியே துல்லியமாகிறது. இலங்கையிலிருந்து வரும் முதல் கட்டத் தகவல்கள், இஸ்லாமிய பயங்கரவாதக் குழு ஒன்றால் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும் தாக்குதலில் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றன. அதை உறுதிப்ப டுத்துவதுபோல ஐ.எஸ். அமைப்பும் இச்சம்பவத்துக்குப் பொறுப்பேற்றிருக்கிறது.

இந்தச் சம்பவத்தில் இலங்கைக்குள்ளும் வெளியிலுமாக எந்தெந்த அமைப்புகளெல்லாம் கைகோர்த் திருக்கின்றனவோ அவ்வளவும் வேரறுக்கப்பட வேண் டும். இந்தக் கொடூரத்தில் 320 இற்கும் மேற்பட்டோர் பலியாகியி ருக்கிறார்கள். 500இற்கும் மேற் பட்டோர் படுகாயமடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கான குறை ந்தபட்ச நியாயமாக இலங்கை அரசு எடுக்கும் பயங்கரவாதத்துக்கு எதிரான கடும் நடவடிக்கைகளே அமையும். இலங்கையை இன்னொரு இனவாதச் சிக்கலுக்குள் இச்சம்பவம் கொண்டுபோய் விட்டுவிடக் கூடாது. பெரும் துயரத்தை மிகுந்த மனமுதிர்ச்சியோடு மத, இன வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் உறுதியோடு இன்று நிற்கிறார்கள் இலங்கையர்கள். இந்த ஒற்றுமையும் உறுதியும் தொடர வேண்டும். வெளிநாடுகளிலிருந்து அளிக்கப்பட்ட உளவுத்துறை எச்சரிக்கைகளை இலங்கை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை என்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதுகுறித்து விசாரணை நடத்த உத்தரவிட்டிருக்கிறார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது வருத்தத்தைத் தெரி வித்திருக்கிறார். இலங்கை அரசு இந்தச் சூழலில் எந்தவொரு சமூ கத்துக்கு எதிராகவும் வதந்திகள் பரவாமல் தடுத்திருப்பது சரியான அணுகுமுறை. இது மேலும் சூழலை மோசமாக்காமல் தடுத்திருக்கிறது.

இத்தாக்குதலுக்கு ஐ.எஸ்.அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் நிலையில், அந்த அமைப்புக்கு எதிரான நடவடிக்கைகள் சர்வதேச அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் மேலும் முக்கியத்துவம் பெறுகிறது. மனித குலம் தன்னைத்தானே நெறிப்படுத்திக்கொள்ளத்தான் மதங்கள். அந்த மதங் களே சக உயிர்களைக் கொல்லும் காரணம் ஆக்கப்படும் என்றால் அதற்கு எதிரான போரில் மத நம்பிக்கையா ளர்களே முதல் வரிசையில் நிற்க வேண்டும். பயங்கரவாதத்தைக் கரங்கள் கோர்த்து முறியடிப்போம்.

**த ஹிந்து ஆசிரியர் தலையங்கம்**

# மாணிக்கக்கல் சுரங்

# 50 தொழிலாளர்

(யாங்கூன்)

**மியன்மார் நாட்டில் பச்சை மாணிக்கக்கல் வெட்டி எடுக்கும் சுரங்கத்தில் நேற்று ஏற்பட்ட நிலச்சரிவில் 50 பேர் உயிரி ழந்துள்ளனர்.**



மியன்மர் நாட்டின் வடபகு தியில் உள்ள கச்சின் மாநிலத் தில் பச்சை மாணிக்கக் கற்களை வெட்டி எடுக்கும் சில சுரங்காங் கள் இயங்கி வருகின்றன.

அவற்றில் ஒரு சுரங்கத்தில் நேற்று திடீரென்று நிலச்சரிவு ஏற் பட்டது.

சுமார் 55 தொழிலாளர்கள் சுரங் கத்தின் ஆழமான பகுதியில் இருந்த போது ஏற்பட்ட இந்த நிலச்சரிவில் 50 பேர் உயிரிழந்தனர். (7)

# உகண்டாவில்

# 18பேர் பலி,1000

(கம்பாலா)

கிழக்காபிரிக்க நாடுகளில் ஒன்றான உகண்டாவின் இரு மாநிலங்களில் கொட்டித்தீர்த்த பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் 18 பேர் உயிரிழந்தனர்.

உகண்டா நாட்டின் கிழக் கில் உள்ள புயென்டே மற்றும் கமுலி மாநிலங்களில் நேற்று முன்தினம் இரவு கனமழை கொட்டித் தீர்த்தது.

இடைவிடாது பெய்த பெரும ழையினால் கியோலா ஏரியை ஒட்டி தாழ்வான இடங்களில் உள்ள குடியிருப்பு பகுதிகளை வெள்ளம் சூழ்ந்தது.

வெள்ளப் பெருக்கினால்



# முன்கூட்டியே இந்தியா எச்சரித்தும் தாக்குதலை தடுக்கத் தவறியது ஏன்?

## இலங்கையிடம் சர்வதேச ஊடகங்கள் கேள்வி

(சென்னை)

முன்கூட்டியே இந்தியா எச்ச ரித்தும் தீவிரவாத தாக்குதலை இலங்கை தடுக்கத் தவறியது ஏன் என்று சர்வதேச ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

கடந்த ஈஸ்டர் பண்டிகையின் போது இலங்கையில் 3 தேவா லயங்கள், 3 நட்சத்திர ஹோட டல்கள் உட்பட 8 இடங்களில் தொடர் குண்டுவெடிப்புகள் நிகழ் த்தப்பட்டன.

இதில் 350இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 500 இற்கும் மேற் பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். இதுவரை 40 பேர் கைது செய்யப்பட்டு ள்ளனர்.

சிரியாவை தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் ஐஎஸ் அமைப்பு தாக் குதலுக்கு பகிரங்கமாக பொறுப்பேற்று ள்ளது. இலங்கையை சேர்ந்த தேசிய தௌஹீத் ஜமாத் என்ற அடிப்படைவாத குழு, ஐஎஸ் உடன் இணைந்து தாக்கு தலை நடத்தி உள்ளது என்று அந்த நாட்டு பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

இலங்கையில் தீவிரவாத தாக்குதலு க்கான அச்சுறுத்தல் இருப்பதாக கடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ங்கத்தில் நிலச்சரிவு

# ர்கள் உயிரிழப்பு!



# நைஜீரியாவில் கார் விபத்து 10 பேர் சம்பவ இடத்திலேயே பலி

(அபுஜா)

நைஜீரியாவில் மக்கள் கூட்டத்துக்குள் கார் புகுந்து விபத்துக்குள்ளானதில் 10 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். அத்தோடு இந்த விபத்தை ஏற்படுத்தியவர்களை மீது மக்கள் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள கோம்பி மாகாணத்தில் சபோன்-லாயி என்ற இடத்தில் செயின்ட் பீட்டர் அங்கிலிகன் தேவாலயம் உள்ளது.

கடந்த ஞாயிறு மாலை ஈஸ்டர் பண்டிகை கொண்டாட்டத்தையொட்டி ஏராளமானவர்கள் அங்கு திரண்டிருந்தனர். சிறுவர்கள் உட்பட பலர் தேவாலயத்துக்கு வெளியே கூட்டமாக நின்று கொண்டிருந்தனர்.

இதன்போது, பொலிஸ் அதிகாரி ஒருவரின் கார் திடீரென அவரின் கட்டுப்பாட்டை இழந்து, மக்கள் கூட்டத்துக்குள் புகுந்துள்ளது.

இந்த விபத்தில் வீதியில் நின்றவர்கள் தூக்கி வீசப்பட்டும் கார் சக்கரத்தில் சிக்கியும் 10 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். (7)

# சவுதியில் 37 பயங்கரவாதிகளுக்கு நேற்று மரணதண்டனை நிறைவேற்றம்


(ரியாத்)

சவுதி அரேபியா நாட்டில் பயங்கரவாத வழக்குகளில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 37 பேருக்கு நேற்று மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

சவுதி அரேபியா நாட்டில்கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரம், போதைப்பொருள் கடத்தல் மற்றும் பயங்கரவாத குற்றங்களில் ஈடுபடுவோருக்கு மரணதண்டனை வழங்கப்படுகிறது.

இந்நிலையில், நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் பயங்கரவாத சித்தாந்தத்தை பரப்பியும், பயங்கரவாதிகளாக செயற்பட்டும் வந்த உள்நாட்டினர் 37 பேருக்கு நீதிமன்ற தீர்ப்பின்படி நேற்று தலைகளை வெட்டி, மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. (7)

# ல் கனமழை; 0பேர் படுகாயம்



பல வீடுகளின் சுவர்கள் இடிந்து விழுந்தன. சிலர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இந்நிலையில், மழை மற்றும் வெள்ளம்சார்ந்த விபத்துகளில் புயெண்டே மாநிலத்தில் 13 பேரும் கமுலி மாநிலத்தில் 5 பேரும்உயிரிழந்ததாக உகண்டா ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், காயமடைந்த சுமார் 100 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# இணையம் மூலமான தீவிரவாதத்தை சமாளிக்க பிரான்ஸ்டன் இணைந்து நடவடிக்கை

## நியூசிலாந்து பிரதமர் அறிவிப்பு



(வெலிங்டன்)

இணையம் மூலமான தீவிரவாதத்தை சமாளிப்பதற்கு பிரான்ஸ்டன் இணைந்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாக நியூசிலாந்து அறிவித்துள்ளது.

ஆக்லாந்தில் நேற்று புதன் கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், "மார்ச் 15 நியூசிலாந்து தீவிரவாத தாக்குதல் சமூக வலைத்தளத்தில் பதிவேற்றப்பட்டிருந்தது.

இந்நிலையில், இது தொடர்பாக பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவெல் மக்ரோனுடன் மே மாத நடுப் பகுதியளவில் பேச்சுவார்த்தையொன்றை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, பேஸ்புக் உள்ளிட்ட இணையத்தின் ஊடான வன்முறை தீவிரவாதத்தை தடுப்பதற்கான முயற்சியாகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது" எனத் தெரிவித்தார்.

50 பேரின் உயிரை காவுகொண்ட கிறிஸ்ட்சேர்ச் மசூதி தாக்குல்கள் சமூக வலைத்தளத்தில் பதிவேற்றப்பட்டிருந்தது. இதனையடுத்து உலகின் மிகப்பெரிய சமூக வலைத்தளம் பலத்த விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

4ஆம் திகதி இந்தியா இரகசியமாக எச்சரிக்கை விடுத்தது. இதுதொடர்பான முக்கிய ஆவணங்களையும் அளித்தது. ஆனால் இலங்கை அரசு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது.

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பினர் ஐஎஸ் அமைப்புடன் தொடர்பில் இருப்பதும் வெடிபொருட்களை பதுக்கி வருவதும் பாதுகாப்புப் படையினருக்கு முன்னரே தெரியவந்துள்ளது. அந்த அமைப்பைச் சேர்ந்தவர்களின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி எண்கள் ஆகியவற்றையும் உளவுத் துறை, பாதுகாப்புத்துறைக்கு வழங்கியுள்ளது. ஒரு தீவிரவாதி நள்ளிரவில் தனது மனைவியை சந்திப்பதையும் உளவுத்துறை முன்கூட்டியே தெரிவித்துள்ளது.

இந்தியாவின் எச்சரிக்கை, இலங்கை உளவுத் துறையின் ரகசிய தகவல்களுக்குப் பிறகும் இலங்கை அரசு தீவிரவாத தாக்குதலை தடுக்கத் தவறியது ஏன் என்று நியூயோர்க் டைம்ஸ் உள்ளிட்ட சர்வதேச ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள்ளன. இதற்கு ஜனாதிபதி பிரதமர் இடையிலான மோதலே முக்கிய காரணம் என்றும் அந்த ஊடகங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. (7)

# இரசாயன ஆலையில் தீ 3 தொழிலாளர்கள் உயிரிழப்பு

(பீஜிங்)

சீனாவின் இன்னர் மங்கோலியா பகுதியில் உள்ள இரசாயன தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் 3 தொழிலாளர்கள் பலியாகினர். சீனாவின் இன்னர் மங்கோலியா தன்னாட்சி பிராந்தியத்தில் உள்ள டோங் சிங் கெமிக்கல்ஸ் என்ற இரசாயன தொழிற்சாலையில் நேற்று அதிகாலை வழக்கம்போல் தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருந்தபோது, ஆலையின் ஒரு பகுதியில் உள்ள கொள்கலன் வெடித்து விபத்து ஏற்பட்டது.

இதுபற்றி உடனடியாக தீயணைப்பு படைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தீயணைப்பு படை வீரர்கள் சம்பவ இடத்திற்கு வந்து தீயை கட்டுப்படுத்தி மீட்பு பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் 3 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். 5 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். சீனாவில் அண்மைக்காலமான இரசாயன ஆலைகளில் விபத்து அதிகரித்துள்ளது. கடந்த மார்ச் மாதம் நடந்த இரண்டு விபத்துகளில் 85 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து, இரசாயன ஆலைகளில் உள்ள பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் தொழிலாளர் பாதுகாப்பு குறித்து அதிகாரிகள் சோதனை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசமான சக்திகளை நாட்டிலிருந்து முற்றாக களைய வேண்டும்!

## சபாநாயகர் கருஜெயசூரிய காட்டம்



(கொழும்பு)

**குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் இருக்கும் மோசமான சக்திகள் எமது தாய் நாட்டிலிருந்து முற்றாக களைந்தெறியப்பட வேண்டும். அதற்காக அனைவரும் இலங்கையர்களாக ஐக்கியமாக கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பின்வாங்கக் கூடாது என சபாநாயகர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.**

அத்துடன் இது ஒரு இனத்துக்கோ மதத்துக்கோ எதிரானதல்ல. மாறாக எமது தாய் நாட்டுக்கும் அனைத்து மக்களதும் நல்லிணக்கத்துக்கும் சக வாழ்வுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகும். இதனைக் குறுகிய, இனவாத கோணத்தில் பார்க்காமல் நிதானமான சிந்தனையுடன் முகம்கொடுத்து சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் பாதுகாத்து மக்களுக்கு மரியாதை செலுத்துவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் விசேட அமர்வாக பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் கூடியது. இதன்போது சபாநாயகரின் அறிவிப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# குண்டுத் தாக்குதலால் உயிர்நீத்த உறவுகளுக்கு சுவிஸில் அஞ்சலி





(பேர்ன்)

இலங்கையில் நடந்த தொடர் குண்டுத் தாக்குதலால் உயிரிழந்த அப்பாவிப் பொதுமக்களுக்கு சுவிஸ் - பேர்ன் நகரில் மலரஞ்சலி செலுத்தி தீபமேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

இதில் சமூக செயற்பாட்டாளர்கள், ஆன்மீகத் தொண்டர்கள், தமிழ் வர்த்தகர்கள், முன்னாள் போராளிகள், பன்னாட்டுச் சமூகத்தினர், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (இ-7)

# இலங்கையில் கொடூரத் தாக்குதல்கள்! இயக்குநர் பாரதிராஜா கடும் கண்டனம்

## "21 ஆம் திகதி உலகிற்கு இருண்ட நாள்"

(சென்னை)

இலங்கையில் நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதல் கடும் கண்டனத்துக்குரியது என இயக்குநர் பாரதிராஜா கண்டனம் தெரிவித்துள்ளார்.



உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களின் போது 350 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டும், 500 பேர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றும் வருகின்றனர். இத் தாக்குதல் தொடர்பில் உலக நாடுகள் பலவும் கண்டனம் தெரிவித்து வருகின்ற அதேவேளை, திரை பிரபலங்கள், விளையாட்டு வீரர்களும் தங்கள் கண்டனத்தைப் பதிவு செய்துள்ளனர்.

இது தொடர்பில் இயக்குநர் பாரதிராஜா காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி உலகிற்கு ஒரு இருண்ட நாளாக மாறியுள்ளது. மக்களைக் கொன்று குவிப்பதற்கு யாருக்கும் உரிமையில்லை என்று காட்டமாகப் பேசியுள்ள அவர், இத் தாக்குதல்களைச் செய்தவர்கள் மனிதர்கள் அல்ல. அது மனிதமும் அல்ல என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்த வேளை புகையிரதம் மீது கல்வீச்சுத் தாக்குதல்

(பெலியத்த)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் இரவு 9 மணி முதல் நேற்று அதிகாலை 4 மணி வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தாக்குதல் சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

பெலியத்த - ஓவிலான பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு 10.45 மணியளவில் புகையிரதமொன்றின் மீது கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலி புகையிரத நிலையத்திலிருந்து, பெலியத்த புகையிரத நிலையம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த புகையிரதம் மீதே இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் காயமடைந்த புகையிரதத்தின் சாரதி பெலியத்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த கல்வீச்சுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பெலியத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## விளையாட்டின் விபரங்கள்

ஓடி விளையாடு பாப்பா என்று பாடியது எதற்காக? சின்ன வயதிலிருந்தே உடம்பை நல்லா வைத்திருக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

ஓடி விளையாடு தாத்தா – நீ
ஒய்ந்திருக்கலாகாது தாத்தான்னு பாடலே!

ஏனென்றால் அந்த வயதிலே ஓய்வுதான் முக்கியம். ஓடுவது முக்கியமில்லை. ஓடி விளையாட ஆரம்பித்த மனிதன் இன்று ஒலிம்பிக் பந்தயம் நடத்தும் அளவிற்கு வந்துவிட்டான்! இன்றில்லை கி.மு.1370 இல் ஒலிம்பிக் பந்தயம் ஆரம்பிக்கப்பட்டது.

கிரேக்க நாடுகளிலேயே முதன்முறையாக ஆரம்பமாகியது. 'ஒலிம்பியா' எனும் சமவெளியிலே போட்டிப் பந்தயம் எல்லாம் முதலில் நடந்தது.

அதனாலே ஒலிம்பிக் 'போட்டி எனும் பெயர் வந்தது! முதல் ஒலிம்பிக் பந்தயம் எத்தனை நாள் நடந்தது என நினைக்கின்றீர்கள்? ஒரே ஒரு நாள்தான்! அதுமட்டுமல்ல ஒரேயொரு போட்டி பந்தயமாக நடந்தது! அது என்ன தெரியுமா? 186 கஜம் ஓட்டப்பந்தயம்! இப்போதெல்லாம் எத்தனை விதமான விளையாட்டுக்கள்! எத்தனை விதமான பந்தயங்கள்.

உடம்பிற்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். அது உற்சாகமாகவும் இருக்க வேண்டும். அதற்காக மனிதன் எத்தனையோ விதமான விளையாட்டு முறைகளை உருவாக்கியிருக்கின்றான். கலை நுணுக்கம் என்பவற்றையும் அதில் கலந்திருக்கின்றான். Shuttle Cock இருக்கு இறகுப் பந்து!

இந்தியாவிலே ஞானேந்திரபோஸ் என்பவர்தான் இதை முதலில் தயார் செய்தார். முதலில் கொக்கின் இறகைப் பயன்படுத்திப் பார்த்தார் சரிவரவில்லை. பின்பு வாத்து இறகை உபயோகப்படுத்தினார். பொருத்தமாக இருந்தது! வீட்டுக்குள்ளே விளையாடுவதற்கான பந்திலே 72 மணிகள் அதாவது grains இருக்கும். வெளியிலே விளையாடுவதற்கான பந்திலே 84 மணிகள் இருக்கும். பொதுவாக 16 இறகுகள் இருக்கும். இறகுப் பந்து விளையாட்டு இறகு மாதிரி மென்மையாக உள்ள ஒன்று!

ஆனால் மல்யுத்தப் போட்டியிருக்கே... இதற்கு நேர் விரோதம்! முகத்தில் எல்லாம் கூட நேரடியாக குத்து வாங்க வேண்டி வரும். இன்றைக்கு மல்யுத்த வீரர்கள் தேடிப் பிடித்து வாங்கும் பழம் எது தெரியுமா? அதுதான் அன்னாசிப்பழம்! உலக மல்யுத்த வீரர்கள் சங்கமே இதனை சிபார்சு செய்கின்றது. காரணம் என்னவென்றால் மல்யுத்தம் செய்யும் போது முகத்தில், கண்ணுக்குப் பக்கத்தில் நிறைய குத்து விழும். உடலில் பல இடங்களில் காயம் ஏற்படும். அப்போது இரத்தம் கட்டிக்கும், கண்டிப் போகும். அன்னாசிப்பழத்திற்கு இரத்தக் கட்டை உடைக்கக் கூடிய அபார சக்தி இருக்கு!

அதனாலே குடும்பஸ்தர்கள் எல்லோரும் கிடைக்கும் போதெல்லாம் கொஞ்சம் கொஞ்சம் அன்னாசிப்பழத்தை வாங்கிச் சாப்பிட்டு வந்தால் ஒரு பாதுகாப்பாக இருக்கும் என நினைக்கின்றேன்.

நான் ஏதோ குடும்பஸ்தர்களைக் கேலி செய்வதாக நினைக்க வேண்டாம். மனைவி சொல்வது தான் மந்திரம் என்று நினைக்கின்ற கணவன்மார்களும் இருக்கின்றார்கள்! கணவன் சொல்வது தான் மந்திரம் என்று நினைக்கின்ற மனைவிமார்களும் இருக்கின்றார்கள்.

இந்த மந்திரத்திற்கு கட்டுப்படாமல் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் தம்பதிகளும் இருக்கின்றார்கள்.

இப்படி சண்டை போடுபவர்கள் கைவசம் கொஞ்சம் அன்னாசிப்பழம் வைத்திருப்பதுதான் நல்லது என்பதுதான் எனது ஆலோசனை! சண்டையே போடாமல் சாமர்த்தியமாக குடும்பம் நடத்துபவர்களும் இருக்கின்றார்கள். குடும்பஸ்தர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு கூட்டம் போட்டார்களாம்!

அந்தக் கூட்டத் தலைவர் இந்தக் கூட்டத்திலே மனைவிக்குப் பயந்தவர்கள் எத்தனை பேர்? அவர்களெல்லாம் கையை உயர்த்துங்கள் என்றார்.

அங்கே இருந்த அனைவரும் கையைத் தூக்கினார்கள்! தலைவருக்கு மிகவும் வெட்கமாகப் போய்விட்டது. வீரமுள்ள ஆண் மகன் ஒருத்தன் கூட இல்லையா? என்று தேடினார்கள்.

பார்த்தால் ஒரு ஓரத்திலே ஒருத்தர் கையைத் தூக்காமல் உட்காத்திருந்தார். பரவாயில்லை இதே கூட்டத்தில் ஒருத்தர் தைரியமாக உட்காந்திருக்கின்றார் என்று சொல்லி அவரிடம் போனார்கள். அதற்கு அவர் என் மனைவியைக் கேட்காமல் எப்படி நான் கையைத் தூக்க முடியும்? என்றார்.

குடும்பம் என்பது ஒரு விளையாட்டுப் போட்டி மாதிரித்தான். அதில் சிலர் இப்படி சாமர்த்தியமாக விளையாடி வெற்றியடைகின்றார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் வெடிகுண்டு தயாரிப்பு தொழிற்சாலை!

## பிரித்தானிய ஊடகம் பரபரப்பு தகவல்





(கொழும்பு)

இலங்கையில் மேற்கொள் ளப்பட்ட தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்களுக்கு தேவையான அனைத்து வெடி குண்டுகளும் உள்நாட்டில் தயா ரிக்கப்பட்டவை என பிரித்தானிய ஊடகம் ஒன்று தகவல் வெளி யிட்டுள்ளது.

வெல்லம்பிட்டிய பிரதேசத் திலுள்ள செப்பு தொழிற்சாலை யில் வெடிகுண்டுகள் தயாரிக்கப் பட்டுள்ளதாக குறித்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்கொலை குண்டுதாரியான இன்ஷாப் அஹமட் என்பவருக்கு இந்தத் தொழிற்சாலை சொந்த மானது என பொலிஸார் கண்டு பிடித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலில் 350 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த நிலையில் 500க்கும் அதிக மானோர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதலுக்கு பிரதான திட்டங்களை தீட்டிய இன்ஷாப் அஹமட் கண்டி பிரதேசத்தில் பிறந்துள்ளார். கொழும்பில் உள்ள பிரபல பாடசாலையில் கல்வி கற்றுள்ளார் என அவரது மனைவியின் சகோதரர் அக் ஷான் அலாம்தீன் தெரிவித்துள் ளார்.

இன்ஷாப் அஹமட் என்பவர் கொழும்பு சினமன் கிரான்ட் ஹோட்டலுக்கும் அவரது சகோ தரரான இல்ஹாம் ஷங்கிரிலா ஹோட்டலுக்கும் தற்கொலை குண்டுத் தாக்குதல் மேற்கொண் டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

"அவர் எங்கள் குடும்பத்தை மாத்திரம் அல்ல உலகம் முழு வதும் நூற்றுக்கணக்கான மக் களின் வாழ்க்கையை அழித்து விட்டார்" என அஷ்கான் அலாம் தீன் பிரித்தானிய ஊடகத்திடம் குறிப்பிட்டுள்ளார்.

"அவர் என்ன செய்கின்றார் என நாங்கள் அறிந்திருக்க வில்லை. அப்படி அறிந்திருந்தால் அது குறித்து நாங்கள் பொலி ஸாரிடம் அறிவித்திருப்போம். இந்த தாக்குதலை இன்ஷாம் மாத்திரம் மேற்கொள்ளவில்லை. அவர்கள் எங்கள் மற்ற சகோத ரரான இல்ஹாமையும் தொடர்பு படுத்தியிருந்தார். அவர்கள் தொடர்பில் எங்களுக்கு வருத்தம் இல்லை கோபம் மாத்திரமே உள்ளது. அவர்களுக்கு அனைத் தும் இருந்தது" என அக்ஷான் அலாம்தீன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கிங்ஸ்பெரி மற் றும் சினமன் கிரான் ஹோட் டல்கள் இரண்டிற்குள்ளும் தற் கொலை குண்டுத் தாக்குதல்களை இன்ஷாப் மற்றும் இல்ஹாம் சகோதரர்களே மேற்கொண்டுள் ளதாக தெரியவந்துள்ளது.

"இந்த தாக்குதலுக்கு முன்னர் தான் வர்த்தக நடவடிக்கைக்காக செம்பியாவுக்கு செல்வதாக தனது மனைவியிடம் இன்ஷாப் குறிப் பிட்டுள்ளார். அதற்கமைய அவ ரது மனைவி இன்ஷாப் அஹமட் கடந்த வெள்ளிக்கிழமை விமான நிலையத்திற்கு சென்று கண வரை வழி அனுப்பி வைத்துள் ளார். அன்று மாலை 6.50 மணியளவில் பயணிக்கவிருந்த விமானத்திற்கு செல்லவிருந் தவர் தனது மனைவியிடம் வித் தியாசமான முறையில் விடை பெற்றுள்ளார்.

இந்த தாக்குதலை மேற் கொண்ட இன்ஷாப் அஹமட் டிற்கு சகோதரர், சகோதரிகள் 9 பேர் உள்ளனர். அவரது தந்தை இலங்கையில் மசாலா பொருட் கள் கொண்டு வரும் வர்த்தகம் மேற்கொண்டுள்ளார்.

இந்தத் தாக்குதலின் பின்னர் பொலிஸாரினால் இன்ஷாபிற்கு சொந்தமான கொழும்பு வெல்லம் பிட்டியவில் அமைந்துள்ள தொழிற் சாலைகள் பரிசோதனைக்கு உட்படுத்தி, அங்கிருந்த அதி காரிகள் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பில் தற்கொலை தாக் குதல் நடத்துவதற்கு பயன்படுத் தப்பட்ட வெடிகுண்டுகள் இந்த தொழிற்சாலையில் தயாரிக்கப் பட்டுள்ளதாக விசாரணை அதி காரிகள் சந்தேகம் வெளியிட்டுள் ளனர்.

அதற்காக அவர்கள் **triacetone triperoxide** எனப்படும் ஐ.எஸ் அமைப்பின் "சாத்தானின் தாய்" என அழைக்கப்படும் ஆரம்ப பொருட்களை பயன்படுத்தியுள் ளதாக சந்தேகிக்கப்படுகின்றது.

2017ஆம் ஆண்டு மான் செஸ்டர் மற்றும் 2015ஆம் ஆண்டு பாரிசிலில் ஐ.எஸ் அமைப் பினால் வெடிக்க வைத்த தற் கொலை குண்டு தாக்குதலுக்கு **triacetone triperoxide** எனப்படும் வெடி பொருளே பயன்படுத்தப் பட்டதாக தெரியவந்துள்ளது.

இந்த குண்டு தொடர்பில் அதிகமாக அறிந்திருந்தவர்க ளின் கருத்திற்கமைய **triacetone triperoxide** என்ற வெடிபொருள் அதிக அழிவை ஏற்படுத்த கூடும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தொழிற்சாலையில் இன்னமும் மீதமாக இருப்பது 12 இந்திய மற்றும் பங்களாதேஷ் நாட்டு ஊழியர்களாகும். பிரதான குண்டு வெடிப்புக்காரரான இன் ஷாப் அஹமட் என்பவர் தினமும் தனது வர்த்தக இடத்திற்கு வந்து 20 நிமிடங்கள் இருந்து செல்வ தாக குறிப்பிடப்படுகின்றது.

அவர் தீவிர இஸ்லாம் பற்று டையவராக ஆடை அணியும் ஒருவர் அல்ல. தொழிற்சாலை க்கு வந்தாலும் அவர் முகாமை யாளருடன் மாத்திரமே பேசி யுள்ளார்.

எனினும் அவர் தனது புகைப்படத்தை எடுப்பதற்கு ஒரு வருக்கும் இடமளிக்கவில்லை.

அது தனது மத நம்பிக்கைக் கைக்கு எதிரான செயல் என அவர் குறிப்பிடுவார் என ஊழியர் ஒருவர் தெரிவித்தார். (இ-7)

# சூழ்ச்சிகளை முறியடிப்பதற்கு உணர்வுடன் கூடிய எமது ஒன்றிணைவு பெரும் பலமாக இருக்கும்

## அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

இயேசுபிரான் உயிர்த்த புனிதமான நம்பிக்கையளிக்கும் நாளில் மிலேச்சத்தனமான கொடூரத்தாக்குதல்கள் என்றுமே மன்னிக்க முடியாதவை.

வன்முறைகளை தமது வழி களாக கையாள்பவர்களின் நோக் கம் எமது நாட்டைப் பல்வேறு வழிகளிலும் பாதிப்படையச் செய் வதே. நீண்டகாலமாக பல்வேறு வழிகளிலும் பிரச் சினைகளால் எமது வளங்களை இழந்ததும் இருக்கும் வளங் களைப் பயன் படுத்தாமலும் நாம் பின்னடை வுகளைச் சந்தித் திருந்தோம்.

உலகளவில் போட்டியிடும் அளவிற்கு எமது வளமும் பாரம் பரியங்களோடு கற்றறிந்த பாட ங்கள் அனுபவ ரீதியாக காணப் படுகின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராம நாதன் தெரிவித்துள்ளார்.

எமக்கெதிராக பின்னப்படும் எவ்வாறான சூழ்ச்சிகளாக இருந் தாலும் முறியடிப்பதற்கு உணர் வுடன் கூடிய எமது ஒன்றிணைவு பெரும் பலமாக இருக்கும். அதற் கான நம்பிக்கையை கட்டி எழுப்பு வதற்கான நேரமும் இதுவே.

மிலேச்சத்தனமிக்கவர்கள் தமது கொடிய நோக்கங்களை அடைய பல்வேறு வழிகளிலும் முயல்கின்றார்கள். எனவே நாம் பெற்ற முயற்சியின் பெரு பலனை எமது சந்ததியினர் அடைந்து கொள்ள கொடூரர்களின் முயற் சிகளை முறியடிப்போம்.

மக்கள் எந்த நேரத்திலும் ஒற்றுமையாக ஒன்றிணைந்து சூத்திரதாரிகளின் திட்டங்களை முறியடிக்க பலமான ஒன்றிணை வுடன் கூடிய அர்ப்பணிப்போடு இருக்குமாறும் கேட்டுக்கொள் கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குண்டுத் தாக்குதல்களுக்கு கிறிஸ்தவ ஒன்றியம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் வேளை யில் கிறிஸ்தவ மக்களின் புனி தமான வழிபாட்டு நேரத்தில் வழிபாட்டு ஸ்தலத்துக்கும் விடு திகளிலும் நடந்த கொடூரமான குண்டுவெடிப்புச் சம்பவங்கள் பல மனித உயிர்களைக் காவு கொண்டுள்ளன.

இது எமக்கு கவலையையும் மன வேதனையையும் அளிக் கிறது. அத்தோடு இந்த மனித நேயமற்ற கொடூரமான செயலை வன்மையாகக் கண்டிக்கின் றோம். இதுபோன்ற செயல்கள் இனிவரும் நாட்களில் இலங்கை சந்திக்கக்கூடாது என நாம் பிரார் த்தனை செய்து நிற்கின்றோம்.

இப்படிப்பட்ட ஈனச்செயலில் ஈடுபடுபவர்கள் இவ்வாறான செய ல்களை கைவிட்டு மனிதநேய த்தை வளர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்வதோடு இலங்கை அரசு நாட்டையும் நாட்டு மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமைதியும் நிரந்தர சமாதானமும் இலங்கையில் உண்டாகப் பிரார்த்திக்கின்றோம் என இலங்கை தேசிய கிறிஸ்தவ ஒன்றியத்தின் தலைவர் சொலமன் டிக்சன் தெரிவித்துள்ளார். (இ)

# கலாசார அதிகார சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக கலாசார அதிகாரசபையின் பொதுக்கூட்ட மும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


இக்கூட்டத்திற்கு பிரதேச கலாசார அதிகார சபையில் அங்கத்த வர்களாக உள்ளவர்கள் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச காணிகளின் முகாமைத்துவம் சார்பான சட்டங்களும் அவை செயற்படும் படிமுறைமைகளும் பகுதி-II

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் எல்லை நிர்ணய ஆணைக்குழு
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

10



பெருந்தோட்ட சந்தைகள் என்பது ஒரு பெருந்தோட்டத்தை ஊடறுத்துச் செல்லும் அல்லது பெருந்தோட்டத்தின் எல்லையாக இருக்கும் வீதிகளின் அருகே இருக்கும் கடைத்தொகுதிகளைக் குறிக்கும். பெருந்தோட்ட சந்தைத் தொகுதியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ விற்க எதிர்பார்க்கும் விற்பனையாளர் அவ் விற்பனை பற்றி காணி ஆணையாளர் நாயகத்திற்கு தெரியப்படுத்தவேண்டும். அவ்வாறு தெரியப்படுத்தியபின் அது சம்பந்தமான அமைச்சர் பொதுநலன் கருதி அப் பெருந்தோட்ட சந்தையை காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் கட்டாய சுவீகரிப்புச் செய்ய நடவடிக்கை எடுப்பார். பெருந்தோட்ட சந்தை கட்டாய சுவீகரிப்பு செய்யக்கூடிய விதத்தில் காணி சுவீகரிப்புச் சட்டத்தில் சில திருத்தங்கள் இச் சட்டத்தில் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**25. இலங்கை காணி மீட்டல், அபிவிருத்தி கூட்டுத்தாபனச்சட்டம் (1968ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கம்)** (Sri Lanka Land Reclamation and Development Corporation Act).

**இலங்கை காணி மீட்டல், அபிவிருத்தி கூட்டுத்தாபனம்**

சதுப்பு நிலங்களையும் தாழ்நிலப்பகுதிகளையும் மீட்டெடுத்து அபிவிருத்தி செய்தல், அவ்வாறு உடைமையாக்கப்பட்ட காணிகளின் கட்டுப்பாட்டை தக்க வைத்துக்கொள்ளுதல் ஆகிய இரட்டை நோக்கத்துடன், 1968ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சட்டத்தின் மூலம், 1968ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்ட தாழ்நிலப்பகுதிகள் மீட்டல், அபிவிருத்திச்சபை ஸ்தாபிக்கப்பட்டது. இச் சட்டம் அத்தகைய மீட்கப்பட்ட நிலங்களை விற்பனை செய்வதற்கான அதிகாரத்தை அச்சபைக்குக் கொடுப்பதற்காக 1976 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்டது.

1968ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க கொழும்பு மாவட்ட (தாழ்நிலப்பகுதிகள்) மீட்டல் அபிவிருத்திச்சபை சட்டமானது, 1982ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க சட்டமூலத்தினால் மேலும் திருத்தம் செய்யப்பட்டதோடு, இந்நிறுவனம் இலங்கை காணி, மீட்டல் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (இ.கா.மீ.அ.கூ.) என மீள்ப்பெயரிடப்பட்டது. அத்துடன், பொறியியல்துறை சார்ந்த நிர்மாண வேலைகளையும் ஆலோசனை சேவைகளையும் உள்ளடக்கும் வகையில் அதன் செயற்பாட்டு பரப்பும் விரிவடைந்தது.

நகர அபிவிருத்தி, புனித நிலப்பகுதிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள முகவர் நிறுவனங்களுள் இலங்கை காணி மீட்டல், அபிவிருத்தி கூட்டுத்தாபனமும் (இ.கா.மீ.அ.கூ) ஒன்றாகும். தாழ்நிலப்பகுதிகளிலுள்ள சதுப்பு நிலங்களின் மீட்டலுக்கும் அபிவிருத்திக்கும் பொறுப்பாக இருக்கும் அதேவேளை போதியளவு வெள்ளத்தடுப்பு பிரதேசங்களை பாதுகாக்க வேண்டிய அவசியமும் இதற்கு உண்டு.

மேலும், அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு அத்தியாவசியமான அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளின் பற்றாக்குறை எனும் பிரச்சினையை தீர்ப்பதற்காக, வியாபார ரீதியில் காணிகளை மீட்டு அபிவிருத்தி செய்யும் பணிகளையும் இக்கூட்டுத்தாபனம் மேற்கொள்கிறது.

கூட்டுத்தாபனத்தின் பிரதான நோக்கங்களும் அதிகாரங்களும், 1982ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க சட்ட மூலத்தினாலும் 2006ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க சட்டமூலத்தினாலும் மற்றும் 2011ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க சட்டமூலத்தினாலும் திருத்தம் செய்யப்பட்டது.

இச்சட்டமூலத்தில் 2, 2(ஆ), 4(அ) ஆகிய பிரிவுகளின் கீழான கட்டளைகள் மூலம் பிரகடனம் செய்யப்பட்ட ஒவ்வொரு மீட்டல் மற்றும் அபிவிருத்தி பிரதேசத்தையும் மீட்எடுத்து அபிவிருத்தி செய்தல், அத்தகைய பிரதேசங்களை கட்டட நிர்மாணம், கைத்தொழில், வர்த்தகம் அல்லது விவசாயத்துக்குரியவையாக மாற்றியமைத்தல், அவற்றின் பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டை பேணுதல். இச்சட்டமூலத்திலுள்ள ஏற்பாடுகளின் கீழ் இக்கூட்டுத்தாபனத்தின் உடைமையாக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள காணிகளின் மீட்டலையும் அபிவிருத்தியையும் இடைநிறுத்துதல். பொறியியல் துறையில் நிர்மாண வேலைகளையும் ஆலோசனை பணிகளையும் பொறுப்பெடுத்தல், 2ஆவது மற்றும் 2(ஆ)ஆவது பிரிவுகளின் கீழான கட்டளை மூலம் பிரகடனம் செய்யப்பட்ட பிரதேசங்களை தவிர ஏனைய பிரதேசங்களிலுள்ள கால்வாய்களின் பாதுகாப்பு, முகாமை, சீர்திருத்தம், பராமரிப்பு மற்றும் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதுடன் அக் கால்வாய்கள் மாசடைதலை தடுத்தல் ஆகியவையே இதன் பிரதான நோக்கங்களாகும்.

2006ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க சட்டமூலத்தினால் இச்சட்டமூலத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம், அங்கீகாரமற்ற மீட்டல் நடவடிக்கைகள், நீர்நிலைகள் மாசுபடல் என்பவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இக்கூட்டுத்தாபனத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

**26. நாட்டின் வனஜீவராசிகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பிற்கான கட்டளைச் சட்டம் - 1937 இன் 2 ஆம் இலக்கம்** (Fauna and Flora Protection Ordinance)

**வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்**

இலங்கை வனவிலங்குகள் சஞ்சரிக்கும் நாடொன்றாவதுடன், இங்கு காணப்படும் வனவிலங்குகளின் முக்கியத்துவம் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு பாரியளவிலான அடிப்படையொன்றாக அமைந்துள்ளது. வனவிலங்குகளின் பாதுகாப்பு மற்றும் அதன் நிலவுகை தொடர்பான முழுப்பொறுப்பும் சட்டரீதியாக அரசாங்கத்திடம் உள்ளது.

அந்த சட்டரீதியான உரித்தினை வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு 1937 இன் 2 ஆம் இலக்க, 1942 இன் 31ஆம் இலக்க, 1944 இன் 12 ஆம் இலக்க, 1945 இன் 12 ஆம் இலக்க (469 ஆம் அதிகாரம்) வனஜீவராசிகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பிற்கான கட்டளைச் சட்டம் மற்றும் 1949 இன் 38 ஆம் இலக்க (திருத்தப்பட்ட), 1964 இன் 44 ஆம் இலக்க (திருத்தப்பட்ட), 1970 இன் 01 ஆம் இலக்க (திருத்தப்பட்ட), 1993 இன் 49 ஆம் இலக்க (திருத்தப்பட்ட), 2009 இன் 22 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) அதிகாரச் சட்டங்களின் மூலம் கையளிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய வனவிலங்குகளின் பாதுகாப்பிற்கான பொறுப்பினை அரசிற்காக நடைமுறைப்படுத்துவது வனஜீவராசிகள் திணைக்களத்தினால் ஆகும். வனவிலங்குகள் மற்றும் தாவரங்களை பாதுகாக்கும் கட்டளைச் சட்டத்தின் கீழ் வனஜீவராசிகள் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களுக்கு புறம்பான பிரதேசங்களில் வனஜீவராசி வளங்களை பாதுகாப்பதற்காகவும் சட்டரீதியான ஏற்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதுடன் அந்த சட்டரீதியான அதிகாரமும் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு அதிகாரச் சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்காக வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தேவையான அனைத்து வசதிகள் மற்றும் வளங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், தீர்மானம் எடுப்பதற்கான முழுப்பொறுப்பும் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக சூழலை பாதுகாக்கும் பணிகளுக்காக பல்வேறு நிறுவனங்கள் தொடர்புபட்டுள்ளன. உதாரணமொன்றாக வன பாதுகாப்பு திணைக்களம், மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, பூகோள விஞ்ஞானம் மற்றும் சுரங்க அகழ்விற்கான பணியகம், சமுத்திர சுற்றாடல் அதிகாரசபை, கரையோர பாதுகாப்பு, கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம், மீன்பிடி மற்றும் நீரியல்வள வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் போன்றவற்றைக் குறிப்பிட முடியும். எவ்வாறாயினும், வனஜீவராசிகளை பாதுகாப்பதற்காக அடிப்படையான பொறுப்பினை கொண்டுள்ள நிறுவனமானது வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் ஆகும்.

1949 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிரதான கடப்பாடு என்னவெனில், இலங்கையின் வனஜீவராசி வளங்களைப் பாதுகாப்பது ஆகும். அதற்கமைய இலங்கையின் அனைத்து ஆற்று மூலங்களையும் விவசாயத்துறை மற்றும் மின்சாரம் உருவாக்கம் தொடர்பாக நீரை வழங்குகின்ற பாரியளவிலான நீர்த்தேக்கங்கள் உட்பட 40 நீர்த்தேக்கங்களின் நீரேந்துப் பகுதிகள் என்பன வனஜீவராசிகள் காப்பிட வலையமைப்பின் ஊடாகவே பாதுகாக்கப்படுகின்றன. இந் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 13 வீதம் விஞ்சிய வனஜீவராசிகள் காப்பிட வலையமைப்பு முகாமைப்படுத்தப்படும் போது வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திடமே அதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்படுகின்றது. அவ் வனஜீவராசிகள் காப்பிட வலையமைப்பு பல்வேறு பாதுகாப்பு மட்டங்களின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட வனஜீவராசி காப்பிடங்களை உள்ளடக்கியுள்ளன.

**1937 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தில் காணி சம்பந்தமான விடயம்**

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர் குறிப்பிடப்பட்ட எந்தவொரு அரச காணியையும் இச் சட்டத்தின் கீழ் தேசிய ஒதுக்கீட்டுப் பிரதேசமாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப் படுத்தலாம்.

1937 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க விலங்குகள், தாவரங்கள் பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் பின்வரும் இடங்கள் தேசிய ஒதுக்கீடுகளாக வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இயற்கையான ஒதுக்கல் நிலங்கள்,தேசிய வனவளப்பூங்காக்கள், இயற்கைப் பாதுகாப்புப் பிரதேசங்கள், காட்டு இடவழி (jungle corridor), புகலிடங்கள், கடல்சார் ஒதுக்கல்கள், பாதுகாப்பு வலயங்கள் ஆகிய சகல ஒதுக்கல்களும் அரசுக்குச் சொந்தமானவையாகும். சகல ஒதுக்கப்பட்ட எல்லைகளிலிருந்தும் 2 1/2 கிலோ மீற்றர் தொலைவு வரை நிர்மாணிப்புச் செயற்பாடுகளுக்காக தடை அல்லது மட்டுப்படுத்தல் செய்யப்படும்.

சரணாலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இடங்கள் அரசாங்க அல்லது தனியார் உடைமையாக இருக்கலாம். இத் தேவைகளுக்கு வேண்டிய போது தனியார் காணிகளும் சுவீகரிக்கப்படுகின்றன.

> இயற்கையான ஒதுக்கல் நிலங்கள், தேசிய வனவளப்பூங்காக்கள், இயற்கைப் பாதுகாப்புப் பிரதேசங்கள், காட்டு இடவழி (jungle corridor), சரணாலயங்கள், கடல்சார் ஒதுக்கல்கள் , பாதுகாப்பு வலயங்கள் ஆகிய சகல ஒதுக்கல்களும் அரசுக்குச் சொந்தமானவையாகும்.

ஒரு தேசிய ஒதுக்கீட்டுப் பிரதேசத்தில் இருந்து ஒரு மைல் தொலைவு வரையில், ஒரு சுற்றுலா ஹோட்டல் கட்டுதல் அல்லது ஒரு ஹோட்டல்களுக்கு வழங்கப்படும் சேவைகள் அல்லது வசதிகள் போன்ற எந்த சேவைகளையும் அல்லது வசதிகளையும் வழங்கக்கூடாது.

**27. 1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டம்** (State Industrial Corporations Act)

1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டமும் 1968 இன் 16 ஆம் இலக்க உல்லாசப் பயண அபிவிருத்திச் சட்டமும் போன்ற சில சட்டவியல் ஏற்பாடுகளின் கீழ் அமைக்கப்பட்ட சபைகளுக்கு பராதீனப்படுத்தல் கட்டளை மூலம் முடிக்குரிய காணிகளை பராதீனப்படுத்தல் தொடர்பான விடயங்கள் அந்தச் சட்டவியல் ஏற்பாடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

230



ஆனந்தகுமாரசுவாமி

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

இதேவேளை சிங்களத் தேசிய அடையாளமும் பத்தொன்பதாவது நூற்றாண்டின் கால் இறுதிப் பகுதியில் மது.விலக்கு இயக்கத்துடன் ஆரம்பித்துத் துரித வளர்ச்சியடைந்திருக்கின்றது. இந்த இயக்கமே சிங்களத் தேசிய உணர்வை மீட்பதற்கான ஒன்று கூடும் இடமாக இருந்து, இருபதாம் நூற்றாண்டின் முதற் தசாப்தத்தில் பரந்து விரிவடைந்திருக்கின்றது. (விசேடமாக மேற்கு, தெற்கு சிங்கள மாகாணங்களில்) மதுவிலக்கு இயக்கங்களுக்கான வெகுசன ஆதரவு உணர்வு பூர்வமாக இருந்தது.

இதுவே காலப்போக்கில் ஒரு அரசியல் இயக்கமாக உருவாகியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் காலிறுதிப் பகுதியில் இரு பெரும் சிங்கள அமைப்பு க்கள் உருவாகியிருந்தன. அவை 1882 இல் உருவாக்கப்பட்ட இலங்கை விவசாயச் சங்கம், 1897 இல் உருவாக்கப்பட்ட சிலாபம் சங்கம் என்பனவாகும்.

இலங்கை விவசாய சங்கம், முதலில் இலங்கையின் பெருந்தோட்டங்களின் நலன் களைப் பாதுகாக்கத் தோன்றியதெனினும் ஈற்றில் 1888 இல் அது இலங்கைத் தேசிய சங்கமாக மாறி சிங்கள தேசியவாதத்தில் ஓர் முக்கியமான பாத்திரத்தை வகித்தது.

சிலாபம் சங்கம், குறிப்பாக சிங்களத் தேசிய வாதத்தின் நலன்களை மேம்படுத்துவதற்காக சட்ட நிருபண சபையில் தேசிய ஆர்வங்களைப் பிரதிநிதிப்படுத்த தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களைப் பெறுவதற்கான முயற்சியை மையமாகக் கொண்டு அரசியற் போராட்டத்தை நடத்தி வலுவாக முயன்றது போல் தோன்றுகின்றது.

பல சிங்கள முனைப்பாளர், சிங்கள தேசிய நலன்களையே மனதிற் கொண்டிருந்தனர் என்பதனைத் தமிழ்த் தலைமை மேலும் மேலும் உணரத் தலைப்பட்டிருப்பர் என்பது நிச்சயமே. சிங்கள பௌத்த முனைப்பாளரான அநாகரிக தர்மபாலவும் அவரது சகாக்களும் நூற்றாண்டின் இறுதியில் சிங்களத் தேசிய வாதத்தை மீட்பதற்கான பிரசாரத்தை ஆரம்பித்த போது இது மேலும் தெளிவாகியது.

சிங்களத் தேசியவாதத்தின் இந்த எழுச்சி சிங்களச் சார்புடைய அரசியல் அமைப்புக்களின் வளர்ச்சி என்பனவும் தமிழ்த் தேசியவாதம் தோன்றுவதற்கான பிரதான காரணங்களாக இருந்தன.

சமய கலாசார , சமூக அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே தோற்றம் பெற்றிருந்த இந்தியத் தேசிய வாதம் ஈற்றில் நோக்கங்கள் ஒன்றிணைய 1885 இல் இந்திய தேசிய காங்கிரஸ் என அழைக்கப்பட்ட அரசியல் அமைப்பாக உருவெடுத்தது.

பம்பாயில் அது உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து இந்தியா முழுவதுமான அதன் பிரதிநிதிகள்,மிதமான [illegible] அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். ஆயினும் இந்த மிதவாதப் போக்கு பாலகங்காதர திலகர் (Balagangathara Tilak) போன்றவர்கள் சுயாட்சி கோரிய போது மிகவும் தீவிரமடைந்தது. திலக், அரவிந்த கோஷ் போன்றவர்கள் இந்தியா முழுவதிலும் தேசியவாதக் கருத்துக்களைப் பரப்புவதில் ஈடுபட்டிருந்தனர்.

உதாரணமாக அவர்கள் இறக்குமதி செய்யப்பட்ட பிரித்தானிய உற்பத்திப் பொருட்களை வாங்குவதை நிறுத்தி இந்தியாவின் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை உபயோகிக்கும்படி மக்களைத் தூண்டினர்.

இவ்வாறு இந்தியத் தேசிய வாதம் வளர்ச்சி பெற்று இலங்கைத் தமிழரை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட ஊக்குவித்தது.

இதேசமயம் தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் இந்த அரசியல் விழிப்புணர்வு நன்கு வேரூன்றியிருந்தது. சென்னை தேசிய சங்கம் ஆடி 1852 இல் தாபிக்கப்பட்டது. சென்னை மகாஜன சபை 1884 இல் நிறுவப்பட்டது. இவை தமிழ் நாட்டில் தமிழரின் தேசிய விடுதலையில் முனைப்பாக ஈடுபடத் தொடங்கின.

இந்திய தேசிய காங்கிரசைவிட ஒரு வருடம் முன்னதாக உருவான சென்னை மகாஜன சபை இந்தியா முழுமையையும் தழுவிய அமைப்புடன் நெருக்கமாகச் செயற்படுவதனை தனது நடைமுறையாகக் கொண்டது.

அவர்கள் தமது சொந்த வருடாந்த மாநாடுகளை நடத்தியதுடன் இந்திய தேசியக் காங்கிரஸின் மாநாடுகளில் பங்குபற்றியும் சென்னையில் நிலவிய அரசியல் மனநிலையை வளர்த்துக் கொண்டனர்.

சபையினது இந்த பிரதேச தேசிய ஆர்வங்கள் பிற்காலத்தில் திராவிடர் நலன்களை மட்டுமே மையப்படுத்தும் வகையில் மாறின. இருப்பினும் 1916 இல் ஜஸ்ரிஸ் கட்சியின் (தென்னிந்திய லிபரல் பெடரேஷனின்) உருவாக்கம் ஈற்றில் அதேவருடம், ஹோம் றூல் லீக் உருவாகக் காரணமாகியது.

தமிழரின் அரசியல் அபிலாஷைகளை வெகுவலுவாக முன்வைத்த தனிப்பட்ட திராவிட சார்புள்ள அமைப்பாக இது இருந்தது. இந்த இந்திய தேசிய இயக்கங்களைவிட 1905 ரஷ்ய- ஜப்பான் போரில் ஜப்பான் ஈட்டிய வெற்றி பொதுவாக ஆசியர்களை ஊக்குவித்து இவர்களைத் தமது சுதந்திரத்திற்காக பிரித்தானியரை எதிர்த்துப் போராடுவதற்கான திடசித்தத்தையும் நம்பிக்கையையும் அளித்தது.

இக் காலத்தில் இந்த வளர்நிலைகள் நிகழ்ச்சிகள் யாவுமே தொடர்ச்சியாகவும் பூரணமாகவும் இலங்கையின் ஆங்கில, தமிழ் செய்திப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம் வியாபாரியின் இரும்புக் கடை எரிப்பு

(பொலநறுவை)

பொலநறுவை - வெலிக்கந்தைப் பொலிஸ் பிரிவில் ஏறாவூரைச் சேர்ந்த முஸ்லிம் வியாபாரியின் பழைய இரும்புக் கடையொன்று இனந் தெரியாதோரால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு கொழும்பு பிரதான நெடுஞ்சாலையில் வெலிக்கந்தை புகையிரத நிலையத்திற்கு முன்னால் அமைக்கப்பட்டிருந்த பழைய இரும்புகளைக் கொள்வனவு செய்யும் கடையே கடந்த திங்கட்கிழமை இரவு 7.30 மணியளவில் எரிக்கப்பட்டுள்ளது. (7)

## பரிசளிப்பு பிற்போடல்

(கொழும்பு)

கொழும்புத் தமிழ் சங்கம் தமிழிசைப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவை நாளை மறுதினம் 27 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடத்ததிட்டமிட்டிருந்த நிலையில் நாட்டடில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பரிசளிப்பு விழாவை மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என கொழும்புத் தமிழ்ச் சங்கம் அறிவித்துள்ளது. (இ-7)

# இலங்கையில் சமூகங்களுக்கிடையிலான உள் முரண்பாடுகள் அதிகரிக்க வாய்ப்பு

## குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் குறித்து தமிழ் சிவில் சமூக அமையம் அச்சம்

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்தவர்களின் புனித நாளான உயிர்த்த ஞாயிறான 21.04.2019 அன்று கிறிஸ்தவ ஆலயங்களிலும் மற்றும் பொது இடங்களிலும் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களை இட்டு தமிழ் சிவில் சமூக அமையம் தன்னுடைய வன்மையான கண்டனத்தை மிகுந்த மன வருத்தத்துடன் பதிவு செய்கின்றது. அத்துடன் இச்சம்பவங்களால் பாதிப்படைந்துள்ள மக்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறது. உயிர் இழந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக வேண்டுதல் செய்வதுடன், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும் பிரார்த்திக்கின்றோம் என தமிழ் சமூக அமையத்தின் இணைப்பாளர்களான அருட்பணி வீ.யோகேஸ்வரன், கலாநிதி கு.குருபரன் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவடைந்து 10 வருடங்களுக்குப் பின்னர் நடைபெறும் இந்த சம்பவம் இத்தீவின் முரண்பாட்டை மேலும் கூர்மைப்படுத்தக் கூடியதும் சிக்கலாக்கக் கூடியதும் என நாம் அஞ்சுகிறோம். வரலாற்று ரீதியாக ஏற்கனவே சமூகங்களுக்கிடையில காணப்படும் பீதியையும் சந்தேகத்தையும் அச்ச உணர்வையும் கூர்மைப்படுத்தக் கூடிய சம்பவமாக இது அமைந்து விடும் என்பதற்கான ஆரம்ப சான்றுகளை நாம் சமூகவலைத் தளங்களில் நடை பெறும் உரையாடல்களில் அவதானிக்கலாம். இவையே தாக்குதலாளிகளின் நோக்கம் என்பது இலகுவில் ஊகிக்கக் கூடிய ஒன்றாகும். 30 வருடகால இன முரண்பாட்டின் வடுக்கள் மறையாதிருக்கும், அதற்கான முறையான சமூக, அரசியல் புரிதலை நோக்கி நாம் நகர மறுக்கும் இச்சூழலில் இந்தத்தாக்குதல் இலங்கையில் சமூகங்களுக்கிடையிலான உள் முரண்பாடுகளை மேலும் சிக்கல் ஆக்கக் கூடும்.

சமூகங்களாக நாம் இந்த அச்சத்தை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றோம் என்பது எமது எதிர்காலத்தை நிர்ணயிக்கும். ஒரு குறிப்பிட்ட சமூகத்தை குற்றவாளியாக்கி நகர்வோமெனில் இத்தீவில் மனிதத்துவமான எதிர்காலத்திற்கான வாய்ப்பு மீண்டுமொருமுறை குழி தோண்டி புதைக்கப்படும்.

அதனை எதிர்கொள்வதற்கான தயார்படுத்தல் இல்லாமல் அரசும் இலங்கையின் அனைத்து இன, மத சமூகங்களும் உள்ளன என்பதே கடினமான உண்மை. நாம் இச்சூழலை பொறுப்பாகக் கையாளாதவிடத்து நாம் மிக மோசமான காலகட்டத்தை நோக்கி நகர்கின்றோம் என்ற புரிதலோடு மிகுந்த நிதானத்தோடும் குறுகிய நலன்களுக்கு அப்பாலும் தூர நோக்கோடும் செயற்பட வேண்டுமென அரசியல், சிவில் சமூக, மதத் தலைவர்களை நாம் விநயமாக வேண்டி நிற்கின்றோம். மேலும் இந்த நெருக்கடிக்கான பதிலை தேசிய பாதுகாப்பு என்ற அடைப்புக்குள் தேடுவோமாயின் இந்நாட்டின் எண்ணிக்கையில் சிறுபான்மையினரான சமூகங்களே அதிகளவில் பாதிக்கப்படுபவர்களாக இருப்பார்கள் என்பதை அரசுக்கு எமது அனுபவத்தில் இருந்து ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.

'தனக்கென்று வாழாமல் பிறருக்கென்று வாழுங்கள் 'என்ற ஈஸ்டர் தினத்தின் அழைப்பு சமயங்களுக்கும் இன, மொழி, சாதி பேதங்களுக்குமப்பால் சென்று இதயங்களை வருடட்டும். மனித நேயத்துடன் மனிதத்துவத்தில் வாழ தமிழ் சிவில் சமூக அமையம் அனைவரையும் அழைக்கின்றது.

நமது தனித்துவ அடையாளங்கள் பேதங்கள் அல்ல. அவை மற்றவரை புரிந்து கொள்ளவும் ஏற்றுக் கொள்ளவும் அவர்களின் தனித்துவத்தை மதிக்கவும் மனித நேயத்தில் நம்மை உயர்த்தும் கொடைகள் என்பதை உணர்ந்து செயறபடுவோம். பரந்தமனமே விரிந்தஞானம் என அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இந்து ஆலயங்களுக்கு நிதி வழங்கல் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது

(கொழும்பு)

தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சின் வழிகாட்டலின் கீழ் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகச் சேவை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டுக்கான முதற்கட்ட நிதி வழங்கும் நிகழ்வு மற்றும் அறநெறிப் பாடசாலைகளுக்கு சீருடை வழங்கும் நிகழ்வு என்பன பிற்போடப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு நாளை மறுதினம் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி லோரன்ஸ் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும் நாட்டில் இடம் பெற்ற அசாதாரண சூழல் காரணமாக மேற்படி நிகழ்வினைப் பிற்போடுமாறு தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் மனோகணேசன் திணைக்களத்திற்கு அறிவுறுத்தல் வழங்கியதன் பேரில் இந் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது.

நிகழ்வு தொடர்பான மேலதிக விபரங்கள் உரிய தரப்பினருக்கு பின்னர் அறிவிக்கப்படும் எனப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ-7)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1702

### ஸ்ராலின்

தனக்கு ஒரு சைக்கிளை வாங்கிக் கொள்ள யோசிக்கும் அப்பாக்கள் தான் மகன்கள் கேட்ட சைக்கிளை வாங்கிக்கொடுத்து அழகு பார்க்கிறார்கள்



### வெங்கட்

அன்பானவரை விட வேறு யாராலும் முடியாது நம்மை அழகாகக் காயப்படுத்த...!



### குமரன்

குடும்பம் என்பது கடவுள் நமக்காக பூமியில் ஏற்பாடு செய்திருக்கும் சொர்க்கம்... அதைச் சொர்க்கமாக்குவதும் நரகமாக்குவதும் நம்முடைய செயல்களில்தான் இருக்கிறது



### சுஜிதா

உனக்கு நீ நல்லவனாய் இருந்தால் போதும் மற்றவருக்கு நீ கெட்டவனாய் தெரிந்தால் அது உன் குற்றம் இல்லை



### ஹேமா

பல அவமானங்களை கடக்கும் ஒருவன் மனதில் ஓடும் ஒரே வாசகம் நான் ஒருநாள் ஜெயிப்பேன்



### சித்ரா

எத்தனை முறை ஏமாற்றப்பட்டாலும் நீ அடுத்தவரை ஏமாற்ற ஒருபோதும் கற்றுக்கொள்ளாதே என்கிறது என்னுள் இருக்கும் மனிதாபிமானம்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச தரப்பு அறிந்திருந்தும் அலட்சியம் செய்தது ஏன்?

# இலங்கையில் படுகொலைகள் ; உண்மையை கண்டறிய பொதுநலவாய நாடுகள் அமைப்பின் விசாரணை அவசியம்

### நாடுகடந்த தமிழீழ அரசு வலியுறுத்து

இலங்கைத்தீவில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று (21.04. 2019) நடைபெற்ற குண்டு வெடிப்புத்தாக்குதலின் விளைவான மனிதப்படுகொலைகளை வன்மையாகக் கண்டனம் செய்வதோடு, கொல்லப்பட்டவர்களதும் காயமடைந்தவர்களதும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம். இதேவேளை காயமடைந்த 500 பேருக்கு மேற்பட்டவர்களும் விரைவில் சுகமடைய வேண்டும் என்றும் வேண்டிக் கொள்கிறோம்.

இத் தாக்குதல்கள் குறித்து அறியக் கிடைக்கும் செய்திகளின் படி, 8 வெவ்வேறு இடங்களில் நடந்த குண்டுத் தாக்குதல்களின் போது 350 பேருக்கு மேல் கொல்லப்பட்டுள்ளனர், 500 பேருக்கு மேல் காயம் அடைந்துள்ளனர். இவற்றில் 4 இடங்கள் கிறிஸ்தவ புனித தேவாலயங்களும் 4 இடங்கள் ஐந்து நட்சத்திர உல்லாச விடுதிகளாகவும் உள்ளன. உல்லாச விடுதிகளில் நிகழ்ந்த குண்டுத் தாக்குதல்களின் போது 33 வெளிநாட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 5 பேர் இந்தியர்களும் மிகுதிப் பேர் மேற்கு நாட்டவர்களுமாவர். மேலும் வெடிகுண்டு இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் அதனை பொலிஸார் சோதனையிடச் சென்ற போது குண்டுதாரிகள் அதனை வெடிக்க வைத்ததில் 3 பொலிஸாரும் கொல்லப்பட்டனர்.

இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேயவர்த்தன பாதுகாப்பு அமைச்சுக்கு குண்டுத் தாக்குதல்கள் நடக்க இருப்பது பற்றி எச்சரிக்கை தகவல்கள் முன்கூட்டியே கிடைத்திருந்ததாகவும் அதனைத் தாம் போலியானது எனக் கருதி அது தொடர்பாக தகவல்களை உறுதிப்படுத்துவதற்கு இடையில் இந்தக் குண்டு வெடிப்புக்கள் நிகழ்ந்து விட்டன என்றும் தெரிவித்துள்ளார். "புலனாய்வுத் துறையினரிடம் முன்கூட்டியே தகவல்கள் இருந்தும் அப்படி இருக்கையில் இச்சம்பவம் எப்படி நடந்தது என்பதை தாங்கிக் கொள்ள முடியாது இருக்கிறது" என்று அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். "ஏற்கனவே எச்சரிக்கை கிடைத்திருந்தது. அவ் எச்சரிக்கை புறக்கணிக்கப்பட்டிருந்ததால் இவ் விபரீதம் ஏற்பட்டது. போலியானது என்று புறக்கணிக்கப்பட்ட முன்னெச்சரிக்கையே உண்மையானதாக்கியது. இது குறித்து விசாரணை வேண்டும். உரிய வகையில் கடமையை நிறைவேற்றாதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் அமைச்சர் ஹறின் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பிரதமராகிய தமக்கும் தமது அமைச்சர்களுக்கும் இத்தகவல்கள் இறுதி வரை தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை என்று ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியை நோக்கி விரலை நீட்டும் வகையில் காட்டமாகப் பேசியுள்ளார்.

கிறிஸ்தவ புனித ஞாயிறு அன்று கிறிஸ்தவ தேவாலயங்களில் குண்டுத் தாக்குல்கள் நிகழ்த்தப்பட இருந்ததை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்கூட்டியே அறிந்திருந்தார் என்று கூறப்படுகிறது. இது உண்மையாக இருக்கும் பட்சத்தில், அதனைத் தடுப்பதற்குத் தேவையான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் எதனையும் அவர் மேற்கொள்ளாததுடன் அன்றைய தினம் பார்த்து அவர் வழிபாட்டிற்காகவும் தனது நண்பர் ஒருவரை சிங்கப்பூரில் சந்திப்பதற்காகவும் சென்றமை ஒரு பொறுப்பற்ற நடவடிக்கையாக அமைவது மட்டுமன்றி பல சந்தேகங்களுக்கும் வழிவகுக்கிறது.



குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக கிடைத்த தகவல்கள் அனைத்தும் பெரும்பான்மையாக தமிழ்க் கிறிஸ்தவர்களே கொல்லப்பட உள்ளார்கள் என்பதும் அதில் கொல்லப்படக் கூடிய ஏனையோர் சிறிதளவிலான சிங்களக் கிறிஸ்தவர்களே என்பதும் இத்தாக்குதலில் ஒரு பௌத்த குடிமகன்கூட கொல்லப்பட மாட்டார் என்பது உறுதியான நிலையில் இத் தாக்குதல் நடப்பதை அவர் அனுசரித்து நடந்து கொண்டார் என்று கருதவும் இடமுண்டு. கொல்லப்பட்டோரில் மூன்றில் இரண்டு பகுதியினர் தமிழ்க் கிறிஸ்தவர்கள் என்பதும் மிகுதி மூன்றில் ஒரு பகுதியினரே சிங்களக் கிறிஸ்தவர்களும் வெளிநாட்டவர்கள் என்பதையும் கொல்லப்பட்டோரின் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. இந்த வகையில் தமிழ்க் கிறிஸ்தவர்களும் சிங்களக் கிறிஸ்தவர்களும் கொல்லப்படுவதற்கு ஏதுவான குண்டுத் தாக்குதலை நடக்க அனுமதிப்பதன் மூலம் தமிழ்-முஸ்லிம்-கிறிஸ்தவ இனப்பூசல்கள் ஏற்பட வேண்டுமென ஜனாதிபதி விரும்பியுள்ளார் என்ற ஐயத்துக்கும் இங்கு இடமுண்டு. தனது சொந்த அரசியல் நலன்களுக்காக இத்தகைய இனப்பூசல்களுக்கு வழிவகுக்கத் தகுந்த இக்குண்டுத் தாக்குதல்களை அவர் அனுமதித்துள்ளாரா? என்ற கேள்வியும் இங்கு எழுகிறது.

இக்குண்டுத் தாக்குதல் நிகழ இருப்பது தொடர்பாக இலங்கை அரசிற்கு இந்திய அரசு உத்தியோகபூர்வமாக முன்கூட்டியே அறிவித்திருந்தது எனவும் இக்குண்டுத் தாக்குதல்களில் ஈடுபட இருந்தவர்களின் பெயர் விபரங்கள்கூட வழங்கப்பட்டிருந்தன எனவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இலங்கையில் பாதுகாப்பு அமைச்சும், பொலிஸ் பிரிவும் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டிலுள்ள பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ளது. முன்கூட்டியே பெயர் விபரங்களுடன் பாதுகாப்பு அமைச்சுக்கு தவல்கள் தெரிந்திருந்தும் ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சும் மேற்கொண்டு நடவடிக்கையில் ஈடுபடாமல் விட்டமை பெரும் ஐயங்களை ஏற்படுத்தியுள்ளது.

மனிதநேயமற்ற காட்டு மிராண்டித்தனமான இத்தாக்குதல்கள் நடந்த சில மணி நேரங்களின் பின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் , 2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தம் முடிவடைந்ததும் கலைக்கப்பட்ட ஓர் இயக்கமே இத் தாக்குதலை நடத்தியதாகக் கூறியுள்ளார். யுத்த காலகட்டத்தில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்ட துணைப்படையான "ஜிகாத்" அமைப்பானது யுத்தம் முடிந்த பின் கலைக்கப்பட்ட நிலையில் அந்த அமைப்பில் இருந்த ஒரு பகுதியினர் "தேசிய தவத் ஜமாத்" என்னும் அமைப்பை முஹம்மது தாயீத் முஹம்மது சஹாரான் என்பவர் தலைமையில் உருவாக்கியதாகவும் அந்த அமைப்பே இத்தாக்குதல்களை நடத்தியதாகவும் புலனாய்வு அதிகாரிகள் வாயிலாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இத்தாக்குதலை மேற்படி இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்கள் செய்துள்ளன என்ற பின்னணியில் முஸ்லிம்கள் மீது தமிழ் மக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் கோபத்தை ஊட்டும் உள்நோக்கம் அவரது கருத்தின் ஊடாக வெளிவந்தமையையும் அவதானிக்க முடிந்தது.

இத்தாக்குதலில் ஈடுபட்டவர்கள் யாராயினும் அவர்களும், அவர்களுக்கு உடந்தையான ஆட்சியாளர்களும் பாதுகாப்புத் துறை சார்ந்த உயர் அதிகாரிகளும் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும். இலங்கையின் நீதித் துறை இனத்துவ ரீதியாகவும் மத ரீதியாகவும் போதிய சுயாதீனமற்றதாக இருக்கும் நிலையில், தாக்குதல் குறித்து தகவல்கள் முன்கூட்டியே தெரிந்திருந்தும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாத பின்னணியில், தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் அமைப்புடன் அரசாங்கத்தின் அமைச்சர்களும் கிழக்கு மாகாண ஆளுநரும் தொடர்புகளைப் பேணிக் கொண்டார்கள் என்று குற்றம் சாட்டப்படுமொரு சூழலில் ஜனாதிபதியும் பிரதமரும் தமக்கிடையே பனிப்போர் நடத்தி வரும் வேளையில் உள்நாட்டு விசாரணையின் ஊடாக உண்மை வெளிப்படுவதும் நீதி நிலை நிறுத்தப்படுவதும் சாத்தியமற்றது.

எனவே இத் தாக்குதலின் பின்னணிகளை ஆராய உள்நாட்டு விசாரணையல்லாமல் சர்வதேச நீதியாளர்களினால் இவ்விசாரணை நடத்தப்பட்டு உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். இலங்கையும் அங்கம் வகிக்கும் பொதுநலவாய நாடுகள் அமைப்பு இது தொடர்பான நீதி விசாரணையை முன்னெடுத்து மக்களுக்கு எழுந்திருக்கக்கூடிய ஐயங்களைப் போக்கும் வகையில் செயற்படுவதற்கான தேவை எழுந்துள்ளது. அனைத்து குற்றவாளிகளும் கடுமையாக தண்டிக்கப்படுவதன் ஊடாகவே நீதியை நிலை நிறுத்த முடியும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் ருத்திர குமாரன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

---

## தொடர் குண்டுத் தாக்குதல்களுக்கு தென்இந்திய திருச்சபை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

உலகமெங்கும் கிறிஸ்தவர்கள் கிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்பெற்றெழுந்ததைக் கொண்டாடுவது ஈஸ்டர் தினமாகும். இதனூடாக மானுட வாழ்வின் மரணங்களிலிருந்து மக்களுக்கு எப்பொழுதும் விடுதலை உண்டு என்ற உண்மை அனைவருக்கும் கொடுக்கப்படுகின்றது.

ஆனால் இந்தப் புனிதமான நாளில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் அதிலும் குறிப்பாக மூன்று தேவாலயங்களில் இவை மேற்கொள்ளப்பட்டமை கோழைத்தனமான ஒரு செயலாகும். இரண்டு ஹோட்டல்களிலும் குண்டு வெடிப்புக்கள் ஏற்பட்டன என்பது ஒருவேளை நோக்கத்தைத் திசை திருப்பும் செயலாகவும் இருக்கலாம்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவர்கள் கொண்டாடிய குருத்தோலைத் திருநாளாகும். இந்த நாளில் சில விசமிகள் அநுராதபுரத்திலுள்ள மெதடிஸ்த தேவாலயத்தை குறிவைத்து தாக்குதலை மேற்கொண்டனர்.

மதக் காழ்ப்புணர்ச்சியைத் தோற்றுவித்து அதனூடான எமது அழகிய நாட்டைச் சின்னாபின்னமாக்க சில குழுவினர் அரசியல் காரணங்களுக்காகவோ அல்லது மதக் காரணங்களுக்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ இதனை மேற்கொண்டதைத் தென்இந்திய திருச்சபை யாழ்ப்பாணப் பேராயம் வன்மையாகக் கண்டிக்கின்றது என அதிவண.கலாநிதி டானியல் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

மரணத்திலிருந்து இறைவன் வழங்கும் உயிர்ப்பைத் தியானிக்கவும் அந்த நம்பிக்கையைப் பெறவும் புனித அந்தோனியார் ஆலயத்திற்கும் நீர்கொழும்பு தேவாலயத்திற்கும் மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திற்கும் அதிகாலையில் சென்றிருந்த அருமையான மக்கள் மீது இப்படியான வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டமை கண்டிக்கத்தக்கதான ஒரு செயலாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

---

## பயங்கரவாதத்திற்கும் இனவிடுதலைக்கும் இப்போது வித்தியாசம் புரிகிறதா?

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்தவர்களின் புனித நாளான உயிர்த்த ஞாயிறன்று நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்கள் மிகவும் கண்டனத்துக்குரியவை.

அப்பாவி மக்களைக் கொலை செய்யும் நோக்குடனான இவ்வாறான தாக்குதல்கள் மனிதநேயம் மரணித்துக் கொண்டு போகின்றது என்பதனையே காட்டுகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாநகரசபை உறுப்பினர் வ.பார்த்திபன் தெரிவித்துள்ளார். அன்பை போதிக்கின்ற கிறிஸ்தவ மதத்தினராக இருக்கட்டும் தர்மத்தைப்போதிக்கின்ற பௌத்த மதத்தினராக இருக்கட்டும் சகோதரத்துவத்தை போதிக்கின்ற இஸ்லாமிய மதத்தினராக இருக்கட்டும் மனோ தர்மத்தை முழு அளவில் போதிக்கின்ற இந்துமதத்தினராக இருக்கட்டும் எல்லா மதங்களும் ஒரு ஆரோக்கியமான மனித நேயமிக்க சமூகத்தை உருவாக்குவதில் ஏற்பட்ட பின்னடைவும் இக்கொடூரமான தாக்குத்தலுக்கு காரணமாகும்.


வலிகளை உணர்ந்தவர்களுக்குத்தான் மற்றவர்கள் படும் வலிகள் புரியும் என்ற வகையில் இவ்வாறான கொடூரமான மனித நேயமற்ற தாக்குதல்களை எதிர்கொண்டவர்கள் என்ற வகையில் கிறிஸ்தவ ஆலயங்களிலும் நட்சத்திர விடுதிகளிலும் இடம் பெற்ற தற்கொலை தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதுடன் அதில் உயிரிழந்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் எமது இன விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதமாகச் சித்திரித்து அதனை மௌனிக்கச் செய்த அரசுக்கும் அதற்கு துணைபோன நேச நாடுகளுக்கும் இன்று புரிந்திருக்கும் எமது இன விடுதலைப் போராட்டத்திற்கும் பயங்கரவாத தாக்குதல்களுக்கும் இடையிலான வித்தியாசம் என்ற கருத்தையும் இவ்விடத்தில் பதிவு செய்து கொள்ளுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆனந்தர் ஞானம் பெற்ற கதை



இளவரசர் சித்தார்த்தர் ஞானம் பெற்று கௌதம புத்தர் ஆனதும் அவருடன் வந்து சேர்ந்தார் புத்தரின் நெருங்கிய உறவினர் ஆனந்தர்.

இவர் புத்தர் மீது கொண்ட அன்பால் அவருடைய சீடனாகிவிட்டார். அதுமட்டுமல்ல மற்ற சீடர்களை விட புத்தரிடம் தனக்கு அதிக உரிமை உண்டு என நினைத்தார். அதன்படியே நடந்து கொண்டார்.

ஒரு நாள், "சித்தார்த்தா! நான் உனக்கு அண்ணன் முறை. நான் என்ன சொன்னாலும் நீர் கேட்க வேண்டும். எனக்காக நான் சொல்லும் மூன்று கட்டளைகளை ஏற்க வேண்டும்" என்றார்.

"அந்த மூன்று கட்டளைகள் என்ன?" என்று கேட்டார் புத்தர்.

"நான் எப்பொழுதும் உம்முடனேயே இருக்க வேண்டும். எந்தச் சூழலிலும் என்னை வேறு நாடுகளுக்கு அனுப்பக்கூடாது. நான் உம்மைச் சந்திக்க யாருக்கு அனுமதி தந்தாலும் நீர் சந்திக்க வேண்டும். நள்ளிரவாக இருந்தாலும் முடியாது என்று சொல்லக்கூடாது. மூன்றாவதாக நீர் உறங்கும் போது உமது அருகிலேயே நான் உறங்க வேண்டும். வேறு அறைக்குச் சென்று தூங்கு என்று என்னிடம் சொல்லக் கூடாது. சரியா," என்றார்.

"அப்படியே செய்கிறேன்!" என்று வாக்குறுதி தந்தார் புத்தர். நாற்பத்திரண்டு ஆண்டுகள் புத்தருடனே தங்கியிருந்தும் ஆனந்தர் ஞானம் பெறவில்லை.

வெகு தொலைவிலிருந்து வந்து புத்தரின் சீடர்களான சிலர் சில நாட்களிலேயே ஞானம் பெற்றதை அறிந்த ஆனந்தர் தனக்கு மட்டும் ஏன் ஞானம் கிடைக்கவில்லை என்று வருந்தினார்.

இறக்கும் நிலையில் இருந்தார் புத்தர். அவரிடம் ஆனந்தர், "இரவும் பகலும் உம்மைப் பிரியாமல் நாற்பத்திரண்டு ஆண்டுகள் கழித்து விட்டேன். இன்னும் நான் ஞானம் பெறவில்லை. நீர் இறந்தபின் என் நிலை என்ன ஆகும்?" என்று கண்களில் கண்ணீர் வழியக் கேட்டார்.

"வாழ்க்கையைப் பற்றி நீர் ஒன்றும் புரிந்து கொள்ளவில்லை.. நீர் ஞானம் பெறுவதற்கு நானே தடையாக இருந்திருக்கிறேன். நான் இறந்த பிறகு நீர் ஞானம் பெற்றாலும் பெறலாம்.

"நீர் என்னிடம் மூன்று வேண்டுகோளை வைத்தீர். நான் அவற்றை ஏற்றுக் கொண்டது உம் வாழ்க்கைக்குத் தடையாயிற்று. நீர் எப்பொழுதும் என் அண்ணன் என்றே நினைத்துக் கொண்டு மற்றவர்களை விட என்னிடம் உமக்கு அதிக உரிமை உள்ளது என்று கருதினீர். உமக்காகத்தான் அந்த மூன்று வேண்டுகோளை ஏற்றுக் கொண்டேன். என் இறப்பு ஒன்று தான் நீர் ஞானம் பெற உமக்கு உதவி செய்யும்" என்றார்.

அதன்பிறகு இறந்தும் போனார் புத்தர்.

ஞானம் பெற்ற சீடர்கள் அனைவரும் ஒன்றாகக் கூடினர். கடந்த நாற்பத்திரண்டு ஆண்டுகளில் புத்தர் என்னென்ன அறிவுரைகள் சொன்னாரோ அவற்றை எழுதி வைக்க வேண்டுமென்று நினைத்தனர்.

அங்கிருந்த யாருமே புத்தருடன் நாற்பத்திரண்டு ஆண்டுகள் தொடர்ந்து இருந்தது இல்லை. அத்தனை ஆண்டுகளும் புத்தருடன் இருந்த ஆனந்தரோ இன்னும் ஞானம் பெறவில்லை.

அதனால் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள அவர் அனுமதிக்கப்படவில்லை.

கூட்டம் நடக்கும் இடத்திற்கு வெளியே அமர்ந்து புலம்பியபடி இருந்தார் ஆனந்தர்.

"புத்தரே! உங்களுடன் நாற்பத்திரண்டு ஆண்டுகள் இடைவிடாமல் இருந்திருக்கிறேன். உங்கள் வாழ்வில் நிகழ்ந்த ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியும் என் உள்ளத்தில் பதிந்து உள்ளது. ஞானம் பெறாதவர் என்பதனால் எனக்கு அனுமதி இல்லையே. நான் என்ன செய்வேன்" என்று அழுது புலம்பினார். வாழ்க்கையே அழிந்து விட்டது போல அழுதார்.

கண்ணீர் வெள்ளத்தில் நனைந்தார். அப்போது தன் தம்பி தான் புத்தர் என்ற அவருடைய ஆணவம் நீங்கியது. குழந்தையைப் போல ஆன அவர் அப்பொழுதே ஞானம் பெற்றார்.

வெளியே வந்த சீடர்கள் சில விளக்கங்கள் கேட்பதற்காக ஆனந்தரை தேடினர். அவர் கூறிய விளக்கங்களை கேட்டு ஆச்சரியமடைந்த சீடர்கள் அவர் ஞானம் பெற்றதை அறிந்து மகிழ்ந்தனர். புத்தரின் போதனைகளை எல்லாம் அதன்பிறகு ஆனந்தரே தொகுத்தார்.

## விடுகதைகள்

- பூவோடு பிறந்து நாவோடு கலந்து விருந்தாவான் மருந்தாவான். அவன் யார்?

**தேன்**

- தண்ணியில்லாத காட்டிலே அலைந்து தவிக்கும் அழகி. அவள் யார்?

**ஒட்டகம்**

- உயிரில்லாதவனுக்கு உடம்பெல்லாம் நரம்பு, அது என்ன?

**பாய்**

- ஐவர் வீட்டுக்கும் பொதுவாய் ஒரு முற்றம். அவர்கள் யார்?

**கை**

- அரைசாண் ராணிக்கு வயிற்றில் ஆயிரம் முத்துகள். அது என்ன?

**வெண்டைக்காய்**


- ஆழக் குழி தோண்டி அதிலே ஒரு முட்டையிட்டு அண்ணாந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை அது என்ன?

**தென்னை**

## அறிந்து கொள்வோம்

- கைரேகையைப் போலவே நாக்கின் ரேகைகளும் தனித்துவம் மிக்கவை.
- விண்கலத்தில் உருளைக்கிழங்குச்செடி வளர்த்து சோதனை செய்திருக்கின்றனர் விண்வெளி விஞ்ஞானிகள்.
- கிரிஸ்லி வகை கரடி யால்குதிரைக்கு இணையான வேகத்தில் ஓட முடியும்.
- பால்வீதி மண்டலத்தைக் கடக்க வேண்டுமென்றால், ஜம்போ ஜெட் விமானத்துக்கே 120 பில்லியன் ஆண்டுகள் தேவைப்படும்.

## தொடர் வண்டி



நீண்ட வண்டி தொடர் வண்டி
நீண்ட தூரம் போகும் வண்டி

தண்டவாளத்தில் அது போகும்
தட தட வென்று விரைந்தோடும்

"கூ".... என ஒலிப்பது புகை வண்டி
"பாம்".... என ஒலிப்பது மின் வண்டி

பச்சை, சிவப்பு கொடி இரண்டை
நிலையத் தலைவர் காட்டிடுவார்

சிவப்பைக் காட்டினால் நின்றுவிடும்
பச்சையைக் காட்டினால் பாய்ந்தோடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது.
அதை யாராலும் மூடி மறைக்க முடியாது.
~ மில்டன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழனைப் பகையாக நினைத்தழித்தாய்...

இலங்கைத் திருநாடு அமைதியும் சுபீட்சமும் நிறைந்த நாடாக நிலைபேறடைவது சவால் மிகுந்த விடயமாக மாறிவிட்டது.

இதற்கு மூல காரணம் என்ன என்று ஆராய்ந்தால், இனவாதமும் மதவாதமும் இந்த நாட்டில் விதைக்கப்பட்டு வளர்க்கப்பட்டு இன்று பெரு விருட்சமாக எழுந்து நிற்பதுதான்.

அதிலும் இந்த நாட்டின் பூர்வீகக்குடிகளான தமிழ் மக்களை நசுக்க வேண்டும் என சிங்களப் பேரினவாதம் என்று நினைத்ததோ அன்று தொட்டதுதான் இந்த நாசம்.

ஆம், இலங்கை சுதந்திரமடையும் வரை தமிழ்த் தலைவர்களின் உதவியைப் பெற்று தன் இனத்தை வளர்த்த சிங்களப் பேரினவாதம் தமிழ்த் தலைவர்களை நம்ம வைத்து; தமிழ் மக்களுடன் சேர்ந்து வாழ்வோம் என்பது போன்ற மாயையை ஏற்படுத்தி சுதந்திரத்தின் போது இந்த நாட்டின் ஆட்சி அதிகாரத்தை சிங்களத் தலைவர்கள் தம்வசமாக்கினர்.

நரித்தந்திரத்துடனும் கபடத்தனத்துடனும் தமிழ் அரசியல் தலைவர்களை ஏமாற்றி இந்த நாட்டின் ஆட்சி அதிகாரத்தைத் தம் வசமாக்கியதுதான் தாமதம், தமிழ் மக்களை கல்வி, பதவி, வேலைவாய்ப்பு என பல கோணங்களில் புறக்கணிப்புச் செய்ய முற்பட்டது.

இதுதவிர காலத்துக்குக் காலம் இனக்கலவரங்களை ஏற்படுத்தி தமிழ் மக்களைக் கொன்றும் அவர்களின் சொத்துக்களைச் சூறையாடியும் மிகக் கொடூரமான பாதகத்தை செய்தனர்.

இதற்கு பௌத்த பீடங்களும் பௌத்த துறவிகளும் துணைபோயினர்.

இந்நிலையில்தான் தமிழ் இளைஞர்கள் விடுதலைப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகினர்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் தோற்றத்துக்கான காரணத்தை அறியாமல், தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் தமிழினத்தை அழிப்பதே தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்க ஒரே வழி என சிங்கள ஆட்சியாளர்களும் படைத்துறையும் முடிவு செய்தது.

அதன் இறுதி விளைவு பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் கொன்றொழிக்கப்பட்டனர்.

அந்தக் கொடூரம் இன்னமும் தமிழ் மக்களை வாட்டி வதைத்து கண்ணீரும் கம்பலையுமாக அலையவிட்டுள்ளது.

கொடும் போர் நடத்தி விடுதலைப் புலிகளை கொன்றொழித்து விட்டோம் என்று போர் வெற்றி கொண்டாடிய இலங்கை ஆட்சியாளர்களின் வஞ்சகத்தனம் இன்று இலங்கைத் திருநாட்டை சர்வதேசத்தின் பயங்கரவாதத்துக்கு இரையாக்கியுள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டு தமிழ் மக்களின் அறிவு, வீரம், பொருளாதாரம், அவர்களின் நம்பகத்தன்மை என்பவற்றை இந்த நாட்டின் பெருவளமாக ஆக்காமல், தமிழனைக் கைது செய்தும் அவனை விசாரிக்கத் தமிழ் தெரிந்தவர்களைப் புலனாய்வுப் பிரிவில் சேர்த்தும் அமைச்சுப் பதவிகளைக் கொடுத்தும் ஆளாக்கினர்.

இனி அனுபவித்துப் பார்ப்பதைத் தவிர வேறு ஏது வழி.

என்ன செய்வது ஆட்சியாளர்களின் சிறுமைத்தனத்தால் அப்பாவிப் பொதுமக்கள் பலியாகும் துன்பம் மனித இதயங்களை எரிக்கவே செய்கிறது.

# தற்கொலைத் தாக்குதல்கள் தொடர வாய்ப்புள்ளது

## புலனாய்வுப் பிரிவின் கடிதத்தில் எச்சரிக்கை

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இலங்கைக்குள் எதிர்காலத்திலும் பயங்கரவாத தாக்குதல்களை நடத்தும் ஆபத்து இருப்பதாக விமானப் படையின் புலனாய்வு பிரிவு, விமானப படை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளது.

இந்தக் கடிதம் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் தற்கொலைத் தாக்குதல்கள், கிறிஸ்தவ, கத்தோலிக்க மற்றும் வெளிநாட்டவர்களை இலக்கு வைக்கும் தாக்குதல்கள் நடத்தப்படலாம். மக்கள் அதிகமாக நடமாடும் இடங்கள், அரச மற்றும் தனியார் சொத்துக்கள் இலக்கு வைத்து இந்தத் தற்கொலைத் தாக்குதல்கள் நடததப்படலாம் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் பயங்கரவாத தாககுதல்களை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு விமானப்படை புலனாய்வு பிரிவு அதிகாரிகளை கேட்டுக் கொண்டுள்ளது. (இ-7)

# பொதுக்கூட்டம் பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் எதிர்வரும் (28.04.2019) ஞாயிற்றுக் கிழமை அன்று நடைபெற விருந்த பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (ம)

# பருத்தித்துறை நகரில் வர்த்தக நிலையத்துக்கு தீ வைத்தவர்

## பொலிஸாரால் கைது

பருத்தித்துறை நகரில் உள்ள வர்த்தக நிலையத்திற்கு தீ வைத்தது தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார.

நேற்று புதன்கிழமை அதிகாலை 5.45 மணியளவில் பருத்தித்துறை பிரதான வீதியில் உள்ள சிங்கர் காட்சியறையில் வைக்கப்பட்டிருந்த குளிரூட்டிக்கு இனம் தெரியாத நபரினால தீ வைக்கப்பட்டதாக பருததித்துறை பொலிஸில்செய்யப்பட்டமுறைபாட்டிற்கு அமைவாக அங்குள்ள சீசீரீவி கமராவின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை பொலஸார் வியாபாரிமூலை பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்தனர். அவர் மனநலம் பாதிககப்பட்டவர் என தெரிவிக்கப்பட்டது. (ம-60)

சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடியவர்

# மக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைப்பு

## சுன்னாகத்தில் சம்பவம்

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரிடம் வாக்குமூலம பெறப்பட்டதும் விடுவிக்கப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருவர், யாழ்ப்பாணம் நகரிலுள்ள இருக்கைகளுக்கு றெக்சீன் சீலை அடிக்கும் வேலை வழங்கியுள்ளார். அதுதொடர்பில் அளவுகளை எடுக்க தனது பணியாளரை கடை உரிமையாளர் சுன்னாகத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்.

வேலை வழங்கியவரின வீட்டு முகவரி தெரியாமல் அந்த நபர் விசாரித்து அலைந்துள்ளரர். அதனால் சந்தேகம் கொண்ட ஊரவர்கள் அந்த நபரைப் பிடித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

அந்த நபர் ஐந்து சந்தியைச சேர்ந்தவர். அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டு விடுவிக்கபடுவார்" என்றுசுன்னாகம்பொலிஸார் தெரிவித்தனர். (ம-3)

# யாழ்.போதனாவுக்கு வருவோருக்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வரும் அனைத்து நோயாளர்கள் மற்றும் அவர்களின் உதவியாளர்கள் பொதுமக்கள் ஆகியோர் நாட்டில் நிலவும் அசாதாரண நிலையைக் கருத்தில் கொண்டு நோயாளர்களுக்கு தேவையான உணவு, உடை போன்றவற்றை சிறு பைகளில் (Bags) எடுத்து வருமாறும் பெரிய பைகள், பொதிகளை வைத்தியசாலை வளாகத்துக்குள் கொண்டு வருவதைத் தவிர்த்துக் கொளளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார். (ம)

# ஆசு மாரசிங்கவுக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

பர்தா அணிவதை தடை செய்ய வேண்டும் என நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம யோசனையைகொண்டு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஆசு மாரசிங்கவுக்கு தொலைபேசியில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இரண்டு தொலைபேசி அழைப்புக்கள் ஆசு மாரசிங்கவுக்கு கிடைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனிப்பட்ட பாதுகாப்பு குறித்து கவனத்தில் கொள்ளுமாறு ஒரு அழைப்பிலும் ஆபத்தை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு மற்றுமொரு அழைப்பிலும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் அமைப்பொன்றின் மூலம் முதல் தொலைபேசி அழைப்பு கிடைத்துள்ளதுடன் மற்றைய அழைப்பு அதிகாரிகளிடம் இருந்து கிடைத்துள்ளது.

இதனிடையே நேற்று முன்தினம் செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்திய நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர், முஸ்லிம் பெண்கள் அணியும் பர்தாவை தடை செய்ய வேண்டும் எனக் கூறியிருநதார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வவு.புதிய பேருந்து நிலையத்தில் கடும் சோதனை நடவடிக்கை

(குருமன்காடு)

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் பேருந்து நிலைய நுழைவாயிலில் சோதனையின் பின்னே பயணிகள் உள்நுழைய அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

நாட்டில் குண்டு வெடிப்பின் காரணமாக ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் வவுனியா பேருந்து நிலையத்தில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்துஇக்கடும்சோதனை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். (7-250)

# குண்டுத் தாக்குதலுக்கு பூஜித மீது மட்டும் குற்றம் சுமத்த முடியாது

## பொன்சேகா தெரிவிப்பு

பொலிஸ்மா அதிபர் பூஜித மீது மட்டும் குற்றம் சுமத்தப்பட முடியாது என முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தினத்தில் இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களுக்கு கடந்த 2010ஆம் ஆண்டு முதல் ஆட்சி செய்த அரசாங்கம் பொறுப்புச்சொல்ல வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் தீவிரவாதத் தாக்குதல் சம்பவங்கள் நீண்ட காலமாக திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனவே இரண்டு அரசாங்கங்களும் இந்த குண்டுத் தாக்குதல் சம்பவத்திற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொலிஸ்மா அதிபரை பணி நீக்குவதனால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

போரின் பின்னர் புலனாய்வுப் பிரிவினை வலுப்படுத்துவதற்கு தாம் கடுமையான முயற்சி மேற்கொண்ட போதும் அதற்கு இடமளிக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவிததார். (இ-7)

# சத்திய தரிசனம்

## பிறருக்காகப் பிரார்த்தியுங்கள்



❖ தெய்வ சிந்தனையுடன் தளராத நம்பிக்கையுடன், வேறுபாட்டு உணர்வை நீக்கி, அனைவரும் தெய்வத்தின் உருவங்களாக உணர்ந்து வாழுங்கள்.

❖ அன்பை வளர்த்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு உயிரை யும் கடவுளின் குழந்தை என கருதுங்கள். வெறுப்பை விட்டு, தீங்கு இழைக்காத நல்லுணர்வை வளருங்கள்.

❖ நல்ல எண்ணங்களை நினையுங்கள், நல்ல வார்த்தைகளைப் பேசுங்கள், நல்ல செய்கைகளில் ஈடுபடுங்கள், பிறருக்கு உதவுங்கள்.

❖ கடமையைக் கருத்துடன் செய்வது மனிதனின் பொறுப்பு. அதற்கு பலன் அருள்வது ஆண்டவனின் பொறுப்பு.

❖ பிரார்த்தனை உதட்டிலிருந்து வரக்கூடாது, நெஞ்சில்இருந்து வரவேண்டும். அதைத் தனக்காகச் செய்யக் கூடாது, பிறருக்காகச் செய்ய வேண்டும்.

❖ மேகங்கள் கலையும் வரை பொறுத்திருந்தால் தான் சூரிய ஒளியைக்காணமுடியும். அதுபோல் பொறுமையாகப் பிரார்த்தனை செய்தால் தான் இறையருள் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவெட்டி கபிராஜ் வெற்றிக்கிண்ண இறுதிப்போட்டிகள்









கரவெட்டி தில்லையம்பல பிள்ளையார் ஆலய பூசகர் திருவம்பலம் கபிராஜ் ஞாபகார்த்தமாக கபி ஞாபகார்த்த குழுவின் ஒருங்கிணைப்பாளர் ஜெ.துசாந்தன் தலைமையில் இடம்பெற்ற 21 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்ட போட்டி மாவட்ட மட்டத்திலும், கழகங்களுக்கு இடையிலான போட்டி வடமராட்சி கழகங்களுக்கிடையேயும் இடம் பெற்றன.

இவ் இறுதிப்போட்டிகள் இன்று 25 ஆம் திகதி மாலை 2.30 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மைதானத்தில் ஜெ.துசாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

21 வயதுப்பிரிவினருக்கான இறுதிப்போட்டியில் வதிரி சிறிமுருகன் அணியை எதிர்த்து அல்வாய் யூத் அணியும், கழகங்களுக்கு இடையேயான போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து வதிரி சிறிமுருகன் அணியும் மோதவுள்ளன.

நிகழ்வின் பிரதம விருந்தினராக சிவன் அறக்கட்டளை நிலைய நிறுவுநர் கணேஸ்வரன் வேலாயுதம், கௌரவ விருந்தினராக சமாதான நீதவானும் செம்பியன்பற்று றோ.க. த.க பாடசாலை அதிபருமான பா.உதயசேகர், சிறப்பு விருந்தினராக கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அதிபர் பொ.அரவிந்தன் மற்றும் சிவன் அறக் கட்டளை நிலைய இணைப்பாளர் க.சதீஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (க)

# வெண்கலப் பதக்கத்தை உயிரிழந்தவர்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன்

ஆசிய சம்பியன் போட்டியில் வென்ற வெண்கல பதக்கத்தை தன் நாட்டு மக்களுக்காக இலங்கையைச் சேர்ந்த வீராங்கனை விதுஷா லக்சானி சமர்ப்பித்துள்ளது பலரது பாராட்டுக்களை பெற்று வருகிறது.

இலங்கையில் அடுத்தடுத்து நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் 321 பேர் பரிதாபமாக பலியாகியுள்ளனர்.

தீவிரவாதிகள் நடத்திய இந்த கொலை வெறி தாக்குதலால் இலங்கை மக்கள் மிகுந்த சோகத்தில் உள்ளனர். இந்நிலையில் இலங்கையைச் சேர்ந்த விதுஷா லக்சானி கட்டாரில் டோகா பகுதியில் நடைபெற்று வரும் (Asian Athletics Championships 2019) போட்டியின் 2019 முப்பாய்ச்சல் போட்டியில் கலந்து கொண்டார்.

இதில் அவர் வெண்கலப் பதக்கம் வென்றார். அவர் இந்த பதக்கத்தை குண்டு வெடிப்பு சம்பவத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சமர்ப்பிக்கிறேன் என்று கூறியுள்ளார். (க)



# கே.சி.சி.சி.வெற்றிக் கிண்ணம் 2வது சுற்றில் ஸ்கந்தா ஸ்ரார்




கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்திற்காக கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகம் வருடா வருடம் நடத்தும் துடுப்பாட்ட தொடரில் 9 ஆவது போட்டி கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற போது ஸ்கந்தா ஸ்ரார் அணி ஹாட்லியைற்ஸ் அணியை 91 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தாஸ்ரார் அணி 29.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றது.

மிதுாஸன் - 30, சதீஸ்- 39, சிந்துஜன் - 30, அஜன்தன்- 11, தனுசன்- 16, சன்ஜெயன்- 22, டிலக்ஸன்- 25 , கோபிகன்- 25, ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் டிலக்ஸன்- 01, புருசோத்மன்- 04, பிரதீஸ்- 01., செயோன்- 02, சாகித்தியன்- 02 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹாட்லியைற்ஸ் அணி 20.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றது.

சாகித்தியன் - 11, பிரதீப்- 14, ராகவன் ஆட்டமிழக்காது- 16 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் தரணிதரன்- 01, தனுாஸன்- 02, சோபிகன்- 02, சிந்துஜன்- 02, சன்ஜெயன்- 01 இலக்கினைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு (RATING) ஸ்கந்தா ஸ்ரார் அணி- 7.09 புள்ளிகளையும் ஹாட்லியைற்ஸ் அணி 2.07 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது. (க)

# ஆறு விக்கெட்களால் வென்றது கிளிநொச்சி இந்துக் கல்லூரி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு மற்றும் கல்லூரியின் கடினப்பந்து கிரிக்கெட்டின் 75 ஆவது ஆண்டு நிறைவு ஆகியவற்றை கொண்டாடும் வகையில், வடமாகாண பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையில் ரி - 20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்று நடத்தப்படுகின்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும், இந்தச் சுற்றுப்போட்டியில் வடமாகாணத்தைச் சேர்ந்த 16 பாடசாலைகளின் துடுப்பாட்ட அணிகள் பங்குபற்றுகின்றன.

முதற்சுற்று தொடங்கி அனைத்து ஆட்டங்களும் நொக்கவுட் முறையில் இடம்பெறுகின்றன. இதில் கிளிநொச்சி இந்துக் கல்லூரிக்கும் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரிக்கும் இடையிலான ஆட்டம் இடம் பெற்றது.

**நாணயச் சுழற்சியில் வென்ற கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பில்** ஈடுபடத் தீர்மானித்தது. அதற்கிணங்க களமிறங்கிய முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி அணி, 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 115 ஓட்டங்களை எடுத்தது. துடுப்பாட்டத்தில் சுமன் 37, டிலக்ஸன் 22, அபிலாஸ் 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி சார்பாக, கவிந்தன், பேபிசன், தமிழினியன் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

116 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி, 11.3 ஓவர்களில் 4 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் கவிந்தன் 62 ஓட்டங்களையும், தமிழினியன் 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

**பந்துவீச்சில் வித்தியானந்தா சார்பாக சுமன், அபிலாஸ் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.** (சு-20)


# காலிறுதியில் டயமன்ஸ் அணி



லண்டன் வல்வை புளூஸ் நண்பர்களின் அனுசரணையுடன் வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான மாபெரும் உதைபந்தாட்ட போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

யங்கம்பன்ஸ் மைதானத்தில் நடைபெற்ற முதல் போட்டியான டயமன்ஸ் மற்றும் றேஞ்சர்ஸ் அணிகளிடையான போட்டியில் டயமன்ஸ்அணி 3:2என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாவது வெற்றியை பதிவு செய்தது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த 21ஆம் திகதி ஈஸ்டர் தினத்தன்று உயிர் நீத்த உறவுகளுக்கு அனலைதீவு பிரதேச வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களினால் நேற்றையதினம் அஞ்சலி செலுத்தப்பட்டது.



கடந்த 21ஆம் திகதி ஈஸ்டர் தினத்தன்று உயிர் நீத்த உறவுகளுக்கு இருபாலை கிழக்கு கிராம சக்தி மக்கள் சங்கத்தினரால் நேற்றைய தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

# அண்மையில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் 8 ஆண்டுகள் திட்டம், 300 பேர் தொடர்பு

## சரத்பொன்சேகா பகிர் தகவல்

(கொழும்பு)

அண்மையில் நடத்தப்பட்ட தொடர் தற்கொலை குண்டுத்தாக்குதல் சுமார் 8 ஆண்டுகள் வரை திட்டமிடப்பட்டிருக்கலாம். இதனுடன் 300 இற்கும் மேற்பட்டோர் தொடர்புபட்டிருக்கலாம் என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

நாமல் குமாரவின் உளவுத் தகவலுக்கு வழங்கப்பட்ட முன்னுரிமை கூட புலனாய்வுப் பிரிவால் வழங்கப்பட்ட எச்சரிக்கைக்கு வழங்கப்படவில்லை. பாதுகாப்பு பேரவைக் கூட்டத்துக்கு பிரதமர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஆகியோர் பல மாதங்களாக அழைக்கப்படவில்லை. இது தவறான விடயமாகும். இது குறித்து பிரதமர் பாராளுமன்றத்துக்கு அறிவித்திருக்க வேண்டும். ஆனால், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாதுகாப்பு பேரவைக் கூட்டத்தில் பங்கேற்றனர் என தெரிய வருகின்றது. இது நகைப்புக்குரிய விடயமாகும்.

குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று 48 மணிநேரத்துக்கு பின்னரே பிரதமரை சந்திப்பதற்கு எனக்கு அனுமதி கிடைத்தது. நான் பீல்ட்மார்ஷல் பதவியை வகிப்பவன். பாதுகாப்பு நிலைவரம் குறித்தும் நன்கறிந்தவன். என்னை பயன்படுத்தியிருக்கலாம். நாட்டுக்காக எதையாவது செய்யவே நானும் விரும்புகின்றேன். பதவி, பட்டங்கள் தேவையில்லை.

எனினும், கடந்தகாலங்களில் எனக்கு சட்டம், ஒழுங்கு அமைச்சு பதவிகூட வழங்கப்படவில்லை. அதற்காக கூறப்பட்ட காரணங்களும் நகைச்சுவையானவை. பிரதி பொலிஸ்மா அதிபர்களின் கோரிக்கைக்கு அமையவா சட்டம், ஒழுங்கு அமைச்சரை நியமிப்பது?

தாக்குதல் பற்றி மேலும் கருத்து வெளியிடலாம். ஆனால், பாதுகாப்பு குறித்து பேச இங்கு சில பண்டிதர்கள் இருக்கின்றனர். எனக்கான பாதுகாப்பும் குறைக்கப்பட்டுள்ளது என்றார். (ம-3)

# அரசாங்க உயர்மட்டத்தில் ஒத்துழைத்து செயற்பட வேண்டும்

## தேசிய சமாதான பேரவை வலியுறுத்தல்

(கொழும்பு)

அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் நிலவுகின்ற ஒத்துழையாமை குறித்து தாங்கள் அதிர்ச்சி அடைவதாக தேசிய சமாதான பேரவை தமது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களில் 300க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதுடன், 500 பேர் வரையில் காயமடைந்தனர்.

இவ்வாறான தாக்குதல் ஒன்று இடம்பெறவுள்ளமை குறித்த புலனாய்வுத் தகவல் முன்கூட்டியே கிடைக்கப்பெற்றும், சரியாக அதனை பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பது கவலையளிக்கின்ற விடயமாகும்.

அரசாங்கத்தின் உயர் மட்டத்தினர் மத்தியில் ஒத்துழைப்பு இன்மையை காணக்கூடியதாக இருக்கிறது.

இவ்வாறான சூழ்நிலையில் அரசாங்கத்தின் உயர்மட்டத் தரப்பினர் தேச நலன் கருதி, கண் கூடாக ஒத்துழைத்து செயற்பட வேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்தியுள்ளது. (ம-3)

### முப்படைகள் மற்றும் பொலிஸாரிடம்

# பாடசாலைகளில் பாதுகாப்பினை உறுதி செய்யக் கோரிக்கை

(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பாடசாலை வளாகம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பாதுகாப்பை வலுப்படுத்துமாறு முப்படைகள் மற்றும் பொலிஸாருக்கு கல்வி அமைச்சு எழுத்து மூல கோரிக்கையை முன்வைத்துள்ளது.

மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விப் பணியாளர்களின் பாதுகாப்பு தொடர்பில் கல்வி அமைச்சுக்கு பெரும் பொறுப்பு உண்டு. இதனால் அனைத்து பெற்றோர் மற்றும் முதியோர் தொடர்பில் கவனம் செலுத்தி பாதுகாப்பு வேலைத்திட்டத்தை அனைத்து தேசிய மற்றும் மாகாண பாடசாலை வளாகங்களிலும் அதனை அடுத்துள்ள பகுதிகளில் முறையான வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை இரண்டாம் தவணை பாடசாலை கல்வி நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு முன்னதாக நாட்டில் உள்ள தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளின் வளாகங்கள், அதனை அண்டியுள்ள பிரதேசங்களில் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இந்த நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் இது தொடர்பாக அனைத்து பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார்.

அத்துடன் அமைச்சரின் ஆலோசனைக்கு அமைய கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்கவினால் பாடசாலை வளவு மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசத்தில் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு படை அதிகாரிகளின் தலைமை அதிகாரி, முப்படையினர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-3)

# மர்ம மோட்டார் சைக்கிளை பொலிஸார் சுற்றிவளைப்பு

## பளைப் பகுதியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பளைப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான மோட்டார் சைக்கிள் தரித்து நின்றமை குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த பகுதியில் நேற்றுக் காலை முதல் இந்த மோட்டார் சைக்கிள் தரித்து நிற்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்து பளை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். நாட்டில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களைத் தொடர்ந்து நாடு முழுவதும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளதுடன், சந்தேகத்திற்கு இடமான பொருட்கள் குறித்தும் தீவிர சோதனைகள் இடம்பெற்றுவருகின்றன.

இந்நிலையில், கொழும்பின் வெள்ளவத்தை மற்றும் புறக்கோட்டை பகுதிகளில் நேற்று மோட்டார் சைக்கிள்கள் சந்தேகத்துக்கு இடமான முறையில் இருந்தமையைத் தொடர்ந்து அவை வெடிவைக்கப்பட்டு சோதனையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# கொடிகாமம் உணவகத்தில் பணியாளரின் பணப்பை திருட்டு

## சந்தேகத்தில் ஒருவர் கைது

(கொடிகாமம்)

கொடிகாமம் நகரப் பகுதியில் உள்ள உணவகத்தில் வேலை கேட்டு வந்த கம்பளையைச் சேர்ந்த இளைஞர் கடை அறையில் தங்கியிருந்த மற்றொரு பணியாளரின் பணப்பையை (மணிப் பேர்ஸ்) திருடிக் கொண்டு இரவோடிரவாக தலைமறைவானார்.

இந்த சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை கொடிகாமத்திலுள்ள உணவகத்தில் இடம்பெற்றது.

கம்பளையைச் சேர்ந்த இந்த இளைஞர் வேலை கேட்டு வந்ததாகவும் கடையுடன் இணைந்த அறையில் தங்க வைத்ததாகவும் மாலை 6.00 மணிக்கு பார்த்த போது இளைஞன் அங்கு இல்லாததால் தேடிப் பார்த்ததாகவும் அங்குள்ள அறையில் வைக்கப்பட்டிருந்த பணியாளர் ஒருவரின் சேட் பொக்கட்டில் வைக்கப்பட்டிருந்த பேர்ஸ்சும் அதற்குள் இரகசிய இலக்கத்துடன் வைக்கப்பட்டிருந்த ஏ.ரி.எம் அட்டையும் காணாமல் போயுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு ஜெய்னுல் ஆப்ரின்சப்ராஜ் மொகமட் வயது 31 என்னும் இளைஞரை பொலிசார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-114)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 24-04-2019
சீட்டிழுப்பு இலக்கம் 934
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 5 2 3 4 7 0
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 24/04/2019
சீட்டிழுப்பு இலக்கம் 371
வெற்றி எழுத்து S
சுப்பர் இலக்க 07
வெற்றி இலக்கங்கள் 04 13 40 68

கொவிசெத
திகதி 2019.04.24
சீட்டிழுப்பு இலக்கம் 2099
ஆங்கில எழுத்து N
வெல்லப்பட்ட இலக்கங்கள் 07 24 49 69
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2019-04-24
சீட்டிழுப்பு இலக்கம் 140
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 11 19 34 39
தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெடிகுண்டுகள்...

உள்நாட்டவர்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன், வெடிக்க வைக்கப்பட்ட குண்டுகள் அனைத்தும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. அவை வெல்லம்பிட்டியவில் உள்ள செப்புத் தொழிற்சாலை ஒன்றில் தயாரிக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலையின் உரிமையாளரும் தற்கொலைத் தாக்குதலை நடத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நேற்று வரை 60 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் குற்ற விசாரணைப் பிரிவு மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்கு உள்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார். (ம-3)

## அநுராதபுரத்தில்...

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்டுள்ள கைக்குண்டை செயலிழக்கச்செய்ய வெடிகுண்டு செயலிழக்க செய்யும் பிரிவினர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

## பாதுகாப்பு அமை...

பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்படுகிறார்.

தற்போதைய பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ, பதவி விலகலை ஜனாதிபதிக்கு வழங்கியுள்ள நிலையில் அந்த இடத்துக்கு ஜெனரல் தயா ரத்னாயக்க நியமிக்கப்படவுள்ளார் என்று நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

2013ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை இராணுவத் தளபதியாக அவர் கடமையாற்றினார். இராணுவத்தின் 20வது தளபதியாக ஜெனரல் தயா ரத்நாயக்க பதவி வகித்தார்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசு பதவிக்கு வந்ததும் சேவை நீடிப்பு வழங்கப்படாமல் ஏமாற்றத்துடன் இராணுவ சேவையிலிருந்து ஜெனரல் தயா ரத்னாயக்க ஓய்வு பெற்றார்.

இந்த நிலையில் அவரை பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக ஜனாதிபதி நியமிக்கவுள்ளார். (ம-3)

## ஜனாதிபதி மைத்...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார். இன்று முற்பகல் 10 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இந்த மாநாடு நடைபெறும்.

இதேநேரம் சர்வ சமய கூட்டம் ஒன்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இன்று பிற்பகல் 4 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (ம-3)

## மிகச்சிறந்த...

வகுப்பைச் சேர்ந்தவர்கள் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்த்தன தெரிவித்தார். பாராளுமன்றில் நேற்று இந்தத் தகவலை அவர் வெளியிட்டார் .

தற்கொலைத் தாக்குதல் நடத்திய 9 பேரும் தனிப்பட்ட வகையில் சிறந்த பொருளாதார வசதியோடு இருப்பவர்கள். அவர்களது குடும்பத்தினர் பொருளாதார ரீதியாக நிலையாக நல்ல நிலைமையில் உள்ளனர்.

தாக்குதல் நடத்திய தற்கொலைக் குண்டுதாரிகளில் ஒருவர் பிரிட்டனில் படித்தார். பின்னர் அவர் முதுகலை படிப்பை ஆஸ்திரேலியாவில் படித்து முடித்துவிட்டு இலங்கையில் நிரந்தரமாக குடியேறியதாக அறிகிறோம் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்த்தன தெரிவித்தார். (ம-3)

## சந்தேகத்திற்கிட...

செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தகவல் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான முறையில் மோட்டார் சைக்கிள் ஒன்று, நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக,பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நேற்று பிற்பகல் அந்த மோட்டார் சைக்கிள் வெடிக்கச் செய்யப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் வெடிக்கப்பட்டவுடன் அங்கு வந்த தீயணைப்புப் படை தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இதேவேளை, இதேபோன்று வெள்ளவத்தையிலும் சந்தேகத்துக்கு இடமான மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்றுக் காலை வெடிக்க வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் பொது இடத்தில் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்கள் அனைத்தும் இவ்வாறு வெடிக்க வைக்கப்படுமா என பொது மக்கள இடையே கேள்வி எழுந்துள்ளது. (ம-3)

## ஹோட்டல்களில்...

ஷங்கரி-ல மற்றும் சினமன் கிராண்ட் ஆகியவற்றில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்திய சகோதரர்களின் ஒளிப்படங்களை பிரிட்டன் நாளிதழ் டெய்லி மெயில் வெளியிட்டுள்ளது.

இம்ஷாப் இப்ராஹிம் மற்றும் இல்ஹாம் இப்ராஹிம் ஆகிய சகோதரர்களே இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர் என அவர்களது ஒளிப்படங்களுடன் டெய்லி மெயில் நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சகோதரர்களின் தற்கொலைத் தாக்குதலில் காலை உணவை உட்கொண்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## தேசிய தௌஹீத்...

இதன் காரணமாக தவிர்த்திருக்கப்பட வேண்டிய இந்த கொடூர தாக்குதலுக்கு அவரே பொறுப்பேற்க வேண்டும் எனவும் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த சம்பவத்தை அடுத்து அஞ்சலி செலுத்தும் வகையில் கூட்டமைப்பு சார்பாக வடக்கு மற்றும் கிழக்கில் ஒரு நாள் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

துரதிர்ஷ்டவசமாக, கிழக்கு மாகாண ஆளுநர் இதனை ஹர்த்தால் என்று அறிவித்தார். இது ஹர்த்தால் அல்ல என்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது என்றும் கூறினார்.

தொடர்ச்சியாக இந்த தவறான நடவடிக்கைகள் தொடர்பாக முஸ்லிம் மக்கள் முறைப்பாடுகளை மேற்கொண்டு வந்தார்கள் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

கடும்போக்காளராக மாற்றும் நடவடிக்கை தொடர்பாக அரசாங்கத்தின் புலனாய்வு பிரிவினரிடம் முஸ்லிம் குழுக்கள் பல ஆண்டுகளாக முறைப்பாட்டினை வழங்கி வந்தனர்.

2017 ஆம் ஆண்டு ஸஹ்ரானை கைது செய்ய வேண்டும் என கோரி காத்தான்குடியில் மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினையும் நடத்தியிருந்தார்கள்.

கபீர் ஹாஷிமின் துணிச்சலான செயற்பாட்டினை தான் பாராட்டுவதாகவும் அவர் சிறந்த முன்னுதாரணமாக செயற்பட்டுள்ளார் என்றும் கூறினார்.

கிழக்கு மாகாண ஆளுநர் பற்றியும் தேசிய தௌஹீத் ஜமாத்துடனான அவருடைய தொடர்புகள் பற்றியும் தற்போது பாரிய கேள்விகள் எழுகின்றன.

இதுபற்றியும் இந்த குழுவினர் ஏனைய அரசியல்வாதிகளுடன் வைத்திருந்த உறவுகள் மற்றும் பாதுகாப்பு தரப்பினருடன் வைத்திருந்த உறவுகள் பற்றியும் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (ம-3)

## இதுவரை 60...

32 பேர் குற்றப்புலனாய்வு பிரிவினரிடமும் 4 பேர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடமும் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் எஞ்சிய சந்தேக நபர்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (ம-3)

## யாழ் போதனா...

வருகின்றனர். பாதுகாப்பு அமைச்சிடமிருந்து வந்த தகவலின் அடிப்படையிலேயே இவ்வாறான சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் போது வைத்தியசாலை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் அனைத்தும் வைத்திய சாலை வளாகத்தில் இருந்து பொலிஸாரால் அப்புறப்படுத்தப்பட்டதுடன் வைத்திய சாலைக்கு வரும் நோயாளர்கள் முதல் பார்வையிட வருபவர்களது பொதிகள், ஆடைக்கு மேலாக அங்கிகள், தலைகவசங்கள் ஏதேனும் அணிந்திருந்தால் அவற்றையும் சோதனை செய்து வைத்திய சாலைக்குள் பொலிஸார் அனுமதித்து வருகின்றனர். (ம-3)

## ஆராதனை வழி...

மரியாள் தேவாலயத்திற்கே தற்கொலைக் குண்டுதாரி முதலில் சென்றுள்ளதாக கூறப்படுகின்றது. எனினும், அந்த தேவாலயத்தின் ஆராதனைகள் முடிவடைந்து விட்டதை, தற்கொலைக் குண்டுதாரி அங்கிருந்தோரிடம் விசாரித்து உறுதிப்படுத்திக் கொண்டதாக மட்டக்களப்பு பேராயர் ஜோசெப் பொன்னையா தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிறு அன்று புனித மரியாள் தேவாலயத்தில் காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்த ஆராதனைகள் காலை 7 மணிக்கே ஆரம்பித்தமை காரணமாக, காலை 8.30 அளவில் அனைத்து வழிபாடுகளும் நிறைவடைந்திருந்தாக தெரிவிக்கப்படுகின்றது. அந்த தற்கொலைக் குண்டுதாரி அதற்கு முதல் நாளன்றும் புனித மரியாள் தேவாலயப் பகுதியில் நடமாடியதாகவும் கூறப்படுகின்றது.

அன்றைய தினத்தில் புனித மரியாள் தேவாலயத்தில் சுமார் ஆயிரம் பேர் வழிபாட்டிற்காக குழுமியிருந்ததாகவும், ஆராதனைகள் 8.30 அளவில் முடிவுற்றமை காரணமாக அவர்களில் பெரும்பாலானோர் அங்கிருந்து சென்று விட்டதாகவும் கூறப்படுகின்றது. இந்த நிலையிலேயே, தற்கொலைக் குண்டுதாரி, அதற்கு அருகில் இருந்த சீயோன் தேவாலயத்தில் தாக்குதலை நடத்தியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-3)

## அவசரகால சட்ட...

இந்த விவாதம் நேற்று முற்பகல் 10.30 மணி முதல் மாலை 6 மணி வரை இடம் பெற்றது. அனைத்துக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களும் விவாதத்தில் பங்கேற்று உரையாற்றினர்.

நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பொலிஸாருக்கும் முப்படையினருக்கும் தேவையான அதிகாரத்தை வழங்குவதற்கான அவசரகால சட்டத்திற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது.

நாட்டில் அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்துவதன் ஊடாக பொதுமக்களின் பாதுகாப்பு, நாட்டின் அமைதியை பாதுகாத்தல், மக்கள் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான விடயங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றை பேணுவதற்காகவே இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க சட்டத்தினாலும், தேசிய அரச பேரவையின் 1978 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க சட்டத்தின் அடிப்படையில் இந்த உத்தரவை ஜனாதிபதி பிறப்பித்திருந்தார். (ம-3)

## பதவி விலகுகிறார் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர?



(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகிய இருவரும் தமது பதவிகளை விலகுவதற்கான அறிவிப்பை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உதிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களில் 359 பேர்வரை உயிரிழந்தனர். தாக்குதல்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலரும் பொலிஸ்மா அதிபரும் பொறுப்புக் கூறவேண்டும் என்று ஆளும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், பாதுகாப்பு அமைச்சின் செயலர் மற்றும் பொலிஸ்மா அதிபர் இருவரும் பதவி விலகல் கடிதத்தை வழங்கவேண்டும் என்று ஜனாதிபதியால் கோரப்பட்டதாகச் செய்திகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


### தவறிவிட்டது

யாழ். காக்கைதீவுக்கும் கொக்குவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் ஆள் அடையாள அட்டை (512945309V) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பேஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழுள்ள இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 667 9496 (C-6207)

### ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம் (8553)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்

### றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக் கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623 (8572)

### காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்) (8469)

### இத்தாலி மொழி வகுப்பு

இத்தாலி செல்வோருக்கான இத்தாலி மொழி எழுத, வாசிக்க, கதைக்க மிகக் குறுகிய காலத்தில் கற்றுக் கொடுக்கப்படும்.
Contact: 0761619826 (A.Sitra) (8568)

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

0768226240 V2 TRAVELS (C-6164)
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org